யாழ். - 20/=
வன்னி - 20/=

மேகமூட்டம்/ மழை
காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று km/h
ஈரப்பதம்: 48%
காற்றழுத்தம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04

# உதயன்

சுடர்: 29 கதிர்: 332 வள்ளுவர் ஆண்டு: 2045 ஐப்பசி 7, வெள்ளி 24.10.2014
stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily

24 OCT 2014



அவசரமான தேர்தலால் அதிரப் போவது யார்?
பக்கம் 12

# நீக்கப்பட்ட தடையால் பலம் பெறுவர் புலிகள்

## அதுகுறித்து விழிப்புடன் இருக்கின்றோம் என்கிறார் இராணுவப் பேச்சாளர் ருவான் வணிகசூரிய



யாழ்ப்பாணம், ஒக். 24
"தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் நீக்கியுள்ளன. அதைப் பயன்படுத்தி தம்மை பலப்படுத்திக் கொள்வதற்கான முயற்சியில் புலிகள் இறங்கக்கூடும். எனவே, இது குறித்து பாதுகாப்பு அமைச்சு விழிப்புடனேயே இருக்கின்றது." - இவ்வாறு நேற்றுத் தெரிவித்தார் பாதுகாப்பு ம்ற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் பணிப்பாளரும் இராணுவப் பேச்சாளருமான பிரிகேடியர் ருவான் வணிகசூரிய .

"புலிகளின் ஆயுத பலம் இலங்கையில் அழிக்கப்பட்டாலும், பிரிவினைவாதக் கொள்கையுடையவர்கள் இலங்கையிலும் அதற்கு வெளியிலும் இருக்கத்தான் செய்கின்றனர். எனவே, நாம் மிகவும் உன்னிப்பாக விடயங்களை அவதானிக்க வேண்டியுள்ளது."- என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சில் நேற்று முற்பகல் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில்

22 ஆம் பக்கம் பார்க்க


## அபிவிருத்தியால் மட்டும் மகிழ்ச்சி ஏற்பட்டு விடாது

### சமய மற்றும் சிவில் சமூகத்தினர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஒக். 23
அபிவிருத்திகளால் மக்கள் மனங்களில் மகிழ்ச்சியை ஏற்படுத்த முடியாது. இங்குள்ள மக்களுடைய மனங்களில் மகிழ்ச்சியை ஏற்படுத்தக் கூடிய காரியங்களையே செய்ய வேண்டும். அதற்கு உலகின் அனைத்துப் பெரியார்களும் முயற்சிக்க வேண்டும் - இவ்வாறு வடக்குக்குப் பயணம் மேற்கொண்ட சர்வ

22 ஆம் பக்கம் பார்க்க

## '2015' பட்ஜெட் இன்று சமர்ப்பிப்பு



கொழும்பு, ஒக்.24
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டணி அரசு அடுத்த நிதி யாண்டுக்கான தனது வரவு- செலவுத் திட்டத்தை இன்று நாடாளுமன்றில் சமர்ப்பிக்கவுள்ளது. நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இதை பிற்பகல் 1.30 மணிக்கு சபையில் சமர்ப்பித்து உரையாற்றுவார். ஜனாதிபதித் தேர்தல் நெருங்குவதால், மக்களைக் கவர்ந்திழுக்கும் வகையில் வானவில் கனவுகள் தரும் வரவு- செலவுத் திட்டத்தையே அவர் சமர்ப்பிப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையிலான அரசின் இந்த பத்தாவது வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் கட்ட வாசிப்பின் மீதான விவாதம் நாளை தொடக்கம் நவம்பர் மாதம் முதலாம் திகதிவரை நடைபெற்று அன்றைய தினம் மாலை 5 மணிக்கு வாக்கெடுப்புக்கு விடப்படும்.

இம்முறை வரவு - செலவுத் திட்டத் தின் இரண்டாம் கட்ட வாசிப்பின் மீதான விவாதத்துக்கு ஏழு நாள்கள் ஒதுக்கப்பட்டுள்ளமை விசேட அம்ச மாகும்.

மூன்றாம் கட்ட வாசிப்பின் மீதான குழு நிலை விவாதம் நவம்பர் மாதம் 3ஆம் திகதி தொடக்கம் 24ஆம் திகதிவரையான 17 நாள்களுக்குத் தொடர்ந்து நடைபெற்று 24ஆம் திகதி மாலை 5 மணிக்கு வாக்கெடுப்புக்கு விடப்படும்.

கடந்த ஒன்பது வருட காலமாக பதவியிலிருக்கும் ஜனாதிபதி தனக்கிருக்கும் ஆதரவில் ஏற்பட்டிருக்கக் கூடிய எந்த வொரு சரிவு நிலையை யும் சரிக்கட்டும் எதிர்பார்ப்பை நோக்கியதாக இந்த வரவு செலவுத் திட்டம் அமையும் என ரொய்ட்ஸ் செய்திச்சேவை தெரிவித்துள்ளது.

நிதி அமைச்சராகவும் விளங்கும் 68 வயதுடைய ஜனாதிபதி மஹிந்த ராஜ

22 ஆம் பக்கம் பார்க்க

## பாப்பரசரின் வருகையை வத்திக்கானே தீர்மானிக்கும்

கொழும்பு, ஒக்.24
இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ள பாப்பரசர் பிரான்ஸிஸின் பயணம் குறித்த முடிவை வத்திக்கானே தீர்மானிக்கும் என்று தெரிவித்துள்ளார் திருகோணமலை மறை மாவட்ட ஆயர் கிங்ஸிலி சுவாம்பிள்ளை.



விரிவான தகவல் 02 ஆம் பக்கத்தில்

## இலங்கை விசாரணைகள் தொடர்பில் ஐ.நாவில் அறிக்கையிட்டார் ஹுசைன்

யாழ்ப்பாணம், ஒக். 24
இலங்கைக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற சர்வதேச விசாரணை தொடர்பிலான அறிக்கையொன்றை, ஐ.நா. பொதுச் சபைக்கு, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல்ஹுசைன் சமர்ப்பித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம், முன்னைய ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் கீழ் கடந்த ஒருவருட காலப்பகுதியில் இலங்கை தொடர்பில் மேற்கொண்ட விசாரணைகள் தொடர்பிலேயே தனது அறிக்கையை தற்போதைய ஆணையாளர் சயிட் அல்ஹுசைன் சமர்ப்பித்துள்ளார்.

குறிப்பிட்ட காலப் பகுதியில் ஆணைக்குழு மூன்று நாடுகள் குறித்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளது. சிரியா, மத்திய ஆபிரிக்க

19 ஆம் பக்கம் பார்க்க

## அரசுக்கு மிக வேண்டப்பட்டவராக இன்று இருக்கின்றார் பிரபாகரன்

### அவர் பெயரை அதிகம் உச்சரிப்பது அவர்களே. ஜ.ம.மு. தலைவர் மனோ கணேசன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 24
"தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், ஜனாதிபதி மஹிந்த தலைமையிலான அரசுக்கு இன்று மிகவும் வேண்டப்பட்ட ஒருவராக இருக்கின்றார். அதனால் இந்த அரசின் ஆள்கள் அவ

22 ஆம் பக்கம் பார்க்க



## புலித் தடை நீக்கத்தை எதிர்த்து கையெழுத்து

கொழும்பு, ஒக்.24
ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத்தால் புலிகள் தடை தொடர்பில் வழங்கப்பட்டுள்ள தீர்ப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் கையெழுத்துகளைப் பெறும் திட்டம் நேற்று வெள்ளவத்தையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதன் முதற்கட்டம் அமைச்சர் சி.பி.ரத்நாயக்க தலைமையில் நேற்றுக்காலை ஆரம்பமாகியுள்ளது. இந்தத் திட்டம் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படவுள்ளது என்று தெரிவித்த அமைச்சர், "மீட்டெடுத்த இந்த சுதந்

22 ஆம் பக்கம் பார்க்க

## பொறாமை கொண்டோரின் போலியான குற்றச்சாட்டு

### மனம் புளுங்குகின்றார் இராணுவப் பேச்சாளர்

யாழ்ப்பாணம், ஒக். 24
தீபாவளி வாழ்த்துத் தெரிவிக்கும் சாக்கில் இராணுவம் தகவல் திரட்டினர் என்று வெளியான தகவலை மறுத்துள்ள இராணுவப் பேச்சாளர், அது



22 ஆம் பக்கம் பார்க்க

## யார் ஜனாதிபதியாகத் தெரிவானாலும் தமிழரின் பிரச்சினைகள் தீர வேண்டும்

### எங்களுடைய நிலைப்பாடு அதுவே என்கிறார் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன்

யாழ்ப்பாணம், ஒக். 24
ஜனாதிபதிப் பதவியில் ஆள் மாற்றம் ஏற்படுவதால் மாத்திரம் எமக்கு எந்தத் தீர்வும் கிடைக்கப் போவதில்லை. எமது பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் - இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன என்று கேட்ட பொழுதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் ஆளை மாற்றுவதால் எங்கள் பிரச்சினை தீரப்போவதில்லை. இது தொடர்பில் நாம் கவனமாக ஆராய்ந்து வருகின்றோம். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதித் தேர்தலில் மூன்றாவது தடவையாகவும் போட்டியிட முடியாது என்பதுதான் எமது நிலைப்

22 ஆம் பக்கம் பார்க்க

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பாப்பரசருடைய பயணத்தை வத்திக்கானே தீர்மானிக்கும்

## திருகோணமலை மறை மாவட்ட ஆயர் தெரிவிப்பு

திருகோணமலை, ஒக்.24
பாப்பரசர் பிரான்சிஸ்ஸின் இலங்கைக்கான பயணம் குறித்த இறுதி முடிவை வத்திக்கானில் இருந்து சில தினங்களில் இலங்கை வரவுள்ள குழு ஒன்றே எடுக்கும் என்று தெரிவித்துள்ளார் திருகோணமலை மறை மாவட்ட ஆயர் கிங்ஸிலி சுவாம்பிள்ளை.
பாப்பரசர் எதிர்வரும் ஜனவரி மாதத்தில் இலங்கைக்குப் பயணம் செய்ய திட்டமிடப்பட்டுள்ள நிலையில், அதே கால கட்டத்தில் அங்கு ஜனாதிபதி தேர்தல் நடப்பதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன என்றும் தகவல் வெளியாகியுள்ளன.
இந்த நிலையில், இந்த இரு நிகழ்வுகளும் ஒரே காலத்தில் நடப்பது உசிதமாக இருக்காது என்று பல தரப்பினராலும் கருத்துக்கள் கூறப்பட்டுள்ளது என்று கூறிய திருகோணமலை மறைமாவட்ட ஆயர் கிங்ஸிலி சுவாம்பிள்ளை, அதனால் இது குறித்து ஆராய வத்திக்கானில் இருந்து ஒரு குழு சில தினங்களில் இலங்கை வரவுள்ளது என்றும் தெரிவித்தார்.
இலங்கை வரும் குழுவினர், அங்குள்ள சகல தரப்பினருடனும் ஆராய்ந்து அதன் பின்னரே பாப்பரசரின் பயணம் குறித்த இறுதி முடிவை எடுப்பார்கள் என்றும் அவர் கூறினார்.
இந்த விடயம் தொடர்பில் பிபிஸி செய்திச் சேவைக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ற-5)

### கந்தபுராண ஆன்மீக அருளுரை

யாழ்ப்பாணம், ஒக். 24
சின்மயாமிஷன் ஏற்பாட்டில் கந்தசஷ்டியை முன்னிட்டு இன்று தொடக்கம் எதிர்வரும் புதன்கிழமை வரை தினமும் மாலை 3.30 மணி முதல் 4.30 மணி வரை நல்லூர் கந்தசுவாமி ஆலய வடக்கு வீதியில் உள்ள மகேஸ்வரன் மணிமண்டபத்தில் கந்தபுராண ஆன்மீக அருளுரை நடத்தப்படவுள்ளது.
யாழ்ப்பாண வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யாவால் அருளுரை நடத்தப்படவுள்ளது. சின்மயா மிஷனின் இசைப்பிரிவான சின்மயஸ்வராஞ்சலியால் முருகன் வெளிவீதியுலா வருகையில் பஜனையும் நடத்தப்படவுள்ளது. (ற-5)

# வாக்குறுதி வழங்கப்பட்டும் வழக்கு தொடரப்படாதது ஏன்?

## சட்டமா அதிபரிடம் விளக்கம் கோருகிறது நீதிமன்றம்

கொழும்பு, ஒக்.24
தமிழ் அரசியல் கைதியொருவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது என்று அறிவித்து ஒரு வருடம் கடந்துள்ள போதிலும், இதுவரை வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை என சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடொன்றை விசாரித்த உயர் நீதிமன்றம் இது சம்பந்தமாக விளக்கமளிக்குமாறு சட்ட மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளது.
யாழ் சங்கானை பகுதியில் வசிக்கும் புருஷோத்தமன் அரவிந்தன் எனும் கைதி தாக்கல் செய்த முறைப்பாட்டை ஆராய்ந்த பின்னரே நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்தது.
தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபருக்கு எதிராக வவுனியா மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று அரச தரப்பு வழக்கறிஞர் கடந்த 2013 ஆண்டு செப்ரெம்பர் மாதம் 12ஆம் திகதி உயர்நீதிமன்றத்திற்கு அறிவித்திருந்தார்.
ஆயினும் இதுவரை சந்தேக நபருக்கு எதிராக எந்த விதமான வழக்கும் வவுனியா நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்று உச்சநீதிமன்றத்தில் முறைப்பாடொன்றை மனுதாரர் சார்பில் முன்னிலையான வழக்கறிஞர் சமர்ப்பித்துள்ளார்.
சந்தேகநபர் ஒரு வருடத்துக்கும் மேலாக வழக்கு விசாரணையின்றி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.
இந்த குற்றச்சாட்டை பதிவு செய்துக்கொண்ட நீதிமன்றம் இது சம்பந்தமாக எதிர் வரும் நவம்பர் மாதம் 21 ம் திகதி நீதிமன்றத்தில் விளக்கமளிக்குமாறு அரச தரப்பு வழக்கறிஞருக்கு உத்தரவிட்டுள்ளது. (ற)

## விபத்துகள்

வவுனியா
### இடி தாக்கி ஒருவர் காயம்

வவுனியா, நெடுங்கேணி, நைனாமடு பகுதியில் கடந்த திங்கட்கிழமை மாலை இடம்பெற்ற இடி, மின்னல் தாக்கம் காரணமாக ஒருவர் காயமடைந்துள்ளதுடன் அவரது வீடும் சேதமடைந்துள்ளது என்று வவுனியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பணிப்பாளர் ரி.என்.சூரிய ராஜா தெரிவித்துள்ளார். (ற-402)

### மோ.சைக்கிள் விபத்தில் பெண் காயம்

வவுனியா மணிக்கூட்டு கோபுரச் சந்தியில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் காயமடைந்துள்ளார்.
சிதம்பரபுரம் பகுதியிலிருந்து தனியார் பஸ் ஒன்று பயணிகளை ஏற்றிக்கொண்டு வந்து திரும்பிய போது கண்டி வீதியூடாக மோட்டார் சைக்கிளில் வந்த பெண் குறுக்காகச் சென்றதை அடுத்தே வீதி விபத்து ஏற்பட்டுள்ளது. அதில் மோட்டார் சைக்கிளின் பின்னால் இருந்த பெண் காயமடைந்தார். இதனையடுத்து அவர் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். தனியார் பஸ் சாரதியை பொலிஸார் விசாரணைக்கு உட்படுத்தினர். (ற-402)

புத்தளம்
### வாகன விபத்தில் இருவர் சாவு

புத்தளம், பாலாவி பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் இருவர் காயமடைந்துள்ளனர். சிறிய ரக லொறியொன்று, மற்றுமொரு லொறியுடன் நேருக்கு நேர் மோதி இந்த இடர் ஏற்பட்டுள்ளது. காயமடைந்தவர்கள் புத்தளம் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை புத்தளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற)

### கல்பிட்டி விமானப் படை முகாமில் வெடி விபத்து

கொழும்பு, ஒக்.24
கல்பிட்டி அருகே உள்ள விமானப் படை முகாமொன்றில் நேற்று வெடி விபத்து ஒன்று இடம்பெற்றுள்ளது. கல்பிட்டி கந்தல்காடு பகுதியில் அமைந்துள்ள விமானப்படை முகாமிலேயே குறித்த வெடிவிபத்து இடம்பெற்றுள்ளது.
இந்த வெடிவிபத்தில் உடல் கருகிய நிலையில் காயமுற்ற மூன்று விமானப்படையினர் தற்போது கல்பிட்டி மற்றும் புத்தளம் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் காயமடைந்தவர்களின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.
வெடிவிபத்து நடைபெற்ற இடத்தைச் சுற்றிலும் இராணுவம் மற்றும் பொலிஸாரால் பாதுகாப்பு வளையம் ஏற்படுத்தப்பட்டுள்ளதால், சம்பவம் குறித்த மேலதிக விவரங்களை அறிய முடியாதுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)





தற்போது யாழ்ப்பாணத்தில் பெய்து வரும் மழையால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிப்படைந்துள்ளது. அத்துடன் வீதிகளில் தேங்கி நிற்கும் வெள்ளம் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்துகின்றது. சீரற்ற வடிகாலமைப்புகளே இதற்குப் பிரதான காரணமாக உள்ளன. (ற—21)






# உதயன்

விலை ரூபா 20/-

கிளாசிக்

சுடர் : 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஐப்பசி 7 வெள்ளி (24.10.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 332


# ஐ.நாவுக்கு சாட்சியங்களை வழங்குகிறது கூட்டமைப்பு

## இலங்கைக்கு எதிரான விசாரணைகள் குறித்து சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 24

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற இலங்கைக்கு எதிரான சர்வதேச விசாரணைக்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சாட்சியங்களை உரியமுறைப்படி வழங்கி வருவதாக அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் 'உதயனுக்குத்' தெரிவித்தார்.**



ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற விசாரணைகள் எதிர்வரும் 31 ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளன. இதற்கு முன்னர் சாட்சியங்கள் வழங்கப்படவேண்டும். நாம் சாட்சிகளை உரியமுறைப்படி ஐ.நா. விசாரணைக் குழுவிடம் சேர்ப்பிக்கின்றோம். இருப்பினும் இங்கிருந்தே படிவங்கள் ஊடாக நிரப்பிச் சில சாட்சியங்கள் அனுப்பப்படுகின்றன. அவற்றை விசாரணைக் குழுவினர் சாட்சியங்களாக எடுத்துக் கொள்ளமாட்டார்கள்.

தற்போது இடம்பெற்றுக் கொண்டிருக்கின்ற விசாரணையின் முடிவு வெளிவரும் வரை தமிழ் அரசியல் நிறுவனங்களோ அல்லது வடக்கு மாகாண சபையோ அதனைப் பற்றி பேசாமல் இருப்பது நல்லது. இங்கு போர் நடந்தது. அதில் நாம் பாதிக்கப்பட்டோம் என்பது எமக்குத் தெரியும். ஆனால் இங்கு எதுவும் நடக்கவில்லை என்று இலங்கை அரசு சொல்கின்றது. எனவே தான் நாம் சுயாதீன - சர்வதேச விசாரணையைக் கோரினோம்.

அது தற்போது நடந்துகொண்டிருக்கின்றது. இதன்போது நாம் விசாரணையின் முடிவு

(22ஆம் பக்கம் பார்க்க)

## பாடசாலையின் ஆய்வு கூடம் மீது கல் வீசித் தாக்குதல்

வவுனியா, ஒக். 24

வவுனியா மூன்று முறிப்புப் பாடசாலை ஆய்வு கூடத்தை இனம்தெரியாதோர் கல் வீசிச் சேதப்படுத்தியதாக அந்தப் பாடசாலையின் அதிபர் க.பொன்னம்பலம் கூறியுள்ளார்.

"தீபாவளி தினத்தன்று இரவு இனம்தெரியாதோர் பாடசாலையின் ஆய்வு கூடத்தைக் கல் வீசிச் சேதப்படுத்தியுள்ளனர். இதனை நான் நேற்று பாடசாலையை வந்து பார்த்தபோது கண்டேன். பாடசாலையின் வேலிகள் பாதுகாப்பற்றவையாக உள்ளமையால் பாடசாலைக்குள் இரவு இனம்தெரியாதோர் நுழைந்துள்ளதை அயலவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். இந்தப் பாடசாலையில் உளவியல் அறை கடந்த வருடம் தீக்கிரை

(22ஆம் பக்கம் பார்க்க)

## அத்துமீறும் தமிழக மீனவர்களுக்கு கடற்றொழில் விதிப்படி தண்டனை

### கடற்றொழில் சங்கத் தலைவர்கள் சட்டமா அதிபருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், ஒக். 24

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறிப் பிரவேசிக்கும் தமிழக மீனவர்களுக்கு எதிராகக் கடற்றொழில் சட்ட விதிகளைப் பயன்படுத்தித் தண்டனை வழங்குமாறு யாழ்.மாவட்ட மற்றும் மன்னார் மாவட்ட கடற்றொழில் சங்கத் தலைவர்கள், சட்டமா அதிபருக்குக் கடிதம் எழுதியுள்ளனர்.

யாழ். மாவட்ட கடற்றொழில் சங்க சமாசங்களின் தலைவர் எமிலியாம்பிள்ளை, மன்னார் மாவட்ட கடற்றொழில் சங்க சமாசங்களின் தலைவர் என்.எம்.எம்.ஆலம், ஆகிய இருவருமே வடபகுதிக் கடற்றொழிலாளர்களின் சார்பில் இந்தக் கடிதத்தைத் தமது சட்டத்தரணி உபேந்திர குணசேகர ஊடாகச் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

அதில், இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறிப் பிரவேசிக்கும், இந்திய மீனவர்கள் தற்போது குடிவரவு - குடியகல்வுச் சட்டத்தின் கீழேயே கைது செய்யப்படுகின்றனர். ஆனால் சர்வதேச கடல் எல்லையைக் கடந்து வந்து மீன்பிடிக்கின்ற வெளிநாட்டவர்களைத் தடுப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ள கடற்றொழில் சட்டத்தின் கீழ் அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கடற்றொழில் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுகின்ற மீனவர்கள் விடுதலை செய்யப்படுகின்றபோதிலும், அவர்கள் பயன்படுத்துகின்ற படகுகளின் உரிமையாளர் இருந்தால், அவரை அல்லது அந்த படகுக்குப் பொறுப்பாக வருகின்ற ஒருவரைக் கைதுசெய்து தடுத்து வைத்து அவருக்குத்

(22ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி விபத்தில் குழந்தை சாவு

கிளிநொச்சி, ஒக். 24

கிளிநொச்சிப் பகுதியில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற விபத்தில் இரண்டரை வயதுப் பாலகன் ஒருவர் உயிரிழந்தார். வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளில்

(22ஆம் பக்கம் பார்க்க)

## புறாக்கள் திருடியவனை காட்டிக் கொடுத்தது நாய்

யாழ்ப்பாணம், ஒக். 24

நள்ளிரவு நேரம் வீடு புகுந்து புறாக்களைத் திருடியவன் வீட்டு நாய் குரைத்ததால் மாட்டிக் கொண்டான். அவனை எதிர்வரும் 31 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

வடமராட்சி, துன்னாலை தாமரைக்குளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றுக்குள் நேற்றுமுன்தினம் நள்ளிரவு சென்ற துன்னாலையைச் சேர்ந்த ஒருவர் அங்குள்ள சுமார் 8 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒரு சோடி புறாக்களைத் திருடியுள்ளார். இதன் போதே வீட்டு நாய் குரைத்

(22ஆம் பக்கம் பார்க்க)

## 'ஆவா' க்குப் பிணை

யாழ்ப்பாணம், ஒக். 24

பல்வேறு இடங்களில் இடம்பெற்ற கொள்ளை, திருட்டு உள்ளிட்ட சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஆவா குறூப்பின் தலைவர் என்று கூறப்படும் நபர் யாழ்.மேல் நீதிமன்றினால் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இரண்டு கைக்குண்டுகள் மற்றும் வாள்கள் என்பவற்றைத் தம் உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 12 பேர் கைது செய்யப்பட்டு அவர்களில் ஆவா என்பவர் தொடர்ந்து விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

யாழ்.மேல் நீதிமன்றில் நீதிபதி அ.பிரேமசங்கர் முன்

(22ஆம் பக்கம் பார்க்க)

## நால்வர் அடங்கிய குழுவுடன் நாளை டில்லி பறக்கிறார் கடற்படைத் தளபதி

### முக்கிய பிரமுகர்களுடன் பேச்சு நடத்தவும் ஏற்பாடு

கொழும்பு, ஒக். 24

இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ஜயந்த பெரேரா, ஐந்து நாள்கள் பயணம் மேற்கொண்டு நாளை இந்தியாவுக்குச் செல்கின்றார்.

இந்திய கடற்படைத் தளபதி உட்பட பல பிரமுகர்களை இந்த பயணத்தின் போது அவர் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார் என்றும், இந்திய அரசின் அழைப்பின் பேரிலேயே அவரின் பயணம் அமைந்துள்ளது என்றும் கடற்படை தெரிவித்துள்ளது.

தென்னிந்தியாவின் எதிர்ப்புக் காரணமாக கடற்படைத் தளபதியின் பயணம் ஒத்திவைக்கப்பட்டதாக வெளியாகும் தகவல்களில் எவ்வித உண்மையும் இல்லை என்று கடற்படை பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுல சூரிய நேற்று தெரிவித்தார்.

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சில் நேற்று முற்பகல் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். நால்வர் அடங்கிய கடற்படைக் குழு வொன்றே இவ்வாறு இந்தியா புறப்படவுள்ளது. (த-சி

## 9 பிரதேச செயலாளர் பிரிவுகளில் கிராமத்துக்கு 1 மில்லியன் திட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 24

கிராமத்துக்கு ஒரு மில்லியன் வேலைத் திட்டம் யாழ். மாவட்டத்தில் 9 பிரதேச செயலாளர் பிரிவுகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

கிராமத்துக்கு ஒரு மில்லியன் வேலைத் திட்டம் வடக்கு - கிழக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் கடந்த 8 வருடங்களாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. வடக்கு மாகாணத்துக்கு இந்த ஆண்டே இந்தத் திட்டம் முதன் முறையாக அறிமுகப்படுத்தப்பட்டது.

வடக்கில், யாழ். மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் இந்தத் திட்டம் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. யாழ்.மாவட்டத்தில் 435 கிராம சேவையாளர் பிரிவுகள் உள்ளபோதும் 247 மில்லியன் ரூபா மாத்திரமே ஒதுக்கப்பட்டிருந்தது. அத்துடன் கிராமம் ஒவ்வொன்றுக்கும், ஒரு மில்லியன் ஒதுக்கப்பட்டால் அதில் மூன்றரை வீதம் மாத்திரமே வாழ்வாதாரச் செயற்பாடுகளுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்று சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று கிராமத்தின் சகல அரசியல் தலைவர்களையும் உள்ளடக்கியே வேலைத் திட்டங்கள் இனங்காணப்படவேண்டும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் யாழ். மாவட்டத்தில் கொழும்பு அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சரின் கட்சி மாத்திரமே திட்டங்களை இனங்கண்டதுடன், கிராமத்துக்கு ஒதுக்கப்பட்ட பணத்தில் பெரும்

(22ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் இயக்கத்தை உடைத்தவர் ரணிலே

### மார்தட்டுகிறது ஐ.தே.க.

கொழும்பு, ஒக். 24

புலிகள் அமைப்பை ரணில் விக்கிரமசிங்க நன்கு திட்டமிட்டு உடைத்திருக்காவிட்டால் மஹிந்தவால் பிரபாகரனை நெருங்கியிருக்கக் கூட முடியாது என ஐ.தே.க வின் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி ஜயவிக்கிரம பெரேரா தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற அணுசக்தி தொடர்பான விவாதத்தில் உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர், மேலும் தெரிவித்தவை வருமாறு,

மஹிந்தவைப் பார்த்து புலிகள் பயப்படவில்லை. ரணிலைப் பார்த்துத்தான் பயந்தார்கள். அதனால்தான் ரணிலை பிரபாகரன் குள்ளநரி என்று கூறினார்.

ரணில் புலிகளுடன் யுத்தம் செய்தும் அஹிம்சை வழியிலும் அவர்களை அழிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டார். புலிகளின் தலையாகக் கருதப்பட்ட கருணா அம்மானை புலிகள் அமைப்பிலிருந்து உடைத் தெடுத்தார். இதே

(22ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சிறுவர் முதியோர் தினவிழா

யாழ்.மாவட்ட சமூக அபிவிருத்தி மன்றத்தால் சிறுவர் முதியோர் தினவிழா நாளை சனிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலை மண்டபத்தில் நிறுவனத் தலைவர் ஆ.ருக்மணி தலைமை யில் நடத்தப்படவுள்ளது.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யு.என்.டி.பி நிறுவன நிகழ்ச்சித்திட்டப் பொறுப்பாளர் இ.சர் வானந்தா கலந்து கொள்வார். சிறப்பு விருந்தி னராக கோப்பாய் பிரதேச செயலக சமூக சேவை கள் உத்தியோகத்தர் மு.விஜயகுமாரி கலந்து கொள்வார். (வ-ரி)

## சைக்கிள்கள் வழங்க மாணவர் விவரம் திரட்டல்

சைவப்புலவர் கு.வி. மகாலிங்கம் நினைவாக தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கற்கும் சைக்கிள் இல்லாததால் கால் நடையாக பாடசாலைக்குச் சென்றுவரும் 100 மாணவர் களுக்கு சைக்கிள்கள் வழங்குவதற்கு பாட சாலை அதிபர்களிடமிருந்து விவரங்கள் கோரப் பட்டுள்ளன.

வறுமை நிலை காரணமாக பாடசாலைக்கு நடந்து வரும் மாணவர்களின் விவரங்களை இணைப்பாளர் கு.வி. மகாலிங்கம் அறக்கட் டளை நிதியம், சாவகச்சேரி என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

**வீடு வாடகைக்கு உண்டு**

நல்லூர் நாயன்மார் வீதியில்
வீடு வாடகைக்கு உண்டு. (53440) (7.6.3)
தொடர்பு: நா. ஸ்ரீ காந்தன் 075 498 5692

## கந்தசஷ்டி விரதம்

வல்வெட்டித்துறை தீருவில் வயலூர் முருகன் ஆலயத்தில் கந்தசஷ்டி விரதத்தையொட்டி சிறப்பு தொடர் சொற்பொழிவு இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் செவ்வாய்க் கிழமை வரை தினமும் மாலை 4.45மணிக்கு இடம்பெறும். விரதங் களும் அதன் மகிமைகளும் என்ற தலைப்பில் பண்டிதர் செல்வப்புலவர் இந்தத் தொடர் சொற் பொழிவை ஆற்றுவார். (வ-173)

◆◆◆

நீர்வேலி செல்லக் கதிர்காம ஆலயத்தில் கந்த சஷ்டி விழா இன்று வெள்ளிக்கிழமை ஆரம்ப மாகிறது. (வ)

◆◆◆

கந்தசஷ்டி விரத உற்சவத்தை ஒட்டி விரத உற்சவ தினங் களான இன்று வெள்ளிக் கிழமை தொடக் கம் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை தினமும் மாலை 7 மணிக்கு சந்நிதியான் ஆச் சிரம மண்டபத்தில் கந்தன்கருணை என்றதலைப் பில் விரிவுரையாளர் இரா.செல்வவடிவேல் சொற்பொழிவும் நிகழ்த்துவார். (வ-173)

## மாணவருக்கு உதவி

சாவகச்சேரி நகர் பகுதி வர்த்தகரான அமரர் கார்த் திகேசு சுப்பிரமணியத்தின் 10 ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அன்னாரது குடும்பத்தினர் மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு காலணிகளையும் வித்தியா லயத்துக்கு 3 சுவர் கடிகாரங்களையும் வழங் கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## நடமாடும் நூலகக் கண்காட்சி

தென்மராட்சி, ஒக்.24

சாவகச்சேரி பொது நூலகத் தினர், தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவ கச்சேரி நகர்ப் பகுதியில் உள்ள இரு முன்பள் ளிகளில் இன்று நடமாடும் நூலக கண்காட்சியை நடத்து வதுடன் சிறார்களுக்கு போட் டியையும் நடத்தவுள்ளனர். சாவகச்சேரி தென்னிந்திய திருச்சபையின் முன்பள்ளி, சிலோன் - அமெரிக்க மிசன் திருச்சபை முன்பள்ளி ஆகிய வற்றிலேயே நடமாடும் புத் தகக் கண்காட்சியையும் சிறார்களுக்கான வர்ணம் தீட்டும் போட்டியையும் நடத்த வுள்ளதாக நகரசபை தலைவர் இ. தேவசகாயம்பிள்ளை அறிவித்துள்ளார். (வ-9)

## பரிசளிப்பு

யாழ்.செங்குந்த இந்துக்கல் லூரியின் பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை முற்பகல் 9மணிக்கு கல்லூரி மண்டபத்தில் அதிபர் க.தருமகுலசிங்கம் தலைமையில் இடம்பெறும். நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக இந்திய பிரதித் துணைத்தூதர் எஸ்.ரி. மூர்த்தி கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் அ.அகிலதாஸ்ம் கௌரவ விருந்தினராக நல்லூர் பிரதேசசபை தவிசாளர் ப.வசந்தகுமாரும் கலந்து கொள்வர். (வ-ரி)

◆◆◆

யாழ் வண்ணை நாவலர் மகாவித்தியாலய பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு வித்தியாலயத் தின் பிரதான மண்டபத்தில் வித்தியாலய அதிபர் சு.திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறும்.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப் பாளர் செ.உதயகுமார் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர் களாக வட மாகாண கல்வி அபிவிருத்திக் குழுத்தலைவர் இரா. செல்வவடிவேலும் யாழ்.கோட்டக் கல்வி அதிகாரி சு.சண்முக குமாரும்கலந்து கொள் வர். (வ-ரி)

## ஓய்வூதியர் தின நிகழ்வு நாளை

வட மாகாண வங்கி ஓய்வூதி யர் சங்கத்தின் 20 ஆவது ஆண்டு நிறைவும் சர்வதேச ஓய்வூதியர் தினமும் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு இல-79, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந் துள்ள மக்கள் வங்கியின் யாழ். பிரதேச தலைமைக் காரியா லய கேட்போர் கூடத்தில் நடை பெறவுள்ளது.

நிகழ்வுக்கு பிரதம விருந்தின ராக பேராசிரியர் எம். நட ராஜசுந்தரமும் விருந்தினர்க ளாக வங்கி ஓய்வூதியச் சங்கங் களின் செயலாளர்களான க.கமலசேகரம், ஆ.இராசநாய கம், கோ.சற்குணபாலன் ஆகி யோரும் கலந்துகொள்வர்.

அன்றையதினம் வட மாகாண வங்கியாளர் பத்திரிகை வெளி யீடும், இணையத்தள வெளி யீடும் சிறப்பு நிகழ்வுகளாக இடம் பெறும். (வ)

## தங்க மணவறை அறிமுக நிகழ்வு

மல்லாகம் பழம் பிள் ளையார் ஆலய மண் டபத்தில் இந்தியக் கலைஞர்களால் வடி வமைக்கப்பட்ட தங்க மணவறை இன்று வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு அறிமுகப் படுத்தப்படவுள்ளது. திருவிழா, திருமண, பூப்புனித நீராட்டு வைப வங்கள் போன்ற சுபகா ரியங்கள் நடத்த குறித்த மணவறை வழங்கப் படும் என்று அறிவிக் கப்பட்டுள்ளது. (வ-ரி)

**யாழ். மாநகர சபையின் பகிரங்க கேள்வி அறிவித்தல்**

யாழ். மாநகர சபைக்கு சொந்தமான பழைய பூங்கா சிற்றுண்டிச்சாலை 01.11.2014ஆம் திகதி முதல் 31.12.2015 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு 31.10.2014 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ். மாநகர சபையின் நானாவித இறைவரிப்பகுதியில் பகிரங்க ஏலம் கோரப்பட்டு குத்தகைக்கு வழங்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

| | சிற்றுண்டிச்சாலை | ஆரம்ப கேள்வித்தொகை |
|---|---|---|
| 1. | பழைய பூங்கா சிற்றுண்டிச்சாலை | 63,000.00 |

இப் பூங்காவானது நகரின் மையப்பகுதியில் அமைந்திருப்பதுடன் மாவட்டத் தின் பல பாகங்களில் இருந்தும் பூங்காவைப் பார்வையிடுவதற்காக மக்கள் வந்து போகும் பிரபல்யமான ஓர் இடமாகவும் காணப்படுவதனால் இச்சிற்றுண்டிச் சாலையைக் குத்தகைக்குப் பெறுபவர் தகுந்த சுகாதார முறைப்படி தரமாக நடத்து வதன் மூலம் தங்களின் நிறுவனத்துக்கு நல்லதொரு விளம்பரமாக அமையும் என்பதையும் கருத்தில் கொள்ளவும். மேலதிக விவரங்களை மாநகர சபையின் நானாவித இறைவரிப்பகுதியில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

தொலைபேசி இல. 071 862 8576

ஆணையாளர்,
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

(C/17208)(10.6.3)

**பிற்போடப்பட்டுள்ளது**

அளவெட்டி, பத்தானை ஞானவைரவர் ஆலயத்தின் அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு 22.10.2014 என அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் தவிர்க்க முடியாத காரணத்தினால் சீட்டிழுப்பு எதிர் வரும் 15.01.2015 தைப்பொங்கல் தினம் அதிர்ஷ்டம் பார்க் கப்பட்டு, 18.01.2015 முடிவுகள் பத்திரிகையில் வெளிவரும் என சகலருக்கும் அறியத்தருகின்றோம்.

(53441)(4.3.6) ஆலய பரிபாலன சபையினர்.

**சீட்டிழுப்பு முடிவுகள்**

நல்லூர் சங்கிலியன் மன்றம் நடத்திய சமூக நலத்திட்டத்துக்கான அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு குலுக்கல் 22.10.2014 தீபாவளி தினத்தன்று நடைபெற்றது.

அதன் முடிவுகள் பின்வருமாறு :

முதலாம் பரிசு - இல. 3449
இரண்டாம் பரிசு - இல. 0094
மூன்றாம் பரிசு - இல. 0404

ஆறுதல் பரிசுகள்

| | |
|---|---|
| 1) இல. - 1794 | 6) இல. - 1310 |
| 2) இல. - 4975 | 7) இல. - 0537 |
| 3) இல. - 3973 | 8) இல. - 3130 |
| 4) இல. - 3074 | 9) இல. - 4076 |
| 5) இல. - 1542 | 10) இல. - 2101 |

மேற்படி பரிசுகளை ஒரு மாத காலத்துக்குள்
நிர்வாகத்துடன்
தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளவும்.

சங்கிலியன் மன்ற நிர்வாகத்தினர். (53442) (7.6.3)

**INVITATION FOR BIDS**
**TEACHING HOSPITAL, JAFFNA**

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna. invite sealed bids from eligible and qualified bidders for the construction and renovation works in the schedule below.

| Work/Service Details | Non-refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security (Days) | Approximate Direct cost of the work (Rs. In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|
| Renovation and Modification of Ward No 26 Female site as Ward No 21 | 500.00 | 20,000.00 | 91 | 1.0 | C10 |
| Toilets Renovation of Ward No 27 | 500.00 | 47,000.00 | 91 | 2.30 | C8 |
| Construction of Corridor nearby Kitchen | 500.00 | 12,000.00 | 91 | 0.59 | C10 |

1. Bidding will be conducted through national competitive Bidding Procedure
2. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD)
3. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.
4. A Complete set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders form Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the chash payment for the bid fee from 27.10.2014 until at 4.00pm on 04.11.2014 during office hours, The payment shall be made to the Shroff, Teaching Hospital, Jaffna.
5. Sealed bids shall be delivered to the address below at before 10.00 hrs on 05.11.2014, late bides will be rejected, Bids will be open at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders' representative who choose to attend.

**Director (Chairman),**
**Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna.** 24.10.2014

(C/17209)(3.6.3)

CEYLON THEATRES
இப்பொழுது திரையில்
MAJESTIC CINEMA - CARGILLS SQUARE
(Opposite Jaffna Teaching Hospital)




Platinum 10.30am, 2.30pm, 6.30pm




Silver 10.15am, 2.15pm, 6.15pm




Bronze 10.30am, 2.30pm, 6.30pm

விசாரணை ☎ 021-2227712

www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com

## சாவகச்சேரி பொதுச் சந்தையின் நிர்மாணப் பணிகள் ஒக்.28 இல்

தென்மராட்சி, ஒக்.24
நவீன வடிவில் அமைக்கப்படவுள்ள சாவகச்சேரி பொதுச் சந்தையின் நிர்மாணப் பணிகள் எதிர்வரும் 28ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய தற்போதைய சந்தையின் சில பகுதிகளை சந்தையின் ஏணைய பகுதிகளுக்கு மாற்ற நகர சபையால் ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

சந்தைக்குள் காணப்படும் வெங்காய விற்பனைப் பிரிவு, மரக்கறி விற்பனைப் பிரிவு, அங்காடி உடு புடைவை விற்பனைப் பிரிவு, நவீன சந்தையின் பிரதான வாயிலுடன் இணைந்த விறாந்தைக்குத் தற்காலிகமாக மாற்றப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கட்டட வேலைகள் பூர்த்தியடைந்ததும், மரக்கறி விற்பனைப் பிரிவு இயங்கும் பகுதியில் புதிய கட்டடம் அமைக்கப்பட்டு எதிர்வரும் ஜனவரி மாதம் வியாபாரநடவடிக்கைகளுக்காக கையளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

நகர அபிவிருத்தி அதிகார சபையால் 3 கோடி ரூபா செலவில் ஒரே கூரையின் கீழ் சந்தையின் அனைத்து விற்பனைப் பிரிவு களையும் உள்ளடக்கியதாக கட்டடம் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-9)

# அரச தலைமைகளுக்கு ஆலவட்டம் பிடிக்கும் இந்து குருமாரின் செயல் கவலைக்குரியது

### சிவஸ்ரீ.பால.ரவிசங்கர சிவாச்சாரியார் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.24
வடமாகாண சபை முடக்கம், வடகிழக்கில் காணி சுவீகரிப்பு, அவ்வப்போது ஆயுதம் ஏந்திய படையினரால் மேற்கொள்ளப்பட்ட பாலியல் துஷ்பிரயோகம் என தமிழ் மக்களையும் தமிழ் மண்ணையும் வஞ்சிக்கும் அரசுக்கு, ஏனைய மதத்தலைவர்கள் நியாயத்தையும், தர்மத்தையும் மக்களோடு மக்களாக நின்று இடித்துரைத்து வரும் இன்றைய சூழ்நிலையில் இந்து மதக் குருமார் வெறுமனே பெயர், புகழ், பட்டம், பணம் என்பவற்றுக்கு விலைபோவதுடன் அரச தலைமைகளுக்கு ஆலவட்டம் பிடிப்பது மிகுந்த வேதனையான விடயமாகவுள்ளது என்று சர்வதேச இந்து மத பீடத்தின் தலைவரும் கொழும்பு ஸ்ரீ ஞானபைரவேஸ்வர தேவஸ்தான ஆதீன கர்த்தாவுமான சிவஸ்ரீ.பால.ரவிசங்கர சிவாச்சாரியார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"போர்க் காலத்திலும் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ள இன்றைய காலத்திலும் இந்து தமிழ் மக்களின் வாழ்வில், அவர்களின் சிந்தனையில் கரிசனை இல்லாத இந்துக் குருமார்களின் இத்தகைய சுயநல செயற்பாடு இந்து மதத்தில், இந்து மத குருமார்களிடத்தில் ஓர் இடைவெளியை உருவாக்கியுள்ளதுடன் இந்துக்களின் மதமாற்றத்துக்கும் வித்திடுவதாக உள்ளது. இந்துக் குருமார் தமிழ்த் தேசியத்துக்கு ஆதரவளிக்காவிட்டாலும் துரோகிகளாக செயற்படாதிருக்க வேண்டும். தேர்தல் காலங்களில் அவ்வப்போது அரச மட்டம் இத்தகைய எடுபிடிகளைக் காட்டி வடகிழக்கில் வாக்கு வேட்டையாடலாம் என்பது பகல்கனவே ஆகும்.

அரசியல் என்பதே சாக்கடையாகியுள்ள நிலையில் தர்மத்தின் பக்கம், நியாயத்தின் பக்கம் என்பதெல்லாம் வெறும் வார்த்தை ஜாலங்களே. எனவே இந்துமதக் குருமார் சமூக உணர்வோடும் சமூக அக்கறையோடும் செயற்பட்டாலேயே எதிர்காலத்தில் தமக்கான இருப்பை, கௌரவத்தை பெறக்கூடியதாக இருக்கும்- என்றுள்ளது. (வ)

## ஹெந்தல லயன்ஸ் கழகத்தால் 220 கண் வில்லைகள் கையளிப்பு

தென்மராட்சி ஒக்.24
விழிவெண்படலத்தில் பூப்படர்வு (கற்றாக்) ஏற்பட்டுள்ள வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மக்களுக்கு வழங்கவென 220 கண் வில்லைகளை ஹெந்தல லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த லயன் கமிலஸ் பெர்னாண்டோ, நேற்று முன்தினம் புத்தூர் வாதரவத்தை கிராமத்தில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் வைத்து சர்வதேச லயன்ஸ் கழக 306 பி.1 மாவட்ட உப ஆளுநர் லயன் மருத்துவர் வீ.பி.தியா கராஜாவிடம் கையளித்துள்ளார்.

இந்தக் கண் வில்லைகள் யாழ். மாவட்டத்தில் உள்ள 22 லயன்ஸ் கழகங்கள் ஊடாக விழிவெண்படலத்தில் பூப்படர்வு ஏற்பட்டுள்ளதாக இனங்காணப்பட்ட வறிய குடும்பங்களைச் சேர்ந்த மக்களுக்கு பொருத்தவென வழங்கப்படவுள்ளன.

இந்தக் கண் வில்லைகள் தேவைப்படுவோர் உரிய மருத்துவச் சான்றிதழுடன் தத்தமது பிரிவு லயன்ஸ் கழகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு மாவட்ட உதவி ஆளுநர் லயன் வீ.பீ.தியா கராஜா அறிவித்துள்ளார். (வ-9)

## யாழ். மாவட்ட லயன்ஸ் கழகங்களால் பல்வேறு நலத்திட்டங்கள் முன்னெடுப்பு

தென்மராட்சி ஒக்.24
யாழ். மாவட்ட லயன்ஸ் கழகங்கள் ஒன்றிணைந்து நேற்று முன்தினம் புத்தூர் வாதரவத்தை கிராமத்தில் பல்வேறு நலத்திட்டங்களை மேற்கொண்டன.

சர்வதேச லயன்ஸ கழக 306 பி 1 மாவட்ட உப ஆளுநர் லயன் வீ.பீ.தியாகராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக மாவட்ட ஆளுநர் லயன் இக்னேசியஸ் கமிலஸ் மற்றும் லயன்ஸ் மாவட்டத்தைச் சேர்ந்த பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் 75 மாணவர்களுக்கு புத்தகப் பைகளும் அந்தப் பகுதியில் உள்ள விளையாட்டுக் கழகத்துக்கு விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்பட்டதுடன் அங்குள்ள முன்பள்ளி ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன் அந்தப்பகுதியில் தெரிவு செய்யப்பட் 150 குடும்பங்களுக்கு மாவட்டத் தலைவர் சுந்தரேஸ்வரனால் தென்னம்பிள்ளைகளும் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் 150 முருங்கைக் கன்றுகளும் விநியோகிக்கப்பட்டன.

அத்துடன் ஹெந்தல லயன்ஸ் கழகத்தினரால் யாழ். மாவட்டத்தில் உள்ள 22 லயன்ஸ் கழகங்களுக்கு தலா 2 சந்தன மரக்கன்றுகளையும் அந்தந்த லயன்ஸ் கழக எல்லைக்குட்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கவென தலா 8 ஊன்று கோல்களைக் கொண்ட பொதிகளும் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. வ- 9)

## கருத்தரங்கு

தென்மராட்சி, ஒக்.24
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஜி.சீ.ஈ உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றி பரீட்சைப் பெறு பேற்றை எதிர்பார்த்திருக்கும் கலைத்துறை மாணவர்களுக்கான 3 நாள் கருத்தரங்குகள் இன்று தொடக்கம் நடை பெறும்.

வேள்ட்விசன் நிறுவன அனுசரணையுடன் வலய தொழில் வழிகாட்டல் அலகால் சாவகச்சேரி இந்துக் கல்லூரி சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆகிய நிலையங்களில் கருத்தரங்குகள் இடம்பெறும்.

மாணவர்களின் உயர்கல்வி வாய்ப்பை மேம்படுத்துவதோடு தகுதிக்கேற்ற தொழில் வாய்ப்புக்களை உறுதி செய்யும் நோக்கத்துடன் காலத்தை வென்று கனி கொள்வோம் என்ற தலைப்பில் கருத்தரங்கும் நடத்தப்படவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ண குமார் அறிவித்துள்ளார்.

கடந்த ஓகஸ்ட மாதம் பரீட்சைக்குத் தோற்றிய கலைப் பிரிவு மாணவர்கள் அனைவரையும் கருத்தரங்கில் பங்கு பற்றுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானத்துறை, பௌதீக விஞ்ஞானத்துறை, வுர்த்தகத் துறை ஆகிய பிரிவுகளில் தோற்றிய மாணவர்களுக்கு கடந்த வாரம் கருத்தரங்கு நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ-9)

## மக்கள் வங்கி

### உதவி சட்ட அதிகாரி பதவி

யாழ்ப்பாணம் மற்றும் வன்னி - பிராந்திய தலைமை அலுவலகங்களில் நிலவும் உதவி சட்ட அதிகாரி பதவிக்கான வெற்றிடங்களுக்கு மக்கள் வங்கி தகுதியுள்ள இருவரை நியமிக்க விண்ணப்பங்களைக் கோருகிறது.

**தகைமை**

- விண்ணப்பதாரர் சட்டத்தரணியாகவும் அரச நொத்தாரிசாகவும் 32 வயதுக்குக் குறைந்தவராகவும் இருக்க வேண்டும். அத்துடன் பின்வருவனவற்றில் குறைந்தபட்சம் ஒரு வருட நீதிமன்ற அனுபவம் இருக்க வேண்டும்.

  சிவில் விடயங்கள், உறுதிகளைப் பரிசோதித்தல், உறுதிகளைத் தயாரித்தல் மற்றும் சட்ட ஆவணங்களை வரைதல். அத்துடன் அவர் ஆங்கிலத்திலும் தமிழிலும் அரச நொத்தாரிசாக செயலாற்ற உத்தரவுப்பத்திரம் பெற்றிருக்க வேண்டும்.

- LLB பட்டம் பெற்றிருத்தல், கணினி அறிவு, வங்கி அலுவல்கள் மற்றும் நிதிசார் சேவைகளில் அனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

நியமனம் ஆரம்பத்தில் 02 வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்படும். தகைமையுள்ளவருக்கு ஒப்பந்த காலத்தில் அனைத்தும் அடங்கலாக மாதாந்தம் ரூ.30,000/- கொடுப்பனவு வழங்கப்படும். ஒப்பந்த காலம் முடிவடைந்ததன் பின்னர், வங்கி அவர்களுடைய செயலாற்றுகையை மதிப்பீடுசெய்து ஒப்பந்த காலத்தை நீடிப்பதா அல்லது வங்கியின் நிரந்தர பணியாள் தொகுதிக்கு உள்வாங்குவதா என்பதை வங்கி தீர்மானிக்கும். நிரந்தர பணியாள்தொகுதிக்கு உள்வாங்கப்பட்ட்தன் பின்னர், அத்தகைய ஊழியர்கள் கவர்ச்சிகரமான சம்பளம், மருத்துவ பயன்கள், ஊழியர் வீடமைப்பு கடன், வருடாந்த மிகையூதிய கொடுப்பனவு போன்றவற்றிக்கு உரித்துடையவர்களாவார்கள்.

ஆர்வமுள்ளவர்கள் தமது சுயவிபரக் கோவையுடன் தாம் விண்ணப்பிக்கின்ற தொழிலுடன் தொடர்புடைய சாதனைகளையும் அநுபவங்களையும் பற்றிய விபரங்களுடன் சான்றிதழ்களின் பிரதிகளையும் உறவினரல்லாத நாம் தொடர்புகொள்ளக்கூடிய இருவரின் தொடர்பு இலக்கங்களையும் இணைத்து அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு கீழே தரப்பட்டுள்ள முகவரிக்கு 07.11.2014 அல்லது முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்கவும்.

விண்ணப்பங்கள் அனைத்தும் அந்தரங்கமாகக் கையாளப்படும். எந்த விதத்திலும் ஆதரவு தேடுதல் தகுதியின்மையாகக் கருதப்படும்.

**பிரதிப் பொது முகாமையாளர் (மனித வளங்கள்)**
மக்கள் வங்கி - தலைமை அலுவலகம்
இல.75, சேர் சிற்றம்பலம் ஏ காடினர் மாவத்தை
கொழும்பு 02

PEOPLES BEST LOVED BANK OF THE YEAR
2006 2007 2008 2010 2011 2012 2013 2014
PEOPLES SERVICE BRAND OF THE YEAR
2008 2010 2011 2012 2013 2014

மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி
www.peoplesbank.lk

## 'இராம ஒலி' நூல் வெளியீடு

வலி வடக்கு ஒக் 24
தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி நூலகத்தின் ஏற்பாட்டில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு இராம ஒலி என்ற நூல் வெளியீட்டு விழா கல்லூரி அருணாசலம் மண்டபத்தில் அதிபர் திருமதி கமலராணி கிருஷ்ணபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண சபையின் தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர் பா.கஜதீபனும், சிறப்பு விருந்தினர்களாக வாழ்வகத் தலைவரும் தேசிய கல்வியற் கல்லூரி விரிவுரையாளருமான ஆ.ரவீந்திரன், உடுவில் கல்விக்கோட்ட கல்விப் பணிப்பாளர் தி.தர்மலிங்கம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஆசியுரையை தெல்லிப்பழை ஸ்ரீ தூக்காதேவி தேவஸ்தானத் தலைவர் ஆறு.திருமுருகனும், வெளியீட்டுரையை யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளையும், நயப்புரையை கிளிநொச்சி மத்திய கல்லூரி ஆசிரியர் ந.குகபரனும் நிகழ்த்தவுள்ளனர். (வ-86)

## மருத்துவமனை சத்திரசிகிச்சை பிரிவுக்கு உபகரணங்கள்

யாழ்ப்பாணம் கிறீன் கிறாஸ் ஹோட்டல் நிறுவனத்தினரால் தமது சமூக அக்கறையின் வெளிப்பாடாக பெறுமதி வாய்ந்த தளபாடங்கள் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையின் சத்திர சிகிச்சைப் பிரிவுக்கு செவ்வாய்க்கிழமை மாலை அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

தாதியர்களுக்கான கரும்பீடம் மேசை, சுழல் நாற்காலி என்பவை மருத்துவமனை பதில் வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி திவாகரிடம் கையளிக்கப்பட்டன. (வ-36)

**ஜெனரேற்றர் விற்பனைக்கு**

65kw ஜெனரேற்றர் உடன் விற்பனைக்குண்டு.

(47317) (12.3.6) தொடர்பு: 077 110 6485

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**




யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலய மாணவி
செல்வி
**பிரான்சிஸ் நவரட்ணம் மேரி றக்ஷனா**
2014 தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சங்கானைக் கோட்டத்தில் முதல் மாணவியாக 185 புள்ளிகள் பெற்று சித்தியடைந்தமையையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Best Wishes அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர் சங்கம், யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்.

(12.3.6)

## 5 வறிய குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள்



போரின் பின்னர் அரசன்குளத்தில் மீள்குடியேறி அடிப்படை வசதிகள் இன்றி வறுமையில் வாடும் 5 குடும்பங்களுக்குச் சமுர்த்தி உத்தியோகத்தர் கனிசியஸ் மற்றும் சமுர்த்தி சங்க ,மாதர் சங்க தலைவி நவரத்தினம் மீனாம்பிகை ஆகியோரின் வேண்டுகோளுக்கு அமைவாக உலர் உணவுப் பொதிகள் சுரேந்திரன் நற்பணி மன்ற ஸ்தாபகர் சுரேந்திரனால் தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர்கள் அமைப்பின் மூலம் வழங்கப்பட்டன , தாய் .தந்தையை இழந்து வாழும் இரு சிறுவர்களுக்கும், 3 பிள்ளைகளுடன் மலசல கூடம் ,கிணறு உட்பட அடிப்படை வசதிகள் இன்றி வறுமையில் வாழும் குடும்பப் பெண்ணுக்கும், ஊனமுற்ற தொழில் ஏதும் செய்ய இயலாத ஒருவருக்கும், தாய், தந்தையை இழந்து வாழ்வாதாரத்துக்கு கஷ்டப்படும் யுவதிக்கும், பூசா முகாமில் புனர்வாழ்வு பெற்று சமூகத்துடன் இணைக்கபட்ட முன்னாள் போராளிக்கும் அரிசி ,மா ,சீனி ,கிழங்கு ,பருப்பு ,அங்கர் ,ரின்மீன் போன்ற அத்தியாவசியப் பொருள்கள் அடங்கிய உலர் உணவு பொதிகள் வழங்கப்பட்டன. (த-421)

# நேற்று அதிகாலை முதல் வவுனியாவில் கன மழை

### குடிசைகளில் வாழும் மக்கள் பெரும் அவலம்

வவுனியா , ஒக்.24

வவுனியாவில் நேற்று அதிகாலை முதல் கடும்மழை பெய்தமையால் தற்காலிக குடிசைகளில் வசிக்கும் மக்கள் சிரமங்களை எதிர்கொண்டனர்.

வவுனியாவில் நேற்று அதிகாலை 1 மணியிலிருந்து சில மணித்தியாலயங்கள் கடும் மழை பெய்தது. இதனால் பம்மைமடு, செட்டிகுளம், கற்பகபுரம், பூந்தோட்டம், காத்தார் சின்னக்குளம், சிதம்பரபுரம், கல்நாட்டியகுளம், இராசேந்திரங்குளம், அரபா நகர், கந்தபுரம், மூன்று முறிப்பு, தேக்கவத்தை ஆகிய பகுதிகளில் தற்காலிக கொட்டகைகளில் வசித்து வரும் மக்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். குறித்த கொட்டகைகளுக்குள் வெள்ளம் புகுந்தமையால் அங்கிருந்த பல பொருள்கள் பாதிப்படைந்துள்ளன. இது குறித்து சில கிராமங் களைச் சேர்ந்த மக்கள் தமக்கு கூடாரங்கள் வழங்குமாறு வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவினரை உதவி கோரியுள்ளனர். (த-402)



வவுனியா பொது வைத்தியசாலைக்கு 3 லட்சத்து 30 ஆயிரம் ரூபா பெறுமதியான கதிரைகள் வைத்தியசாலை பொதுமக்கள் நட்புறவுக் கழகத்தால் கையளிக்கப்பட்டன. வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.ரவீந்திரன் இவற்றை வவுனியா பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் அகிலேந்திரனிடம் கையளித்தார். (த-421)

## வவுனியா விபத்தில் யுவதி காயம்

வவுனியா, ஒக் 24

வவுனியா நகர மணிக்கூட்டு கோபுரச் சந்தியில் இடம்பெற்ற விபத்தில் யுவதி ஒருவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று வியாழக்கிழமை காலை வவுனியா - கண்டி வீதியில் இருந்து நகரை நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்த யுவதி மணிக்கூட்டுக் கோபுரச் சந்தியில் இருந்து பஸார் வீதி நோக்கி திரும்பியபோது அதே வழியில் பின்னால் வந்த தனியார் பஸ் மோதியதிலேயே இவ் விபத்து இடம்பெற்றது.

இதில் மோட்டார் சைக்கிள் செலுத்தி வந்த யுவதி காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். பஸ் வவுனியா பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளைத் தாம் மேற்கொண்டு வருகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (த)

## தேசிய வாசிப்பு மாத போட்டி

யாழ்ப்பாணம், ஒக்.24

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச சபையின் நல்லூர் பொது நூலகத்தினால் சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள சகல பாடசாலை மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் நாளையும் நாளை மறுதினமும் பின்வரும் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. இதில் கலந்துகொள்ள விரும்பும் மாணவர்கள், பொதுமக்கள் தமது பெயர்களை உடனடியாக நல்லூர் நூலகத்தில் பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. சொல் கோர்த்தல் (தரம் 1,2), சித்திரப் போட்டி (தரம்- 3-11), ஒரு தமிழ் வார்த்தை (14 வயதுக்கு மேற்பட்டோர்), சொல் எது (முதியோருக்கானது) ஆகிய போட்டிகள் இடம்பெறவுள்ளன. (த)

## ஜனாதிபதி வழங்கிய புதிய பஸ்களில் அரசியல் நடத்தும் அமைச்சர் ரிசாத்

### வவுனியா டிப்போ ஊழியர்கள் விசனம்

வவுனியா, செப்.24

கடந்த 13 ஆம் திகதி யாழ்.நகரில் வைத்து ஜனாதிபதியால் உத்தியோகபூர்வமாக இலங்கை போக்குவரத்துச் சபையின் வவுனியா டிப்போவுக்கு வழங்கப்பட்ட 10 புதிய பஸ்களை அமைச்சர் ரிஷாத் பதியுதீன் நேற்று மீள வழங்கியமையால் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வவுனியா டிப்போ ஊழியர்கள் விசனம் அடைந்துள்ளனர். நேற்றுக் காலை இலங்கை போக்குவரத்துச் சபையின் வவுனியா டிப்போவுக்கு வருகை தந்த அமைச்சர் ரிஷாத் பதியுதீன், ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் வைத்து ஜனாதிபதியால் வவுனியா டிப்போவுக்கு வழங்கப்பட்ட பத்து பஸ்களையும் மீளத் தானும் வழங்கினார். இந்த 10 பஸ்களும் கடந்த 14ஆம் திகதி முதல் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. நேற்று இவற்றை மீளக் கையளிப்பதற்காக அவை சேவையில் ஈடுபடுத்தப்படா மல் டிப்போவில் முடக்கி வைக்கப்பட்டதன் காரணமாக டிப்போ வருமானத்தில் சுமார் இரண்டு லட்சம் ரூபா வுக்கு மேல் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் இதனைத் தாம் வன்மையாக கண்டிப்பதாகவும் ஊழியர்கள் தெரிவித்தனர்.

அமைச்சர் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் வவுனியாக் கிளையையும் திறந்து வைத்தார். (த-402)

# பாரம்பரியப் பயிரினங்களுக்கு மாறவேண்டிய காலகட்டம் இது

### மாகாண விவசாய அமைச்சர் கூறுகிறார்

கிளிநொச்சி, ஒக் 24

பூகோளரீதியாக ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றம் காரணமாக வடக்கில் இந்த ஆண்டு நிலவிய கடும் வறட்சி இனி வரும் ஆண்டுகளிலும் நீடிக்கும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில் அதிக நீர்ப்பாசனம் தேவைப்படும் கலப்பினங்களை மாத்திரம் முற்றுமுழுதாக நம்பியிராமல் வறட்சிக்குத் தாக்குப்பிடிக்கக் கூடிய பாரம்பரியப் பயிரினங்களுக்கு நாம் மீளவும் திரும்ப வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு தெரிவித்தார் வட மாகாண விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன்.

அழிந்துவரும் பாரம்பரியப் பயிரினங்களைப் பாதுகாக்கவென வடக்கு விவசாய அமைச்சால் 'வீரியம்' திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான தொடக்க நிகழ்ச்சி நேற்று வியாழக்கிழமை முழங்காவில் ஜெயபுரம் வடக்கு பல்நோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.



விவசாயி ஒருவருக்கு விதைநெல் வழங்குகிறார் அமைச்சர்

இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு விவசாயிகளுக்குப் பாரம்பரியப் பயிரினங்களின் விதைகளை வழங்கிஉரையாற்றும்போதே அமைச்சர் பொ.ஐங்கர நேசன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் தொடர்ந்து கூறியதாவது:-

சுதேசிய இனங்களான பாரம்பரியப் பயிர்கள் அதிக நீரோ, அதிகளவு இரசாயன உரங்களோ தேவைப்படாதவை. பீடைகளின் தாக்கத்துக்கு எளிதில்ஆளாகாதவை. ஆனால், கலப்பினங்களின் வரவோடு பாரம்பரியப் பயிரி னங்கள் யாவும் வழக்கொழிந்து போய் விட்டன. மேலும் அதிகளவு இரசாயன உரங்களும், பூச்சிக்கொல்லி மருந்துகளும் கலப்பினங்களை விளைவிக்கப் பயன்படுத்தப்படுவதால் சுற்றுச் சூழல் மோசமாகப் பாதிக்கப்படுவதோடு, உணவில் கலக்கும் இரசாயனங்களின் மூலம் நோய்களின் தாக்கமும் அதிகரித்துள்ளது.

இதனால், கலப்பு இனப் பயிர்களுக்குப் பதிலாகச் செயற்கை இரசாயனங்களைப் பயன்படுத்தாத இயற்கை வேளாண்மையை உலக நாடுகள் ஊக்குவிக்க ஆரம்பித்துள்ளன.

இயற்கை அல்லது சூழலியல் விவசாயத்துக்குக் கலப்பினப் பயிர்களைவிட பாரம்பரியப் பயிரினங்களேமிகவும்பொருத்தமானவை.

இதனால் வழக்கொழிந்து அழிந்து போய்க் கொண்டிருக்கும் பாரம்பரிய இனங்களை மீட்டெடுத்து மீளவும் பயிரிட வேண்டிய தேவை எழுந்துள்ளது.

அதனாலேயே, நோய் நொடிக்கு ஆளாகாமல் எமது மண்ணில் வீரியத்துடன் வளரக்கூடிய பாரம்பரியப் பயிரினங்களைப் பாதுகாக்கும் வீரியம்' என்ற திட்டத்தை முன்னெடுத்துள்ளோம்.

வீரியம் திட்டத்தில் நாம் விவசாயிகளுக்கு இலவசமாகப் பாரம்பரியப் பயிர்களின் விதைகளை வழங்கினால், அறுவடையின் பின்னர் விவசாயிகள் எமக்கு இரட்டிப்பு மடங்கு விதைகளைத் தர வேண்டும்.

இந்த விதைகளை நாம் வேறு விவசாயிகளுக்கு வழங்குவதன் மூலம் விரைவிலேயே பாரம்பரிய இனங்களை மீட்டெடுத்துப் பெருமளவில் பெருக்கமுடியும் என்றும் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் அணில் வரியன், மொட்டைக்கறுப்பன், பச்சைப்பெருமாள், கறுப்புச் சீனட்டி, சுவந்தல், றோனால் பட்டம், படபொலஸ் போன்ற சுதேசிய நெல்இனங்களும் உபஉணவுப் பயிர்ச்செய்கைக்கான பாரம்பரிய விதைகளும் வழங்கப்பட்டன. பொதுமக்களில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் நூறு பேருக்குக் கோழிக்குஞ்சுகளும் வழங்கப்பட்டன. (த)

# மல்லாகம் ஆலயத்தில் நிறுத்தப்பட்ட வேள்வி

வலி வடக்கு, ஒக் 24

தீபத் திருநாளான நேற்று முன் தினம் புதன்கிழமை மல்லாகம் நரியிட்டான் வைரவர் ஆலயத்தில் இடம்பெறவிருந்த மிருக பலி தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. சைவ மகா சபையும் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் மேற்கொண்ட தீவிர நடவடிக்கையின் பயனாக இந்த வேள்வி நிறுத்தப்பட்டுள்ளது. உரிய அனுமதி பெறப்படாத காரணத்தால் இந்த வேள்வியை நடத்துவதற்குப் பொலிஸார் அனுமதிக்கவில்லை. இதனால் ஆலயத்தில் பலியிடுவதற்காகக் கொண்டுவரப்பட்ட 25 இற்கு மேற்பட்ட ஆடுகள் திருப்பிக் கொண்டு செல்லப்பட்டன.

மேற்படி ஆலயத்தில் வருடாந்தம் தீபாவளி தினத்தன்று மிருக பலியிடுதல் நடைபெற்று வந்தது. ஆனால், இந்த வருடம் மேற்படி ஆலயக் காணியை அந்த இடத்திலுள்ள சனசமூக நிலையமொன்று கொள்வனவு செய்துள்ளதால் அந்த ஆலயத்தில் மிருக பலி நடத்துவதற்கு மேற்படி சனசமூக நிலையம் எதிர்ப்பை வெளியிட்டது.

இது தொடர்பில் சனசமூக நிலையத்தால் வலி.வடக்குப் பிரதேச சபை மற்றும் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஆகியவற்றின் கவனத்துக்கும் கொண்டுவரப்பட்டது.

இந்த நிலையில் சனசமூக நிலையம் எதிர்ப்பதால் மிருக பலியிடுதலுக்கான உரிய அனுமதி வழங்கப்படவில்லை. இந்த நிலையில் நேற்று முன்தினம் மேற்படி ஆலயத்தில் மிருக பலிக்கான ஏற்பாடுகள் இடம்பெற்றன. நேற்று முன் தினம் காலை 25 இற்கும் மேற்பட்ட ஆடுகள் ஆலயத்துக்குக் கொண்டுவரப்பட்டன.

ஆனால், ஆடுகள் வெட்டப்படுவதாயின் சட்ட ரீதியான வழிமுறைகள் பின்பற்றப்படவேண்டும் என்று தெரிவித்த தெல்லிப்பழைப் பொலிஸார் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் ஆடுகள் பரிசோதிக்கப்பட்டு அனுமதி வழங்கப்படாமல் ஆடுகளை வெட்ட அனுமதி வழங்க முடியாது என்று தெரிவித்தனர். மீறி ஆடுகளை வெட்டினால் வெட்டுபவர்கள் கைது செய்யப்படுவர் என்றும் பொலிஸார் இறுக்கமாகத் தெரிவித்தனர். இதனால் குறித்த ஆலயத்தில் மிருக பலி இடம் பெறவில்லை.

இதேவேளை, யாழ்.மாவட்டத்திலுள்ள சில ஆலயங்களில் இடம்பெற்று வருகின்ற மிருக பலியைத் தடுத்து நிறுத்துமாறு இந்த வருட ஆரம்பத்திலிருந்தே சைவ மகா சபை தொடர்ந்து வலியுறுத்தி வந்தது. இதேபோன்று ஏனைய இந்து அமைப்புகளும் இதற்கு எதிராகக் குரல் கொடுத்தன. தென்மராட்சி அறவழிப் போராட்டக் குழு மிருக பலியை நிறுத்துமாறு உண்ணாவிரதப் போராட்டங்களையும் நடத்தியிருந்தது. இந்த நிலையில் மேற்படி ஆலயத்தில் மிருக பலி நிறுத்தப்பட்டமையை குடாநாட்டிலுள்ள பல சமய அமைப்புகள் வரவேற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (த-86)

# வலி.கிழக்குப் பிரதேச சபையின் உட்கட்சிப் பூசலை நீக்க முயற்சி

## உறுப்பினர்களுடன் மாவை சேனாதிராசா சந்திப்பு

அச்சுவேலி, ஒக்.24

வலி.கிழக்குப் பிரதேச சபையின் ஆளுங்கட்சி தரப்பினரிடையே நிலவி வரும் உட்கட்சிப் பூசல்களை போக்கிச் சபையின் செயற்பாடுகளை இயல்பு நிலையில் மேற்கொள்ளச் செய்வதில் தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சோ.சேனாதிராசா நேரடியாக ஈடுபட்டுள்ளார். இந்த வகையில் அவர் சபையின் தவிசாளரை நேரில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

வலி.கிழக்குப் பிரதேச சபையின் தவிசாளர் க.துரைசிங்கத்துக்கும் மாவை சேனாதிராசாவுக்கும் இடையிலான சந்திப்பு கடந்த சனிக்கிழமை பிற்பகல் பிரதேச சபையின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்றது. இந்தச் சந்திப்பின்போது உப தவிசாளர் க.தர்மலிங்கம், வடக்கு மாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதி, பிரதேச சபையின் செயலாளர் என்.குணாளன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

வலி.கிழக்குப் பிரதேச சபையின் ஆளும் தரப்பினர் இடையே உட்கட்சிப் பூசல் வலுவடைந்து வருகின்றது. இந்த வகையான உட்கட்சி இழுபறி கடந்த வருடம் பிற்பகுதியில் ஆரம்பமாகியதை அடுத்து 2014 ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை நிறைவேற்ற முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் தவிசாளர் உதயகுமார் பதவி இழந்தார்.

புதிய தவிசாளராக க.துரைசிங்கம் நியமிக்கப்பட்டு கடந்த ஜூன் மாதம் பதவியேற்றார். ஆனால் உட்கட்சி இழுபறியோ தீர்ந்தபாடில்லை. வாக்கெடுப்பு நடத்தக் கூடிய நிலையில் தவிசாளருக்குப் பெரும் பான்மை இல்லாததால் இயல்பு நிலைச் செயற்பாடுகள் பாதிப்படைந்துள்ளன.

இது தொடர்பாக வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் தமிழரசுக் கட்சி மேலிடத்துக்கு முறையீடுகள் செய்யப்பட்டதை அடுத்து முதலமைச்சரின் பிரதிநிதியாக வடக்கு மாகாண உள்ளூராட்சி நிர்வாகத்துக்குப் பொறுப்பான மாகாண சபை உறுப்பினர் பசுபதி அரியரத்தினம் இந்த மாதம் முற்பகுதியில் ஆளுந்தரப்பு உறுப்பினர்களைப் புத்தூரில் சந்தித்து ஆலோசனை வழங்கினார். ஆனால் நிலைமை சீரடையாதநிலையில் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தவிசாளரை நேரில் சந்தித்துக் கலந்துரையாடி ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

வருட இறுதியில் இயல்பு நிலையில் வரவு - செலவுத் திட்டத்தைத் தயாரித்து நிறைவேற்றத் தவறினால் ஏற்படக் கூடிய நிலைமை, இடை நிறுத்தப்பட்ட நெல்சீப் திட்ட வீதி அமைப்புக்களை நிறைவேற்ற வேண்டியதன் அவசியம், ஜனநாயகப் பண்புசார் நிலையில் ஆளுந்தரப்பு மற்றும் பிரதேச சபை உறுப்பினர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து பொதுத் தீர்மானத்தை மேற்கொள்ளுதல், பொதுமக்கள் மற்றும் வரியிறுப்பாளர் தேவைகளை நிறைவு செய்தல், அபிவிருத்தித் திட்டங்களை உரிய காலவேளையில் நிறைவேற்றுதல் தொடர்பாக தவிசாளருக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. (த-11)



கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியில் இடம் பெற்ற பரிசில் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் வரவேற்கப்படுகிறார். (த-122)

# அக்கரைப்பற்றுக்கு பருத்தித்துறையில் இருந்து பஸ் சேவை

யாழ்ப்பாணம்,ஒக். 24

பருத்தித்துறை பஸ் நிலையத்திலிருந்து அக்கரைப்பற்றுக்கான பஸ் சேவை இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் ஆரம்பமாகின்றது.

பிற்பகல் 6.30மணிக்கு கொடிகாமம் - வவுனியா - மட்டக்களப்பு ஊடாக அக்கரைப்பற்று வரைக்கும், அக்கரைப்பற்றிலிருந்து 9 மணிக்கு ஆரம்பமாகி மட்டக்களப்பு - வவுனியா- கொடிகாமம் ஊடாகப் பருத்தித்துறை வரைக்கும் பயணிகளின் நன்மை கருதி பஸ் சேவை நடத்தப்படவுள்ளது. என இ.போ.ச. பிராந்திய முகாமையாளர் தெரிவித்தார். (த-173)

# முதியோர் இல்ல அனுமதிகள் தற்காலிகமாக இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், செப்.24

கைதடி அரச முதியோர் இல்லத்தில் முதியோர்களை இணைத்துக் கொள்வது தற்போது மட்டுப்படுத்தப்பட்டிருப்பதாக இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இல்லத்தின் 3ஆம் , 5ஆம் இலக்க விடுதிகள் புனர் நிர்மாணம் செய்யப்பட்ட வருகின்றமையால் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இதனால் தற்போதைக்கு முதியோர்களை இணைத்துக் கொள்வதை இல்ல நிர்வாகம் மட்டுப்படுத்தியுள்ளது.

அத்துடன் மழைகாலம் ஆரம்பித்துள்ளதால் இல்லத்தின் சுகாதாரம் மற்றும் தூய்மை பேணும் பொருட்டு முதியோர்களை அளவுக்கு அதிகமாக இணைத்துக் கொள்வதை மட்டுப்படுத்தவேண்டியுள்ளது.

தற்போது இந்த முதியோர் இல்லத்தில் மொத்தமாக 181 முதியோர்கள் பாராமரிக்கப்பட்டு வருகின்றனர். இதில் 103 ஆண் முதியோர்களும், 78 பெண் முதியோர்களும் உள்ளனர் - என்றார். (த-17)

# யாழ்.நகரில் உணவகங்கள் தீவிரமான கண்காணிப்பில்

யாழ்.நகரில் உள்ள உணவகங்கள், உணவு கையாளும் நிலையங்கள், தேநீர்ச் சாலைகள் போன்றவற்றைக் கண்காணிக்கும் பணியில் சுகாதாரப் பகுதியினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

தற்போது மழைக் காலம் ஆரம்பமாகியுள்ளதால் சுகாதார நடைமுறைகளை மேலும் இறுக்கமாகப் பேணுவதில் சுகாதாரப் பகுதியினர் அதிக கவனம்செலுத்தி வருகின்றனர்.

உணவகங்கள், தேநீர்க் கடைகள், உணவு தயாரிக்கும் இடங்கள் போன்றவை சுகாதார முறையில் செயற்படுகின்றனவா என்பதைச் சோதனையிடுவதில் மாநகர சுகாதாரப் பகுதியினர் ஈடுபட்டுள்ளனர்.

மழை பெய்ய ஆரம்பித்துள்ளதால் தொற்றுநோய்கள் பரவலாம். இதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சுத்தம் பேணும் நடைமுறையைப் பின்பற்று மாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் உணவகங்களில் பணியாற்றும் பணியாளர்கள் மருத்துவப் பரிசோதனைக்கு உட் படுத்தப்பட்டு அவர்களுக்கு மருத்துவச் சான்றிதழ், விசேட அடையாள அட்டை என்பன வழங்கப்பட்டு வருவதாக மாநகர பொதுச் சுகாதாரப் பரி சோதகர் ஒருவர் தெரிவித்தார். (த-17)

# நூலகர்கள் இன்றி இரு நூலகங்கள்

தென்ராட்சி, ஒக் 24

சாவகச்சேரி நகர சபையின் இரண்டு நூலகங்கள் நூலகர்கள் சேவையில் இல்லாமல் இயங்கி வருகின்றன. சாவகச்சேரி மற்றும் நுணாவில் ஆகிய பொது நூலகங்களே நூலகர்கள் இன்றி இயங்குவதாகத் தெரி விக்கப்பட்டது.

நுணாவில் பொது நூலகம் கடந்த இரண்டு வருடங்களாகவும் சாவகச்சேரி பொது நூலகம் கடந்த மூன்று மாதங்களாகவும் நூலகர் இன்றி இயங்குவதால் வாசகர்கள் சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்பட்டது.

இங்கு கடமையாற்றிய நூலகர்கள் இளைப்பாறிச் சென்ற போதிலும் இதுவரை நூலகர்கள் நியமிக்கப்படவில்லையெனவும், இந்த நூலகங்கள் நூலகப் பரிசாரகர்களின் மேற்பார்வையில் இயங்கி வருவதாகவும், இவ்விடயம் தொடர்பாக மாகாண உள்ளூராட்சி அமைச்சுக்கு அறிவித்தும் நூலகர்கள் நியமிக்கப்படவில்லையெனவும் நகர சபை வட்டாரங்கள் தெரிவித் தன. (த-9)

# கழிவு ஒயிலால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு குடிதண்ணீர்

வலி.வடக்கு, ஒக். 24

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் உள்ள மல்லாகம் பகுதியில் உள்ள கிணறுகளில் கழிவு ஒயில் மற்றும் கிறீஸ் என்பன கலக்கின்றன என கண்டறியப்பட்ட நிலையில் இந்தப் பகுதிகளில் உள்ள பொது மக் களுக்குக் குடிதண்ணீர் வச தியை ஏற்படுத்திக்கொடுப்பது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று வியாழக்கிழமை மல்லாகம் பகுதயில் உள்ள கிணறுகளில் கழிவு ஒயில் மற்றும் கிறீஸ் என்பன கலப்பது சம்பந்தமாக ஆராயும் கூட்டம் வலி.வடக்கு பிரதேசசெயலாளர் தலைமையில் பிரதேச செயலக மண்டபத்தில நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், வலி. வடக்குப் பிரதேச சபையின் உப தவிசாளர் ஆர்.சஜீவன் மற்றும் கிராம அலுவலர்கள், வெளிக்கள அலுவலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டார்கள்.

கிணறுகளில் ஒயில் கலப்பது சம்பந்தமாகப் பல விடயங்கள் ஆராயப்பட்ட நிலையில் தற்போது உடனடியாகப் பாதிப்படைந்துள்ள கிணறுகள் அமைந்துள்ள மல்லாகம் காட்டுத்துறை பகுதி மக்களுக்குப் பிரதேச சபையின் உதவியுடன் நீர்த்தாங்கிகள் வைத்துக் குடிதண்ணீரை வழங்க நடவடிக்கை எடுப்பது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது இந்தப் பகுதிகளில பத்துக்கும் மேற்பட்ட கிணறுகள் பாதிக்கப்பட்டுள்ளன என இனங் காணப்பட்டுள்ளதாகப் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் தகவல்களின் மூலம் தெரிய வந்துள்ளது. (த-86)

# மழைக் கவசம் இல்லாமல் தபால் பணியாளர்கள் சிரமம்

தற்போது மழைக் காலம் ஆரம்பித்துள்ளதால் மழைக் கவசம் இன்றித் தபால்களை விநியோகிப்பதில் தாம் சிரமப்படுவதாகத் தபாலக விநியோகப் பணியாளர்கள் தெரிவித்தனர்.

யாழ்.பிரதேச தபாலகம் மழைக் கவசங்களைத் தமக்குப் பெற்றுத் தராமையால் மழை பெய்யும் வேளைகளில் தபால்களை விநியோகிப்பதில் தாம் சிரமங்களை எதிர்கொள்வதாக அவர்கள் கூறுகின்றனர்.

தபால் விநியோகப் பணியாளர்களில் அநேகமானவர்கள் தமது சொந்தப் பணத்தில் மழைக் கவசங்களைப் கொள்வனவு செய்து தபால் விநியோகத்தின் போது பயன்படுத்தி வருகின்றனர். சில பணியாளர்கள் மழைக்கு மத்தியில் குடைகளைப் பிடித்தவாறு தபால் விநியோகம் செய்கின்றனர்.

இது குறித்து யாழ். பிரதம தபாலகத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, விநியோகப் பணியாளர்களுக்கு மழைக் கவசம் வழங்குவது குறித்து ஆராயப்பட்டுள்ளது. குறிப்பாக இந்த மழைக் கவசங்களை அடுத்து வரும் சில நாள்களில் விநியோகிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (த-17)

# 5ஆம் தர புலமைப்பரிசில் குறித்து பூரணமான மீளாய்வு வேண்டும்

## அரசிடம் கோருகிறார் சிவசக்தி ஆனந்தன் எம்.பி

வவுனியா, ஒக். 24
ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பாக பூரணமான மீளாய்வு செய்தல் மிக அவசியமாகும். அரசு இதனைப் புரிந்து கொண்டு மிக விரைவாக செயற்பட வேண்டும். இவ்வாறு தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன்.

இந்த வருடம் புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளில் மாகாண ரீதியில் 2ஆம் இடத்தையும், தேசிய ரீதியில் 7ஆம் இடத்தையும் பெற்ற புதுக்குளம் கனிஷ்ட வித்தியாலயத்தைக் கௌரவிக்கும் விதமாக இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கல்வியின் முக்கியத்துவம் அறியாத இந்த வயதில் இந்தப் பரீட்சை அவர்களுக்குத் தேவை தானா என எண்ணத் தோன்றுகின்றது. உண்மையில் இந்தப் பரீட்சை 8ஆம் தரத்தில் இடம்பெற வேண்டிய பரீட்சை. ஆசிரிய வளமும் பௌதிக வளமும் குவிந்து கிடக்கின்றது. கிராமப் புற மாணவர்கள் கல்விக்காகப் பெரும் கஷ்டப்படுகின்றார்கள் ஆனால் அவர்களே சாதிக்கின்றனர்.

அதற்கு இந்தப் பாடசாலை ஒரு எடுத்துக்காட்டு. கிராமப் புறங்களில் கல்வியில் கூடிய கவனம் செலுத்தப்படவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வவுனியா வடக்கு



கல்விப் பணிப்பாளர் திருமதி பராசக்தி கனகலிங்கமும், கௌரவ விருந்தினர்களாக வவுனியா வடக்கு வலய முன்னாள் கல்விப் பணிப்பாளர் அன்ரன் சோமராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வவுனியா வடக்கு வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சத்தியலிங்கம் விஜயகுமார், மாகாண சபை உறுப்பினர்களான இந்திரராசா, தியாகராஜா ஆகியோரும் கலந்து கொண்டனர். (த-ரி)

## நாளாந்தம் அழிக்கப்படும் நெற்பயிர்கள்

முல்லைத்தீவு, ஒக் 24
தற்போதுள்ள கஷ்டமான நிலையிலும், 20 கிலோ விதை நெல் எம்மால் ஆயிரத்து 800 ரூபாவுக்குக் கொள்வனவு செய்து விதைக்கப்பட்ட காலபோக நெற்செய்கை, பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்படாமையால் நாளாந்தம் கால்நடைகளால் அழிக்கப்பட்டு வருவதை கமக்கார அமைப்பினரோ அல்லது சம்பந்தப்பட்டவர்களோ கவனத்தில் எடுக்கவில்லை எனப் பாதிக் கப்பட்ட விவசாயிகள் தெரிவித்தனர்.

ஒட்டுசுட்டான் கமநலச் சேவை நிலையத்திற்குட்பட்ட கற்சிலைமடு பெரியகுளத்தின் கீழ் செய்கை பண்ணப்பட்ட காலபோக நெற்செய்கை பாதுகாப்பு சுற்று வேலிகள் அமைக்கப்படாமையால் கால்நடைகளால் அழிக்கப்படுகின்றன.

விதைக்கப்பட்டு ஒரு மாதப் பயிராக வளர்ந்துள்ள நிலையிலும் வேலி அமைக் கப்படவில்லை. இதனால் கால்நடைகள் பயிரை அழிக்கின்றன.

பயிர்கள் அழிவதை எவரும் கண்டு கொள்ளவில்லை. இதனைக் கமநல சேவை உதவி ஆணையாளரின் கவனத்துக்கு விவசாயிகள் கொண்டு வந்துள்ளனர். இதற்கு உடன் நடவடிக்கை எடுக்கப்படவில்லையானால் பயிர்கள் முற்றாக அழிவதைத் தடுக்க முடியாது போய்விடும் என அவர்கள் கூறியுள்ளனர். (த-500)



ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிலுள்ள கற்சிலைமடு மற்றும் முத்தையன்கட்டு கிராமங்களுக்கான மின்விநியோகம் மற்றும் தையல் பயிற்சி நிலையம் என்பவற்றை கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சர் ரிசாத் பதியுதீன் திறந்து வைத்தார். இந்த நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் 1 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் நா.வன்னியசிங்கம் தலைமையில் நடைபெற்றது. (த-500)

## விவசாயச் சுற்று வேலிகள் அமைப்பதற்கு இடிகட்டைகள்

முல்லைத்தீவு, ஒக் 24
விவசாயச் சுற்று வேலிகள் அமைப்பதற்கு ஒரு விவசாயிக்கு தலா 500 இடிகட்டைகள் என்ற வீதத்தில் இடிகட்டைகள் வெட்டுவதற்கு வனவளப் பகுதியினரின் அனுசரணையுடன் அனுமதி வழங்கப்படுவதாக தட்டையர் மலையில் நடைபெற்ற ஏர்பூட்டு விழா வைபவத்தில் கலந்து கொண்ட முல்லைத்தீவு மாவட்ட கமநல சேவை உதவி ஆணையாளர் ஆர்.விஜயகுமார் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

விவசாய நிலங்களைப் பாதுகாக்க, சுற்றுவேலிகள் அமைக்கக் கட்டைகள் வெட்டுவதற்கான அனுமதி கிடைக்காமல் தாம் சிரமப்படுவதாக விவசாயிகள் தெரிவித்ததையடுத்து நாம் வனவளப் பகுதியினரின் அனுசரணையுடன் ஒரு விவசாயிக்கு 500 இடிகட்டைகள் என்ற வீதத்தில் இடிகட்டைகள் வெட்டுவதற்கு அனுமதி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே விவசாயிகள் கமக்கார அமைப்புகள் மூலம் இதற்காகத் தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளவேண்டும்- என்றார். அத்துடன் முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகளுக்குத் தேவையான விதை நெல்லைத் தென்பகுதியில் கொள்வனவு செய்யும் அதே விலைக்கு கமநலச் சேவை நிலையம் ஊடாகப் பெற்றுத் தர இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (த-500)

## நோயாளியை மோதிவிட்டு தப்பிச் சென்றார் இளைஞர்

மனநோயாளி ஒருவரை மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர் மோதி விட்டுத் தப்பிச் சென்றார். இதனால் குறித்த பெண்ணுக்குப் பொலிஸார் முதலுதவி வழங்கிய சம்பவம் நேற்று வவுனியா மக்கள் வங்கிக்கு முன் நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்றது.

ஏற்கனவே வீதி விபத்து ஒன்றினால் பாதிக்கப்பட்டு மனநோயாளியான குறித்த பெண் வீதியின் அருகே வந்தபோது மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர் அவருடன் மோதியுள்ளார். தான் தப்புவதற்காகக் குறித்த மன நோயாளிக்கு 500 ரூபாவைக் கொடுத்துவிட்டு ஓடிவிட்டார்.

இதன் பின்னர் குறித்த இளைஞரைப் பொலிஸார் தேடிச் சென்றபோதும் அவர் பிடிபடவில்லை. (த-402)

# வவுனியா குட்செட் வீதியில் தரிக்கும் பவுசர்களால் போக்குவரத்துப் பாதிப்பு

வவுனியா, குட்செட் வீதியில் நிறுத்தப்படும் தனியார் நிறுவனத்துக்குச் சொந்தமான எண்ணெய் பவுசர்களால் அந்த வீதியால் போக்குவரத் துச்செய்யும் பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கின்றனர். வவுனியா, குட்செட் வீதியில் உள்ள தனியார் ஒருவருக்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு எண்ணெய் எடுத்து வரும் பவுசர்கள் நீண்ட நேரமாகக் குட்செட் வீதியில் நிறுத்தப்படுகின்றன. குறிப்பாகப் பாடசாலை, அலுவலகம் செல்லும் நேரம், பாடசாலை முடியும் நேரம்



ஆகிய வேளைகளில் இவ்வாறு வாகனங்கள் வீதியில் தொடர்ச்சியாக நிறுத்தப்படுவதால் அப்பகுதியில் அடிக்கடி போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதுடன் விபத்துக்களும் ஏற்படக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளதாக மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். (த-421)

# அடிப்படை வசதிகளின்றிக் குஞ்சுக்குளம் கிராம மக்கள்

மன்னார், ஒக் 24
குஞ்சுக்குளம் கிராமமானது மாதா கிராமம், பெரிய குஞ்சுக்குளம், பெரிய முறிப்பு ஆகிய மூன்று கிராமங்களையும் உள்ளடக்கிய ஒரு கிராமமாக விளங்குகின்றது.

எனினும் குறித்த கிராமங்களில் வாழ்கின்ற மக்கள் எவ்வித அடிப்படை வசதிகளும் அற்ற நிலையில் பல்வேறு துன்ப துயரங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருவதாக குஞ்சுக்குளம் பங்குத்தந்தை அருட்தந்தை எஸ்.சுகுணராஜ் தெரிவித்தார். குஞ்சுக்குளம் பகுதியில் இடம் பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முசலி பிரதேசச் செயலாளர் பிரிவில் உள்ள மாதா கிராமம், பெரிய குஞ்சுக்குளம், பெரிய முறிப்பு ஆகிய மூன்று கிராமங்களையும் உள்ளடக்கிய நிலையில் குஞ்சுக்குளம் கிராமம் உள்ளது. குறித்த மூன்று கிராமங்களையும் சேர்ந்த 350 குடும்பங்கள் இங்கு வாழ்ந்து வருகின்றன. குறிப்பாக இந்த மக்கள் வாழ்வாதார அடிப்படையில் விவசாயிகளாக உள்ளனர்.

எனினும் இவர்கள் பெரிய அளவில் விவசாயத்தை மேற்கொள்ளாது சிறிய அளவில் விவசாயத்தை மேற்கொண்டு தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தி வருகின்றனர்.

ஆனால் மழை காலங்களில் மக்களின் போக்குவரத்து குஞ்சுக்குளத்தில் ஏற்படும் வெள்ளப் பெருக்கினால் துண்டாடப்படுவது வழக்கமாக இருந்து வருகிறது. போக்குவரத்து மற்றும் தொடர்புகள் துண்டிக்கப்படுவதனால் பல்வேறு அவசர தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடியாத நிலை இக் கிராம மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக மருத்துவம் மற்றும் ஏனைய தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாத நிலை ஏற்படும். குஞ்சுக்குளம் பிரதான வீதியில் இருந்து மாதா கிராமம், பெரிய குஞ்சுக்குளம், பெரிய முறிப்பு ஆகிய 3 கிராமங்களுக்குச் செல்லும் வீதியின் தொடர்பும் மழை காலங்களில் துண்டிக்கப்படுகின்றது.

இங்கு மருத்துவ வசதிகள் இல்லாத நிலை உள்ளது. வாரத்துக்கு ஒரு தடவை நடமாடும் வைத்திய சேவை மாத்திரமே இங்கு இடம்பெறுகின்றது.

அதுவும் குஞ்சுக்குளம் வீதியில் ஆறு பெருக்கெடுத்து வெள்ளப் பெருக்கு ஏற்பட்டால் அந்த நடமாடும் சேவைகூட இடம்பெற மாட்டாது.

எனவே இக்கிராம மக்களின் நலன் கருதி குறித்த மூன்று கிராமங்களையும் உள்ளடக்கிய ஒரு மருத்துவ நிலையத்தை அமைத்துத் தர வேண்டும். அத்துடன் குஞ்சுக்குளம் பிரதான பாலம் வடக்கு மாகாண சபையூடாக அமைக்கப்படுவது பெரியதொரு வரப்பிரசாதம் என்றுதான் கூற முடியும்.

தற்போது இந்தக் கிராமத்துக்குப் போக்குவரத்து சேவை பற்றாக்குறையாக உள்ளது. ஒரு நாளைக்கு ஒரு தடவை மாத்திரமே பஸ் சேவை இடம்பெறுகின்றது. இதனால் அவசர தேவைகளுக்கு போக்குவரத்துக்களை மேற்கொள்ள முடியாத நிலை உள்ளது. எனவே குறித்த போக்குவரத்துச் சேவைகளை மேலும் அதிகரிக்க வேண்டும்-என்றார். (த-56)



இந்துக்களின் பண்டிகையான தீபாவளிப் பண்டிகை நேற்றுமுன்தினம் கொண்டாடப்பட்டது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வாசஸ்தலமான அலரி மாளிகையில் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு விசேட வழிபாடுகள் நடத்தப்பட்டன. அதில் ஜனாதிபதி கலந்துகொண்டார்.

# ரணிலுக்குப் பொன்சேகா ஆதரவு வழங்க திட்டம்?

## எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில்

கொழும்பு, ஒக்.24

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில், முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தலைமையிலான ஜனநாயகக் கட்சி, ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தலைமையிலான பிரதான எதிர்க்கட்சிக்கு ஆதரவளிப்பதற்குத் தீர்மானித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி தேர்தலில் தான் போட்டியிடபோவதாக பொன்சேகா ஏற்கெனவே அறிவித்திருந்தார். இந்த நிலையில், அவருக்கு வாக்குரிமை இல்லை என்று, சட்ட மா அதிபர் திணைக்களம் தேர்தல்கள் திணைக்களத்துக்கு அறிவித்திருந்தது.

இதனையடுத்து தன்னுடைய மனைவியை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துவதற்கு அவர் தீர்மானித்திருந்தார் என்று தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்த நிலையிலிலேயே, எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் அவர் சார்ந்த ஜனநாயகக் கட்சி, பிரதான எதிர்க்கட்சிக்கு ஆதரவளிப்பதற்கு தீர்மானித் துள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பை ஜனநாயகக் கட்சி, அடுத்த வாரம் விடும் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. (ற)

# புலிகளின் தலைவர் பிரபாகரனை கொல்ல திட்டம் தீட்டியது ஐ.தே.க.

## அந்தக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ போட்டுடைத்தார்

கொழும்பு, ஒக்.24

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைக் கொலை செய்வதற்கு இரண்டாம் நிலைத் தலைவர் மாத்தையாவுக்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆயுதம் வழங்கியது என்று தெரிவித்துள்ளார் அந்தக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

அண்மையில் சூரியவெளரன்முதுவெள என்னும் இடத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"போர் இடம்பெற்ற காலத்தில் பிரபாகரனுக்கும் மாத்தையாவுக்கும் இடையில் முரண்பாட்டு நிலைமை ஏற்பட்டது.



இந்த முரண்பாட்டை பயன்படுத்தி பிரபாகரனை கொலை செய்ய ஐக்கிய தேசியக் கட்சி தீட்டம் தீட்டியது. அதற்காக மாத்தையாவுக்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆயுதங்களையும் பணத்தையும் வழங்கியது.

மாத்தையாவின் ஊடாக பிரபாகரனை கொலை செய்து போரை முடிவுக்குக் கொண்டு வருவதே ஐக்கிய தேசியக் கட்சியின் திட்டமாக அமைந்திருந்தது.

இந்த திட்டம் வெற்றியளித்திருந்தால் ஆயிரக்கணக்கான உயிர்களை பாதுகாத்திருக்க முடியும். எனினும் துரதிர்ஸ்டவசமாக இந்த திட்டம் தோல்வியடைந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகள் மாத்தையாவை கொலை செய்தனர். போரின் போது வகுக்கப்படும் அனைத்து திட்டங்களும் வெற்றியளிப்பதில்லை.

போர்த் தந்திரோபாயங்கள் வெற்றியளித்தால் மக்கள் பாராட்டுவார்கள். தோல்வியடைந்தால் எல்லோருடைய விமர்சனங்களையும் எதிர்நோக்க நேரிடும். இதுவே உலக நியதி"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# கனடா தாக்குதலுக்கு ஜனாதிபதி கண்டனம்



கொழும்பு, ஒக்.24

கனடாவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கண்டனம் வெளியிட்டுள்ளார்.

கனேடிய நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் துப்பாக்கிச் சூட்டு சம்பவமொன்று இடம்பெற்றது. பயங்கரவாதத்தை இல்லாதொழிக்க அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

உலகின் பல நாடுகளில் பயங்கரவாத தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன என்றும் கனடாவில் கூட பயங்கரவாத தாக்குதல்கள் இடம்பெறுகின்றமை கவலையளிக்கின்றது என்று ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

சம பங்காளர்களாக இணைந்து பயங்கரவாதத்துக்கு எதிராக போராட வேண்டிய அவசியம் எழுந்துள்ளது என்று தெரிவித்துள்ளார். தாக்குதல் சம்பவத்தில் கனேடிய படைவீரர் ஒருவர் கொல்லப்பட்டதுடன் குறைந்தபட்சம் ஒரு துப்பாக்கிதாரி கொல்லப்பட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (ற)

# பாக். புகலிட கோரிக்கையாளர் மீது தாக்குதல்

கொழும்பு, ஒக்.24

நீர்கொழும்பு பகுதியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் பள்ளிவாசல் ஒன்றில் தங்கியிருந்த பாகிஸ்தான் புகலிடக் கோரிக்கையாளர்கள் ஒன்பது பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

8 வயதுடைய பாகிஸ்தான் பிரஜை ஒருவருக்கும் அந்தப் பகுதியில் இருந்த இளைஞர்கள் சிலருக்கும் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் வலுவடைந்ததை அடுத்து அவர் தாக்கப்பட்டுள்ளார்.

பின்னர் தான் தங்கியிருந்த பள்ளியை நோக்கி அவர் சென்றதும் அவரைத் பின் தொடர்ந்து வந்த குழுவினர் அங்கும் தாக்குதல் நடத்தியுள்ளனர். அதனால் சிலர் காயமடைந்ததோடு பள்ளிக்கும் சேதம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது. (ற)

# ஆட்சியாளர்களது நடவடிக்கைகள் வெட்கமளிக்கும் வண்ணம் உள்ளன

## சரத் பொன்சேகா தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.24

நாட்டின் ஆட்சியாளரது நடவடிக்கைகள் வெட்கமளிக்கும் வகையில் அமைந்துள்ளன என்று ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அரசு எவ்வாறு பல்கலைக் கழக மாணவர்களை நடத்துகின்றது என்பதனை கடந்த சில நாள்களாக அவதானித்து வருகின்றோம்.

நாட்டின் எதிர்கால சந்ததியினரையே அரசு இவ்வாறு நடத்துகின்றது"- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"உயர்கல்வி அமைச்சரின் நடவடிக்கைகள் குறித்தும் குறிப்பிட வேண்டியுள்ளது.

அறிவற்ற ஒரு மனிதனைப் போன்றே உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க செயற்பட்டு வருகின்றார். "- என்று தெரிவித்துள்ளார். (ற)

# தேர்தலுக்கு முன்னதாக 1 லட்சம் தே.அ.அட்டைகள்

கொழும்பு, ஒக்.24

தேசிய அடையாள அட்டை இல்லாத சுமார் ஒரு லட்சம் பேருக்கு அதனை வழங்க இலங்கை ஆட்பதிவுத் திணைக்களம் தீர்மானித்துள்ளது. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக அடையாள அட்டைகள் வழங்கப்படும்.

தேசிய அடையாள அட்டைகள் இல்லாதவர்கள் நவம்பம் 30 ஆம் திகதிக்கு பின்னர் விண்ணப்பிக்குமாறு ஆட்பதிவுத் திணைக்களம்பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (ற)



# நாட்டிலுள்ள பொலிஸ் நிலையங்கள் அரசின் காரியாலயங்களே

## கடுமையாகச் சாடுகின்றார் மாதுலுவே சோபித தேரர்

கொழும்பு, ஒக்.24

நாட்டின் பொலிஸ் நிலையங்கள் அரசின் கட்சிக் காரியாலயங்களாக இயங்கி வருகின்றன என்று குற்றஞ்சாட்டியுள்ளார் கோட்டே ஸ்ரீ நாக விஹாரையின் பீடாதிபதி மாதுலுவே சோபித தேரர்.

கடந்த செவ்வாய்க்கிழமை குளியாப்பிட்டி நகரில் நடைபெற்ற கூட்டமொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"இன்று பொலிஸ் நிலையங்கள் அரசின் கட்சிக் காரியாலயம் என்ற அளவுக்கு அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது.

மஹிந்த சிந்தனை கொள்கைத் திட்டத்தில் முதலாம் தவணைக் காலத்திலேயே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமயை ரத்து செய்வதாக உறுதியளிக்கப்பட்டுள்ளது.

இந்த மரணப் பொறியை அமைத்த ஐக்கிய தேசியக் கட்சியும் இதனை நிராகரிக்கின்றது. எல்லோ ரா லும் வெறுக்கப்படும் முறைமை யாருக்காக நடைமுறைப் படுத்தப்படுகின்றது. உலகில் எங்கும் சட்டத்திற்கு மேல் அரசியல்வாதிகளுக்கு அதிகாரம் கிடையாது. எனினும் இலங்கையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு சட்டத்துக்கு மேல் அதிகாரம் காணப்படுகின்றது.

ஆயிரம் கொலை செய்தாலும் ஜனாதிபதியை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தி வழக்குத் தொடர முடியாது. நிறைவேற்று அதிகாரம் என்பது நாடாளுமன்றம் நீதிமன்றம் அரசியல் அமைப்பு மற்றும் மக்களுக்கு பொறுப்பு சொல்ல வேண்டியதில்லை.

கடந்த காலங்களில் மிக அற்புதமான தண்டனைகள் விதிக்கப்பட்டன. ரத்துபஸ்வல சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான நபருக்கு தூதுவர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

முன்னாள் பொலிஸ் மா அதிபருக்கு தண்டனையாக தூதுவர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

நீங்களும் குற்றம் செய்யுங்கள் உங்களுக்கும் நிச்சயமாக தூதுவர் பதவி கிடைக்கும்.

லஞ்ச ஊழல் தவிர்ப்பு ஆணைக்குழு இயங்கி வருகின்றது. லஞ்சம் வாங்குகின்றார்கள், ஆனால் பிடிக்கப்படுவதில்லை.

இலங்கை போதைப் பொருளில் தன்னிறைவு அடைந்துள்ளது. ஜெயலலிதா இலங்கையில் இருந்தால் கடவுளே என்று பேசாமல் இருப்பார்.

இந்த வறிய நாட்டில் ஜனாதிபதியின் ஒருநாள் செலவு இரண்டுகோடியே முப்பத்து நான்கு லட்ச ரூபாவாகும்.

இந்தியாவில் 27 அமைச்சர்கள் கடமையாற்றி வருகின்றனர். இலங்கையில் விவசாயத்துக்கு மட்டும் 23 அமைச்சர்கள் இருக்கின்றார்கள்.

உச்சநீதிமன்றம், சட்ட மா அதிபர் திணைக்களம் போன்றவை ஜனாதிபதியின் கீழ் இயங்கி வந்தால் நியாயத்தை எதிர்பார்க்க முடியுமா?.

அனைத்து சக்திகளும் நிறைவேற்று அதி காரத்தை இல்லாதொழிக்க இணங்கியுள்ளன"- என்று தெரிவித்துள்ளார். (ற)

தெலுங்கில் புகழ் பெற்ற தொலைக்காட்சி வர்ணனையாளராக இருந்த சுவாதி, தெலுங்குப் திரைப்படங்களில் நடிக்க ஆரம்பித்தார். அதன் பின் 2008 இல் வெளிவந்த சுப்பிரமணியபுரம் படம் மூலம் தமிழில் நாயகியாக அறிமுகமானார்.

சில மலையாளப் படங்களிலும் நடித்துள்ளார். தமிழில் தொடர்ந்து 'போராளி, இதற்குத்தானே ஆசைப்பட்டாய் பாலகுமாரா, வடகறி' ஆகிய படங்களில் நாயகியாக நடித்தார்.

தற்போது 'அமளி துமளி, யட்சன்' ஆகிய தமிழ்ப் படங்களிலும், டபுள் பரல் என்ற மலையாளப் படத்திலும் நடித்து வருகிறார். திரையுலகில் அறிமுகமாகி ஒன்பது வருடங்கள் கடந்துள்ள நிலையில் சுவாதி தற்போது திருமணம் செய்து கொள்ள முடிவெடுத்துள்ளாராம்.

கடந்த சில மாதங்களாகவே அவருடைய திருமணத்தைப் பற்றி பல்வேறு விதமான வதந்திகள் பரவி வந்தன. அவற்றிற்கெல்லாம் மறுப்பு தெரிவித்த சுவாதி, தற்போது திருமணம் பற்றிய தகவலை அவரே சொல்லியிருக்கிறார். 'சில நாட்களுக்கு முன் எனது பெற்றோரிடம், திருமணம் செய்து கொள்ளும் எனது சம்மதத்தைத் தெரிவித்து விட்டேன். அவர்களும் மாப்பிள்ளையை தேட ஆரம்பித்து விட்டனர். சரியான நேரத்தில் சரியாக எடுக்கும் முடிவு சரியான வெற்றியைத் தரும்' என்கின்றார்.



## சுப்பிரமணியபுரம் சுவாதிக்கு டும் டும் !

## காதல் என்பது கரண்ட் போன நேரத்துல வாற கொசு மாதிரி



## தூங்கவும் முடியாது துரத்தவும் முடியாது



## புலியைப் பிடிக்க மூன்று வழிகள்

நியூட்டன்: முதலில் புலி உன்னைப் பிடிக்கட்டும். அதன் பின்னர் நீ புலியைப் பிடித்துக் கொள்ளலாம்

ஐன்ஸ்டீன்: புலி சோர்வடையும் வரை துரத்து. அதன் பின்னர் புலியைப் பிடித்துக் கொள்ளலாம்.

பொலிஸ்: ஒரு பூனைய பிடித்து அது புலி என்று ஒத்துக் கொள்ளும் வரைக்கும் அடி.

## விபரீதத்தால் விபத்து



பெண்ணொருவரின் மார்பகங்களை காட்சிப்படுத்தும் வகையில் விளம்பர நிறுவனம் ஒன்றினால் மேற்கொள்ளப்பட்ட விளம்பர உத்தி ஒன்றினால் 24 மணித்தியாலத்துக்குள் 500 இற்கும் மேற்பட்ட வாகன விபத்துக்கள் ஏற்பட்ட விபரீதச் சம்பவமொன்று ரஷ்யாவின் தலைநகரான மொஸ்கோவில் இடம்பெற்றுள்ளது. மொஸ்கோ நகரில் உள்ள 'சரப்பேன்' என்ற விளம்பர நிறுவனம், ஒரு பெண் தனது இரு மார்பகங்களையும் கையில் ஏந்தியவாறு இருக்கும் வகையில் அமைந்த பெரிய படத்தை கொண்ட விளம்பரக் காட்சியை 30 வாகனங்களில் வைத்து பேரணியொன்றை நடத்தியது.

அதாவது மொஸ்கோ நகரில் உள்ள வர்த்தக நிலையங்களின் விளம்பரங்களை இந்த சுவரொட்டியின் பக்கத்தில் வைத்தால் மக்களிடத்தில் கூடுதலான வரவேற்பை பெற முடியும் என்பதை நோக்காக கொண்டே இந்த வாகனப் பேரணியைக் குறித்த நிறுவனம் மேற்கொண்டுள்ளது. இந்த வாகனப் பேரணியால் குறித்த தினத்தில் 24 மணித்தியா லங்களில் 517 விபத்துக்கள் பதிவாகியுள்ளன.

எனினும் குறித்த விளம்பர நிறுவனம், விளம்பரங்களை மக்களிடத்தில் எளிதாகக் கொண்டு செல்ல மேற்கொண்ட புதிய உத்தியால் பயன; டைந்துள்ளோம். அதன் விளைவே 517 விபத்துகள் பதிவாகியுள்ளன. மேலும் வாகன விபத்துக்களால் பாதிக்கப்பட்ட வர்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்த நிறு வனம் தெரிவித்துள்ளது.

## விபூதி தோன்றிய விதம்

ஞானக்கதிர்

ஆணவ மலத்தை நீக்கி அருளும் வேதியர் சிவபெருமான். அவர் திருவருளாகிய உமாதேவியார் பத்தினியாகவும் பிரளய வெள்ளத்தையே நீராகவும் அண்டங்களையே மண்டபங்களாகவும் பூவுலகமே வேதிகையாகவும், அரி, பிரமன், இந்திரன் முதலிய தேவர்கள் யாவரும் அவியாகவும் ஏனைய உயிர்களைப் பசுக்களாகவும் கொண்டு தமது நெற்றியாகிய குண்டத்தில் அக்கினிக் கண்ணில் அக்கினியை மூட்டி யாகம் செய்தருளினார். அந்த யாகத்தில் தோன்றிய வெண்ணீற்றைத் தமது திருமேனியில் பரவப் பூசி விளங்கினார். இந்தத் திருநீறு அகங்காரம், மமகாரம் எனப்படும். அகப்புறப் பற்றுக்கள் அழியும்படி மூவகை ஆன்மாக்களான விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் முதலியோரைத் தத்தம் சரீரத்தில் சிவபெருமான் தரிக்கச் செய்தார் என்று தணிகை புராணம் குறிப்பிடுகிறது.



## காதல் என்றால் என்ன ?


தென்றல் தொடரில் புஜ்ஜிம்மாவாக வந்து கலக்கியவர் சின்னத்திரை நடிகை தேவிக்ருபா. எத்தனையோ தொடர்களில் நடித்திருந்தாலும் புஜ்ஜிம்மாதான் சின்னத்திரை ரசிகர்களிடம் தேவிக்ருபாவை அடையாளப்படுத்தியது. எட்டாவது ஆண்டு படித்துக் கொண்டிருக்கும்போதே பெண் நிகழ்ச்சித்தொகுப்பாளராகத் தொலைக்காட்சி அலைவரிசையில் நுழைந்தவர் தேவிக்ருபா. சின்னத்திரை, சினிமா என்று கலக்கிக் கொண்டிருக்கிறார். 'இணைக்கோடுகள், ஆனந்தம், தீர்க்க சுமங்கலி, கஸ்தூரி ஆகிய தொடர்களில் நடித்த தேவிக்ருபா, பயமறியான் படத்தில் இரண்டாவது நாயகியாக நடித்தார்.

இப்போது சின்னத்திரை, சினிமா என்று இரண்டிலும் தடம் பதித்துக் கொண்டிருக்கின்றார். சிறிய வயதிலிருந்து இந்தத் துறைக்குள் இருந்தாலும் இன்றுவரையில் யாரையுமே காதலிக்கவில்லையாம். இதுவரை காதல் அனுபவமே ஏற்பட்டதில்லையாம். அப்படி என்றால் என்ன? அது எப்படி இருக்கும் என்று கேட்கிறார்.

ஆனாலும் காதலித்துத்தான் திருமணம். செய்வேன் என்று கூறியுள்ளார். போங்க... நீங்களும் உங்கள் காதலும்...


## பறக்கும் கார்....

உலகின் முதலாவது பறக்கும் கார் விற்பனைக்கு வரவுள்ளது. இதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. எதிர்வரும் 29 ஆம் திகதி இந்தக் கார் விற்பனைக்கு வரவுள்ளதாக உற்பத்தி பணியில் ஈடுபட்ட பிரதம பொறியியலாளர் ஸ்டெபன் க்ளீன் குறிப்பிட்டுள்ளார். இந்தக் கார் வீதியில் பயணிக்கும் அதேவேளை ஆகாயத்தில் பறக்கவும் செய்கிறது. 1990 ஆம் ஆண்டு முதல் முன்னெடுக்கப்பட்ட முயற்சி தற்போது கைகூடியுள்ளதாக குறித்த காரின் உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர். எதிர்வரும் 29 ஆம் திகதி ஆஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள கண்காட்சியின் போது இந்தக் கார் விற்பனைக்காக அறிமுகப்படுத்தப்படவுள்ளது.




# குறுஞ்செய்தி மூலம் தகவல்களை தானாகவே அழிக்கும் சாதனம்

புதிய தொழில்நுட்பங்கள் அறிமுகமாகும் சந்தர்ப்பங்களில் கூடவே பல பிரச்சினைகளும் அறிமுகமாகின்றன.
இவற்றில் தகவல்களைச் சேமிக்கப் பயன்படும் சாதனங்களில் உள்ள தனிப்பட்ட தரவுகள் திருடப்படுவதும் ஒன்றாகக் காணப்படுகின்றது. ஆனால் இதற்கும் தற்போது தீர்வு காணப்பட்டுள்ளது.
அதாவது குஞ்செய்தி (SMS) அனுப்புவதனூடாக அதில் பதிக்கப்பட்டுள்ள தரவு, தகவல்களைத் தானாகவே அழிக்கக் கூடிய SSD சேமிப்பு நினைவகம் உருவாக்கப்பட்டுள்ளது.
2.5 அங்குல அளவுடைய இந்தச் சாதனம் 128 GB சேமிப்புக் கொள்ளளவை உடையதாகவும், Micro USB மற்றும் SATAII இணைப்பிகள் மூலம் கணினியுடன் இணைக்கும் வசதியை உடையதாகவும் காணப்படுகின்றது.
மேலும் இந்தச் சாதனத்தை iOS மற்றும் Android இயங்குதளத்தைக் கொண்ட மொபைல் சாதனங்களினால் கட்டுப்படுத்த முடியும்.




# PHOTOSPHERE CAMERA அப்பிளிக்கேஷன் தற்போது IOS சாதனங்களிலும்

கூகுள் நிறுவனமானது iPhone உட்பட அப்பிளின் iOS இயங்குதளத்தினை அடிப்படையாகக் கொண்ட அனைத்து சாதனங்களுக்குமான PhotoSphere Camera அப்பிளிக்கேஷனை அறிமுகம் செய்துள்ளது.
இதேவேளை இந்த அப்பிளிக்கேஷன் ஆனது கூகுளினால் அறிமுகம் செய்யப்படும் நெக்ஸஸ் ஸ்மார்ட் கைப்பேசிகளில் நிறுவப்பட்டு வெளியிடப்படவுள்ளது.
இந்த அப்பிளிக்கேஷனின் உதவியுடன் 360 டிகிரியில் புகைப்படங்களை எடுத்து மகிழ முடியும்.
iOS சாதனங்களுக்கான PhotoSphere Camera அப்பிளிக்கேஷனை அப்பிளின் iTunes தளத்திலிருந்து தரவிறக்கம் செய்துகொள்ள முடியும்.



# மைக்ரோசொப்ட் அறிமுகம் செய்யும் விண்டோஸ் இயங்குதளம்

மைக்ரோசொப்ட் நிறுவனத்தால் கணினிகளுக்காக இறுதியாக அறிமுகம் செய்யப்பட்ட இயங்குதளமானது விண்டோஸ் 8.1 ஆகும்.
இதற்கு அடுத்தபடியாக விண்டோஸ் 9 இயங்குதளம் வெளிவரும் என எதிர்பார்க்கப்பட்டிருந்த நிலையில் அது தொடர்பான உத்தியோகபூர்வமற்ற பல தகவல்கள் வெளியாகியிருந்தன.
இந்த நிலையில் அடுத்த இயங்குதள பதிப்பாக விண்டோஸ் 10 இனை அறிமுகம் செய்யவுள்ளதாக மைக்ரோசொப்ட் நிறுவனம் அறிவித்துள்ளது.
2015ம் ஆண்டின் இறுதிப் பகுதியில் அறிமுகம் செய்யப்படவுள்ள இந்த இயங்குதளமானது பல புதிய அம்சங்களை உள்ளடக்கியுள்ளது.
இந்த இயங்குதளம் தொடர்பான பிறிவியூ Preview ஒன்றையும் மைக்ரோசொப்ட் நிறுவனம் வெளியிட்டுள்ளது.



# அப்பிளின் ஐ ஓ எஸ் 8 ஐ நிராகரிக்கும் மக்கள்

புத்தம் புது வசதிகளுடன் அப்பிள் நிறுவனம் iOS 8 இயங்குதளத்தை அறிமுகம் செய்துள்ள போதிலும், பயநர்களை வெகுவாக கவரவில்லை என தகவல்கள் தெரிவிக்கின்றன.
அப்பிள் நிறுவனம் தனது மொபைல் சாதனங்களுக்கான iOS 8 இயங்குதளத்தினைக் கடந்த 3 வாரங்களுக்கு முன்னர் அறிமுகம் செய்திருந்தது.
இவ்வாறு அறிமுகம் செய்யப்பட்ட ஒரு வாரத்தில் 46 சதவீதமான சாதனங்களில் புதிய இயங்குதளத்தினை பயநர்கள் பயன்படுத்த ஆரம்பித்து விட்டார்கள்.
எனினும் எஞ்சிய இரு வாரங்களில் வெறும் 1 சதவீதமான சாதனங்களில் மட்டுமே இந்த இயங்குதளம் நிறுவப்பட்டுள்ளது.
இதனால் அப்பிளின் புதிய இயங்குதளம் பயனர்களை வெகுவாகக் கவரவில்லை எனப் பரவலாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.
இதேவேளை iOS 7 இயங்குதளமானது 47 சதவீதமான சாதங்களிலும் அதற்கு முன்னர் வெளியிடப்பட்ட ஏனைய இயங்குதளப் பதிப்புக்கள் 6 சதவீதமான சாதனங்களிலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.



# HP அறிமுகம் செய்துள்ள புதிய டேப்லட்

தரமான கணனிகளை உற்பத்தி செய்வதில் முன்னணியில் திகழும் HP நிறுவனம் HP 10 Plus என்ற புதிய Android 4.4 KitKat டேப்லட் ஒன்றை அறிமுகம் செய்துள்ளது.
279.99 டொலர்கள் பெறுமதியான இந்த டேப்லட், 10.1 அங்குல அளவுடையதும், 1900 X 1200 Pixel Resolution உடையதுமான தொடுதிரையைக் கொண்டுள்ளது.
இது தவிர 1GHz வேகத்தில் செயல்படக்கூடிய Quadd Core Processor, பிரதான நினைவகமாக 2GB RAM, 16 GB சேமிப்பு நினைவகம் என்பவற்றையும் உள்ளடக்கியுள்ளது.
மேலும் 5 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெரா, 2 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமெரா என்பவும் தரப்பட்டுள்ளன.



# உலகை அசத்த வந்துள்ள புத்தம் புதிய ஹேம்

எக்ஸ் பொக்ஸ் வண் (Xbox One) சாதனம் மற்றும் கணனிகளில் பயன்படுத்தக்கூடிய புறொஜெக்ஸ்பாக் (Project Spark) என்ற கேமினை மைக்ரோசொப்ட் நிறுவனம் உருவாக்கியுள்ளது.
பயநர்களை வெகுவாக கவரக் கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இக்கேமை இலவசமாக தரவிறக்கம் செய்து பயன்படுத்திக்கொள்ள முடியும்.
எனினும் இதனுடன் மேலதிக மாக தரப்படும் விசேட ஒலிகள், எபெக்ட்கள், அனிமேஷசன்கள் போன்றவற்றை உள்ளடக்கிய பொதியை 39 டொலர்கள் செலுத்தி கொள்வனவு செய்ய வேண்டும் என்பது குறிப்பிடத் தக்கது.






# விற்பனையில் சாதனை படைத்தது எக்ஸ் பொக்ஸ் வண்

மைக்ரோசொப்ட் நிறுவனத்தினால் அறிமுகம் செய்யப்பட்டு விளையாட்டுப் பிரியர்கள் மத்தியில் பலத்த வரவேற்பைப் பெற்ற சாதனமாக எக்ஸ் பொக்ஸ் வண் (Xbox One) விளங்குகின்றது.
இந்தச் சாதனம் சீனாவில் கடந்த செப்ரெம்பர் மாதம் 29ம் திகதி அறிமுகம் செய்யப்பட்டது.
இவ்வாறு அறிமுகம் செய்யப்பட்டதிலிருந்து இரு தினங்களுக்கு முன்னர் வரை சுமார் 100,000 சாதனங்கள் விற்பனையா கியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளது.
சீன அரசின் அனுமதியுடன் சுமார் 37 நகரங்களில் இந்தச் சாதனம் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஒருங்கிணைக்கப்படாத அபிவிருத்தி பயனற்றது

ஒருங்கிணைக்கப்படாத - சரியான திட்டமிடல்கள் இல்லாத அபிவிருத்தியின் பயன் மாரி காலத்தில் மிக மோசமான அனுபவத்தை வடக்கு மக்களுக்குத் தந்து கொண்டிருக்கிறது.

அதிக உயரத்தில் அமைக்கப்பட்ட வீதிகள், ரயில் பாதைகள், அதற்கு ஏற்ப அமைக்கப்படாத கழிவு நீர் வடிகால்கள் மழை நேரத்தில் வெளியே செல்வதை வெறுக்கச் செய்கின்றன. பிரதான வீதிகள் தவிர்த்து ஏனைய அனைத்து இடங்களும் மழை பெய்த கொஞ்ச நேரத்திலேயே மிக மோசமாகிவிடுகின்றன. இவற்றினூடாகப் பயணிக்கும் அனுபவம் வாழ்க்கையில் வெறுப்பை ஊட்டிவிடுகின்றது. கார்களிலும் பஜரோக்களிலும் பறப்பவர்களுக்கு இது தெரியாமல் - புரியாமல் இருக்கலாம். ஆனால் சைக்கிள்களிலும் மோட்டார் சைக்கிள்களிலும் பயணிக்கும் சமானியர்களுக்கு மழை நாள்கள் ஒவ்வொன்றும் சோகக் கதைகள்தான்.

அதிலும் காலையில் பாடசாலைக்குக் குழந்தைகளை விடுவதற்காக வரும் அலுவலகம் போகும் பெற்றோரின் வேதனைகள் புரியும் தரமன்று.

சரியாக ஒருங்கிணைக்கப்படாத அபிவிருத்தியின் விளைவே இது. ஒரு குழந்தை வளர்ந்து பெரியவனாகும்வரை அதனது வளர்ச்சி சீராக இருக்க வேண்டும். அப்படி இல்லாமல், கால் மட்டும் பெருத்தால் அது யானைக் கால் நோய் எனப்படும். வேறு எந்தவொரு அங்கமும் ஏனைய அங்கத்தின் வளர்ச்சிக்கு மாறாக அதிகமான வளர்ச்சியை எட்டினால் அதனை நோய் என்றுதான் கணிப்பார்களே தவிர, வளர்ச்சி - அபிவிருத்தி என்று யாரும் கணிப்பதில்லை.

அதுபோலவே வடக்கில் ஒருங்கிணைத்து மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி நடவடிக்கைகள் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டதன் விளைவை நாம் இப்போது மழை காலத்தில் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். இதுவும் ஒருவகையில் நோயை ஒத்ததே.


வீதிகளும் ரயில் பாதைகளும் மாடிக் கட்டங்களும் விருத்தி அடைந்த அளவுக்கு வடக்கின் ஏனைய நகர, கிராம உட்கட்டுமானங்கள் அபி விருத்தியடையவில்லை. இதனாலேயே பருவ மழை நாள்கள் வடக்கு மக்களுக்கு மோசமான அனுபவத்தைத் தந்து கொண்டிருக்கிறது. வடக்கின் நகர, கிராம உட்கட்டுமானங்களை அவற்றை ஒருங்கிணைத்து மேற்கொள்ளத்தக்க அபிவிருத்தித் திட்டங்கள் எவையும் தயாரிக்கப்படவுமில்லை.

குடிதண்ணீர் விநியோகம், கழிவகற்றல் பொறிமுறை, வடிகால் பொறிமுறை, மாசுக் கட்டுப்பாடு, அடிப்படைச் சுகாதாரக் கட்டுமானங்கள்; நகர மற்றும் கிராம முகாமைத்துவம், கட்டுமான வசதிகள் என அனைத்தையும் ஒருங்கிணைத்த திட்டங்கள் மட்டுமே உண்மையான வளர்ச் சியை ஏற்படுத்தும். அதிலும் போரால் பாதிக் கப்பட்ட ஒரு பகுதியை மீளக்கட்டியெழுப்பும் போது இவை அனைத்தையும் மிகச் சரியாகக் கணித்து, கவனித்து திட்டங்களைத் தீட்ட வேண்டியது அவசியம்.

கொழும்பும் வடக்கும் இருவேறு அதிகார மையங்களாகப் பிரிந்துள்ள நிலையிலும் இந்த ஒருங்கிணைந்த அபிவிருத்தியை சாத்தியமாக்குவதற்கான வழிவகைகள் கண்டறியப்பட வேண்டியது அவசியம். இல்லையேல் மழை நாள்களைப் போலவே ஏனைய நாள்களும் நரகத்தின் நாள்களாகிப் போகும்.

# அவசரமான தேர்தலால் அதிரப் போவது யார்?

-ராஜ்-



ஜனாதிபதியின் பதவிக் காலம் முடிவடைவதற்கு இன்னமும் 2 வருடங்கள் இருக்கின்ற நிலை யில், அடுத்த வருடம் தேர்தலை நடத்தியே ஆகவேண்டும் என்ற கட்டாயத்துக்கு அரசு தள்ளப்பட் டுள்ளது. காலம் செல்லச்செல்ல அரசின் செல்வாக்கு மக்களிடமிருந்து குறைந்துகொண்டு போவதனால், தேர்தலை அரசு அவசரமாக நடத்துவதற்கு முயற்சி செய்கிறது என்பதில் சந்தேகமில்லை. இப்போது நடத்தினால்தான் ஆகக் குறைந்தது மயிரிழையிலேனும் தப்ப முடியும் என மஹிந்த நினைக்கின்றார். அதுதான் உண்மை.

தேர்தலை வெல்லும் நோக்கில் மக்களுக்கு வழங்குவதற்கு இனி எந்தவொரு வாக்குறுதியும் இல்லை என்பதால் பொருள்களின் விலைகளை மெல்ல மெல்லக் குறைத்து மக்களைக் கவருவதற்கு மஹிந்த முயற்சி செய்வதை நாம் அவதானிக்கின்றோம்.

மின் கட்டணம் குறைப்பு, டீசல், பெற்றோல், சமையல் எரிவாயுவின் விலை குறைப்பு, சிகரெட்டின் விலை அதிகரிப்பு எனச் சுறுசுறுப்பான தேர்தல் ஏற்பாட்டில் மஹிந்த ஈடுபடத் தொடங்கியுள்ளார். எப்போதோ செய்யவேண்டிய விடயங்களைத் தேர்தலுக்காக இப்போது செய்கிறார் என்பதையும் தேர் தல் முடிந்த கையோடு மீண்டும் அவற்றின் விலைகள் அதிகரிக்கப்படும் என்பதையும் மக்கள் நன்கு அறிவர். இந்த யுக்தி இந்தமுறை அவ்வளவாக எடுபடாது.

விலைவாசிகள் எல்லை மீறிவிட்ட இன்றைய நிலையில், ஓரிரு பொருள்களின் விலைகளைக் குறைப்பதன் மூலம் மக்களின் வாழ்க்கைச் செலவினம் குறையப்போவதில்லை.

மஹிந்தவின் இந்தக் காய் நகர்த்தல் எல்லாம் பெரும்பான்மை மக்களைக் குறி வைத்தே தவிர, சிறுபான்மைத் தமிழ், முஸ்லிம் மக்களைக் குறிவைத்து அல்ல. சிறுபான்மை இன மக்கள் நிச்சயம் இந்தப் பொறிக்குள் சிக்கமாட்டார்கள்.

ஜனாதிபதித் தேர்தலில் எவரை வேண்டுமானாலும் ஆதரிப் போம். ஆனால், மஹிந்தவை மட்டும் ஆதரிக்க மாட்டோம் என்று முஸ்லிம்கள் ஏற்கனவே தீர்மானம் எடுத்துள்ளதாகத் தோன்றும் நிலையில் முஸ்லிம் காங்கிரஸ் எவரை ஆதரிக்க வேண்டும் என்று அடுத்த மாதம் மக்களிடம் கருத்துக் கேட்கப் போவதாக அக்கட்சி தெரிவித்துள்ளது. மஹிந்தவைத் தவிர, எதிர்க் கட்சிகளின் பொது வேட்பாளர் எவரையேனும் ஆதரியுங்கள் என்றுதான் முஸ்லிம்கள் சொல்லப் போகிறார்கள். இது தான் முஸ்லிம்களிடமிருந்து கிடைக்கப்போகும் பதில்.

போர் முடிந்த இந்த ஐந்து வருடங்களுக்குள் இந்த மஹிந்த யார்? இவர் முஸ்லிம்கள் தொடர்பிலும் தமிழர்கள் தொடர்பிலும் எவ்வாறான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளார் என்பதை முஸ்லிம்கள் நன்றாக விளங்கி வைத்துள்ளனர்.

இந்த நாட்டில் சிறுபான்மை இனத்தவர் என்று எவரும் இல்லை. அனைவரும் இலங்கையர்கள் என மஹிந்த கூறிய அந்த வார்த் தையை முஸ்லிம்கள் நம்பி னர். யுத்தம் இல்லாத நிலையில் நாம் நிம்மதியாக வாழலாம் என நினைத்தனர். ஆனால், இந்த நாட்டில் சிறுபான்மை இனத்தவர் என்று எவருமில்லை என ஜனாதிபதி கூறியதன் அர்த் தம் இந்த நாட்டில் சிறுபான்மை இனத்தவர்கள் இருக்கக் கூடாது; பௌத்த மக்கள் மாத்திரமே இருக்கவேண்டும் என்று பின்னர் தான் முஸ்லிம்கள் விளங்கிக் கொண்டனர்.



எந்தவொரு நியாயமான காரணமும் இல்லாமல் பொது பலசேனா போன்ற பேரினவாத அமைப்புகள் திடீரெனத் தோன்றின; முஸ்லிம்கள் மீது தாக்கு தல் நடத்தத் தொடங்கின; பள்ளி வாசல்கள் தாக்கப்பட்டன; முஸ்லிம் களின் மார்க்க விடயங்கள் இழிவுபடுத்தப்பட்டன; ஒட்டு மொத்த முஸ்லிம்களும் பயங் கரவாதிகள் எனச் சித்திரிக்கப் பட்டனர்; முஸ்லிம் பெண் களின் ஆடைகளைக் களைய முற்பட்டனர். இவை எல்லாம் மஹிந்தவின் கண்முன்னே தான் நடந்தன. இவற்றுள் ஒன்றையேனும் கட்டுப்படுத்த அவர் நடவடிக்கை எடுக்கவில்லை. இறுதியாக அளுத்கம, பேருவளை, தர்ஹா நகர் பற்றி எரிந்தன. அப்போதே முஸ்லிம் கள் மஹிந்தவைத் தூக்கி வீசிவிட்டனர்.

மஹிந்த தொடர்ந்து ஜனாதி பதியாக இருந்தாலோ அல்லது அவரது கட்சி ஆட்சியை நடத் தினாலோ முஸ்லிம்களுக்கு எதிரான பிரச்சினைகள் உக்கிரமடையுமே தவிர ஒருபோதும் குறையாது என்ற நிலைப் பாட்டில் முஸ்லிம்கள் உள்ளனர்.

பேரினவாத அமைப்புகள் தினமும் புதிது புதிதாகத் தோற் றம் பெறுகின்றன; புதிய புதிய பிரச்சினைகளைக் கிளப்புகின் றன. ஒருபுறம் முஸ்லிம்களுக்கு அடி விழும்போது மறுபுறம், முஸ்லிம்களை உடன்பிறந்த சகோதரர்களைப்போல் பாதுகாப்பேன் என்று மஹிந்த முஸ்லிம் நாடுகளுக்குக் கூறிக்கொண்டு இருக்கின்றார். அவ்வாறு பாது காக்க அவர் இதுவரை எந்த வொரு நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது என்பது இராணுவம், பொலிஸை நிறுத் திப் பாதுகாப்பது அல்ல. பிரச்சினையின் ஆணிவேர் எங்கு இருக்கிறதோ அதை முற்றாக வெட்டி வீசுவதுதான் முஸ்லிம் களின் பாதுகாப்பை முழுமையாக உறுதிப்படுத்தும். அந்த வேர் பொதுபலசேனா போன்ற பேரினவாத அமைப்புகள்தான். இந்த அமைப்புகளைத் தடை செய்தால் போதும். வேறு எந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் செய்யத் தேவையில்லை. அதை விட்டுவிட்டு முஸ்லிம்களைப் பாதுகாப்பேன் என்று சர்வதேசத்தையும் முஸ்லிம் நாடுகளையும் திருப்திப்படுத்துவதற்காக பொய் கூறுவது உங்களை நீங்களே பாதுகாத்துக் கொள்ளுங்கள் என முஸ்லிம்களைப் பார்த்துக் கூறுவது போல் இருக்கின்றது.

போர் முடிந்து அமைதி நிலவுவதாக ஜனாதிபதி கூறு கின்றார். போர் இல்லை என் பது உண்மைதான். ஆனால், அமைதி நிலவுகிறது என்பது உண்மையல்ல. முஸ்லிம்களுக்கு எதிரான அமைதியின்மை இன்று தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இதற்கு அடிப்படைக் காரணம் ஜனாதிபதி மஹிந்த் தான் என்ப தில் மாற்றுக் கருத்துக் கிடையாது.

ஆகவே, முஸ்லிம்களுக்கு ஏற்பட்டிருக்கும், எதிர்காலத்தில் ஏற்படப்போகும் பேராபத்திலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கான ஒரே வழி மஹிந்தவின் ஆட்சியைக் கவிழ்ப்பதுதான். இந்த ஆட்சி நீடிக்க நீடிக்க முஸ்லிம்களுக்கான பிரச்சினைகளும் அதிகரித்துக் கொண்டே போகும்.

எனவே, முஸ்லிம் காங்கிரஸ் நடத்தப்போகும் கருத்துக் கணிப்பின்போது மக்கள் தெரிவிக்க விரும்புவது முஸ்லிம் காங்கிரஸ் அரசிலிருந்து விலகவேண்டும்; ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளரை ஆதரிக்க வேண்டும் என்பதுதான்.

# மழையின்றேல் நாம் இல்லை

ராஜராஜன்



தீபாவளி வந்து சென்று விட்டது. ஆனால் தீபாவளிக்கு முன்னரே ஆரம்பித்த மழை தொடர்ந்து கொண்டிருக்கின்றது. தீபாவளிப் பண்டிகையை மழை குழப்பிவிட்டதாகக் குறை கூறியவர்களும் இல்லாமலில்லை. ஆனால் நீண்ட கால வறட்சிக்குப் பின்னர் பெய்யும் மழையை வரவேற்பவர்களின் தொகைதான் அதிகம். குறிப்பாக வயல்வேலைகளில் ஈடுபடுபவர்களுக்கு ஏகப்பட்ட மகிழ்ச்சி.

நீரின்றி அமையாது உலகு என்ற வாக்கு நீரையும் அதனை எமக்கு வழங்கும் மழையையும் பெருமைப் படுத்தி நிற்கின்றது. மழை காலத்தில் மண் மட்டுமல்ல மனிதர்களும் குளிர்மையான அனுபவத்தை உணர்வது கண் கூடாகும். எமது நாடு மூன்று வகையான தட்ப வெப்ப நிலைகளைக் கொண்டுள்ளது. வறண்ட காலநிலை சில பகுதிகளில் காணப்படுகின்றது. மலைநாட்டின் சில பிரதேசங்கள் மிதமான குளிரையும் வேறு சில பிரதேசங்கள் அதிக குளிரையும் உடையனவாகக் காணப்படுகின்றன. மலைப்பாங்கான பிரதேசங்களில் மழை வீழ்ச்சி அதிகளவில் காணப்படும் நிலையில் வறண்ட பகுதிகளில் மழைக்காக ஏங்கி நிற்பதைக் காண முடிகின்றது. இதையொரு இயற்கையின் ஓரவஞ்சனை எனக் கூறலாம்.

மழை பொய்க்கும் போது ஏற் படும் கடுமையான வறட்சி மிகக் கொடுமையானது. குடிதண்ணீர் கூடக் கிடைக்காமல் மனிதர்கள், விலங்குகள், பறவைகள் ஏனைய உயிரினங்கள் மட்டுமல்ல ஓரறிவு படைத்த மரங்களும் வாடி நிற்பதைக் காணலாம். நிலம் வெடித்துப் பாளம் பாளமாகப் பிரிந்து காணப்படும் காட்சி சகிக்க முடியாதது. வறட்சியின் போது காட்டு விலங்குகள் குடிதண்ணீர் தேடி மக்களின் குடியிருப்புக்களுக்குள் நுழைந்து அழிவுகளை ஏற்படுத்துவது வழக்கமாகும். நீர் அருந்தாது உயிர்வாழ முடியாது என்பதால் உயிரினங்கள் யாவும் அதைத் தேடி அலைந்து திரிவது வழக்கமானதுதான். எமது முன்னோர்கள் மழையை வருண பகவான் எனப் பெயரிட்டு வழங்கி வந்தனர். பஞ்ச பூதங்கள் யாவும் அவர்களின் கண்களுக்குத் தெய்வங்களாகவே தெரிந்தன. இதனால் தண்ணீரை வழங்கும் மழையும் தெய்வங்களின் வரிசையில் வைக்கப்பட்டது.



ஆதி காலத்தில் காட்டுவாசிகளாக வாழ்ந்த மனிதர்கள் மழையிலிருந்து தம்மைக் காத்துக் கொள்வதற்காகக் குகைகளைத் தஞ்சம் அடைந்தனர். மேலும் அன்றைய காலகட்டத்தில் வருடத்தின் இறுதி ஆறு மாதங்களும் மழை காலமாக இருந்ததால் இந்தக் காலப்பகுதிக்குத் தேவையான உணவுகளைச் சேகரித்து வைக்க வேண்டிய தேவையும் ஏற்பட்டது. உணவுகளைச் சமைத்து உண்ணும் வழக்கம் அன்று இல்லாததால் மிருகங்களின் இறைச்சியைத் தேனில் இட்டு அவர்கள் பாதுகாத்து வந்ததாகவும் கூறுவார்கள்.

சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னரும் வருடத்தின் பிற்பகுதியில் வரும் மாதங்கள் மழை காலமாகவே இருந்துள்ளன. இதனால் தானியங்களைச் சேமித்து வைக்கும் வழக்கமும் காணப்பட்டது. ஆனால் இன்று நவீன விஞ்ஞான வளர்ச்சி காரணமாக புவியின் காலநிலையில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. கோடை காலத்தில் பெருமழை பெய்து வெள்ளப் பெருக்கு ஏற்படுவதும், மழை காலத்தில் மழை பெய்யாது ஏமாற்றி விடுவதும் சாதாரண விடயங்களாகி விட்டன.

சில தினங்களுக்கு முன்னர் இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தில் வரலாறு காணாத வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதால் லட்சக் கணக்கான மக்கள் தவிக்க நேரிட்டது. கடுமையான மழை பெய்து அங்குள்ள ஜீலம் நதி கரைபுரண்டு ஓடியதால் இந்த இடர் நேர்ந்துள்ளது. பல ஆயிரக் கணக்கான கோடி ரூபாய்கள் பெறுமதியான சொத்துக்களுக்கும் இழப்பு ஏற்பட்டது. இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி அங்கு நேரில் சென்று நிலைமைகளை ஆராய்ந்ததுடன் ஆயிரம்கோடி ரூபா உதவித் தொகையையும் வழங்குவதற்கு ஏற்பாடு செய்துள்ளார். இதேவேளை இந்தியாவின் சில பகுதிகள் இன்னமும் வறட்சியின் பிடிக்குள் சிக்கித் தவிக்கின்றன. போதிய மழை பெய்யாததால் அங்கு விவசாய நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. காலநிலையில் ஏற்பட்டுள்ள மாற்றமே இதற்கான பிரதான காரணமாகும்.

சூரிய வெப்பம் காரணமாக ஆவியாக மாறும் நீர் முகில்களில் படிந்து குளிர்காற்றுக் காரணமாகக் குளிர்ந்து மழையாகப் பொழிவதாகக் கூறுவார்கள். சூல்கொண்ட முகில்கள் கருமை யாக மாறுவதும், பூமியை நோக்கித் தாழ்ந்து காணப்படுவதும் மழைக்கான அறிகுறிகளாகும். மனிதர்கள் முகில்களைக் கூட விட்டு வைக்கவில்லை. செயற்கை முறையில் மழை பொழிவதற்கு முகில்களின் மீது இரசாயனங்களைத் தூவிவிடுவதும், தேவையில்லாதபோது மழை மேகங்களை விரட்டி விடுவதும் மனிதர்களின் செயல்களாகிவிட்டன. இயற்கையைப் பகைத்து நிற்கும் மனிதனின் செயல்கள் அவனுக்கே தீங்காக அமைந்து விட்டன.



வெயில் காலத்தில் பல அசௌகரியங்களை மக்கள் எதிர்கொள்கின்ற போதிலும் தொடர்ந்து மழை பெய்வதை விரும்புவதில்லை. மழையின்போது சில நடைமுறைச்சிக்கல்கள் ஏற்படுவதே இதற்கான பிரதான காரணமாகும். சுதந்திரமான நடமாட்டத்துக்கும் சில அத்தியாவசிய வேலைகளுக்கும் மழை தடையாக இருப்பதை மறுக்க முடியாது. இதனால்தான் 'மழை போ வெயில் வா' என அன்றைய சிறுவர்கள் சேர்ந்து பாடினார்கள் போலும். ஆனால் மழை பெய்த பின்னர் இந்த உலகமே புத்துணர்ச்சி பெற்றுள்ளது போன்றதொரு தோற்றம் காணப்படுகின்றது. மழை இல்லாததால் வாடி நின்ற பயிர்கள் உயிர்பெற்று பச்சைப் பசேலெனக் காட்சி தருவது மனதுக்கு இதமாக இருக்கும். அதிலும் வயல்களில் நீர் நிறைந்து அங்கு காணப்படும் பயிர்கள் காற்றில் அசையும் அழகே தனி அழகுதான். மழை காரணமாக காற்றின் ஈரப்பதமும் அதிகரிப்பதால் மனிதர்களும் வியர்வை வழிவதிலிருந்து விலக்களிக்கப்பட்டு செழுமையாகக் காணப்படுவார்கள்.

நீர் வீழ்ச்சிகள் எவரது மனதையும் கொள்ளை கொள்ளக் கூடியன. அதிலும் மலைப் பிரதேசங்களில் மழை பெய்யும் போது நீர் வீழ்ச்சிகள் கண்ணைக் கவரும் வகையில் காணப்படுகின்றன. வெள்ளிப் பாளங்கள் உருகி ஓடுவதைப் போன்றதொரு தோற்றம் அங்கு காணப்படுகின்றது. அதிலும் மலையிலுள்ள அரிய மூலிகைகளின் பயன்களும் இந்த நீரில் காணப்படுவதாக மக்கள் நம்புவதால் அருவிகளின் கீழ் நின்று குளிப்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து விட்டது.

திரைப்படங்களில் கூட செயற்கையான முறையில் மழை பெய்வதைப் போன்றதொரு தோற்றத்தை உருவாக்கி அதில் நாயகனும் நாயகியும் ஆடிப்பாடுவதைப் போன்ற காட்சிகளைப் படமாக்குகின்றனர். சினிமா ரசிகர்கள் நிஜமான மழை பெய்வதாகவே நம்பி விடுகின்றனர்.

மழை, இயற்கை அன்னை எமக்கு அள்ளித் தந்த அரும் செல்வமாகும். இந்த உலகை வாழவைப்பதும் அதுதான். சிலவேளைகளில் சிலர் மழையை இடைஞ்சலாகக் கருதினாலும் அதைப் புறமொதுக்கிவிட்டு உலகில் எவருமே உயிர் வாழ முடியாது. தற்போது நீரின் அவசியம் கருதி மழை நீரைச் சேகரித்து வைக்கும்நடை முறைகளும் ஆரம்பித்துவிட்டன. மழை நீரை நாம் உரிய வகையில் சேகரித்து வைத்தால் வறட்சிக் காலங்களில் அதனைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். அதிலும் வெப்ப வலயத்திலுள்ள எமது நாட்டில் இந்த முறையைக் கடைப்பிடிப்பது மிகவும் அவசியமாகின்றது.

மழையை நாம் எம்மை வாழ வைக்கும் தெய்வமாக எண்ணிப் போற்ற வேண்டும். மழையின்றேல் உலகில்லை. உலகில்லையென்றால் நாமும் இல்லை.

---

வாசகர் திருமுகம்

## சுன்னாகம் சந்தையில் ஏனிந்த நிலை?

சுன்னாகம் மரக்கறிச் சந்தையில் வேறுபட்ட விலைகளில் மரக்கறிகள் விற்பனை செய்யப்படுவதால் நுகர்வோர் பாதிக்கப்பட்டு வருகின்றனர். சில மரக்கறி வகைகளுக்கு கிலோ ஒன்றுக்கு 20 ரூபாவுக்கு மேற்பட்ட விலை வித்தியாசமும் காணப்படுகின்றது. இது தொடர்பாகக் கேட்டால் அங்குள்ள வியாபாரிகள் பல்வேறு ஏற்க முடியாத காரணங்களைக் கூறுகின்றனர்.

மேலும் விவசாயிகளிடமிருந்து குறைந்த விலைக்குக் கொள்வனவு செய்யும் பொருள்களை இவர்கள் அதிக விலைக்கு விற்பதையே வழக்கமாகக் கொண்டுள்ளனர். இதனால் விவசாயிகளும், நுகர்வோரும் பாதிக்கப்படுகின்றனர்.

மரக்கறி வகைகளை வியாபாரிகள் நியாயமான விலைகளில் விற்பதற்கு ஆவன செய்யப்படல் வேண்டும்.

இதேவேளை சுன்னாகம் வாழைக் குலைச் சந்தையில் தனிநபர் ஒருவரே ஆதிக்கம் செலுத்தி வருகிறார். அங்கு விவசாயிகள் கொண்டு வரும் வாழைக்குலைகளை அவர் ஒருவரே குறைந்த விலையில் கொள்வனவு செய்வதை அவதானிக்க முடிகின்றது. இதனால் எவ்வளவோ கஷ்டங்களுக்கு மத்தியில் வாழைக்குலைகளை அங்கு எடுத்துச் செல்லும் விவசாயிகள் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இதற்கும் ஒரு முடிவு காணப்பட வேண்டும்.

சு. பொன்னம்பலம், ஏழாலை.




# அமெரிக்காவில் இந்திய மாணவன் சாதனை

வொஷிங்டன், ஒக்.24

அமெரிக்க வாழ் இந்தியரொருவருக்கு அமெரிக்காவின் இளம் விஞ்ஞானி விருது வழங்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் ஃபிட்ஸ்பர்க் பகுதியில் சகீல் தோஷி என்ற இந்திய இளைஞர் வசித்து வருகின்றார்.

மின்சாரம் இல்லை என்றால் இன்று உலகில் எதுவுமே இயங்காது என்ற நிலை தான் உள்ளது.

மின் பொருள்கள் உபயோகத்தால் ஏற்படும் காற்று மாசுபடுதலைக் கருத்தில் கொண்டு, சகீல் மின் பாதுகாப்புசாதனத்தை கண்டுபிடித்து சாதனை படைத்துள்ளார்.

இதற்காக அமெரிக்காவின் 'டிஸ்கவரி எடிஜுகேஷன்' என்ற அமைப்பு, இவருக்கு அமெரிக்காவின் இளம் விஞ்ஞானி விருதையும், 25 ஆயிரம் அமெரிக்க டொலரையும் வழங்கியுள்ளது.

இந்த விருதுக்கான இறுதிச் சுற்றில் மொத்தம் 9 பேர் போட்டியிட்ட நிலையில், சகீல் தோசிக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

மேலும் காற்று மாசுபடுதலைத் தடுப்பதற்காகஜன்னலில்பொருத்தப்படும் சிறப்புக் கருவியைக் கண்டுபிடித்த ஜெயக்குமார் என்பவர் மூன்றாம் இடம்பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

# சுகோய் 30 ரக விமானங்களை ஒதுக்கி வைக்கின்றது இந்தியா



இந்தியா தன்னிடம் உள்ள சுமார் 200 சுகோய் 30 ரகவிமானங்களை பயன்பாட்டிலிருந்து ஒதுக்கிவைக்க முடிவு செய்துள்ளது. இந்த விமானங்களில் தொழில் நுட்பக் கோளாறுகள் இருப்பதாகக் கண்டறியப்பட்டதை அடுத்தே, இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த 14 ஆம் திகதி புனேயில் தரையிறங்கும்போது, ஒரு சுகோய் விமானத்தில் கட்டளை கொடுக்கப்படாமலேயே விமானியின் இருக்கை மேலே எழும்பித் தெறித்தது. இதில் விமானிகள் தெய்வாதீனமாக உயிர் தப்பினர் என்றாலும், விமானம், ஓடு பாதைக்கு 20 கி.மீ. இருந்த நிலையில் கீழே விழுந்து விபத்துக்கு உள்ளானது. அதை அடுத்து இரட்டை எஞ்சின் கொண்ட சுமார் 200 சுகோய் ரக விமானங்களை ஒதுக்கிவைத்து, தொழில் நுட்பக்கோளாறுகளை ஆய்ந்து சரி செய்த பின்னர் மீண்டும் பறக்க அனுமதிப்பதென முடிவு செய்யப்பட்டது.

சுகோய் ரக விமானத்தில், கடந்த 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நிகந்த 5 ஆவது விபத்து இதுவாகும். நாட்டின் போர் விமானங்களில் முக்கிய இடம் வகிப்பது சுகோய்ரகவிமானமே என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

# ஹரியானா முதல்வராக மனோகர் லால் கட்டார்

## ஒக். 26இல் பதவியேற்பு

சண்டீகர், ஒக்.24

ஹரியானா மாநில முதல்வராக, பா.ஜ.க. மூத்த தலைவர் மனோகர் லால் கட்டார் (வயது 60), ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அதையடுத்து, அவரது தலைமையிலான பா.ஜ.க. அரசின் பதவியேற்பு விழா, வரும் 26 ஆம் திகதி நடைபெறவுள்ளது. அந்த மாநிலத்தில் பா.ஜ.க. முதலாவது முறையாக ஆட்சி அமைக்க உள்ளது.

ஹரியானா மாநில முதல்வரைத் தெரிவு செய்வதற்கான பா.ஜ.க. சட்டசபை உறுப்பினர்கள் கூட்டம், சண்டீகரில் உள்ள விருந்தினர் மாளிகையில் செவ்வாய்க் கிழமை நடைபெற்றது. அதில், முதல்வர் பதவிக்கு பரிந்துரைக்கப்பட்ட பாஜக மாநிலத் தலை வர் ராம்விலாஸ் சர்மா, கேப்டன்அபிமன்யு, பிரேமலதா உள்படப் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 47 பா.ஜ.க. சட்டசபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.




நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் வெங்கய்ய நாயுடு, கட்சியின் துணைத் தலைவர் தினேஷ்சர்மா ஆகியோர் மேலிடப் பார்வையாளர்களாகக் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில், ஹரியானா முதல்வராக மனோகர் லால் கட்டார் தெரிவு செய்யப்பட்டார்.

அதையடுத்து, மனோகர் லால் கட்டார், வெங்கய்ய நாயுடு, தினேஷ் சர்மா உள்ளிட்ட தலைவர்கள், ஆளுநர் மாளிகைக்குச் சென்று, ஆளுநர் கப்தான் சிங் சோலங்கியைச் சந்தித்து, ஆட்சியமைப்பதற்கு உரிமை கோரிக் கடிதம் கொடுத்தனர்.

அந்தக் கடிதத்தை ஏற்றுக் கொண்ட ஆளுநர், ஆட்சியமைக்குமாறு பா.ஜ.கவுக்கு அழைப்பு விடுத்தார். அதையடுத்து, பதவியேற்பு விழாவுக்கான திகதி முடிவு செய்யப்பட்டது. அதன்படி, ஹரியானா மாநிலம், பஞ்ச்குலாவில் உள்ள தேவிலால் விளையாட்டு அரங்கில், வரும் 26 ஆம் திகதி பதவியேற்பு விழா நடைபெறவுள்ளது. (வ)



உலகெங்கும் வாழும் இந்து மதத்தினரால் நேற்றுமுன்தினம் தீபாவளிப் பண்டிகை கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. இந்தியாவின் மும்பை நகரில் உள்ள மாற்றுவலுவுள்ள குழந்தைகள் பாடசாலையில் தீபாவளிப் பண்டிகையை மத்தாப்புக் கொளுத்தி குதூகலமாகக் கொண்டாடும் குழந்தைகள்.

# பட்டாசுக் கடையில் தீ ஏழு பேர் உயிரிழப்பு

ஜெய்ப்பூர், ஒக்.24

ராஜஸ்தான் மாநிலம் பாலோத்தரா நகரில் பட்டாசு குடோனொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 7 பேர் உடல் கருகி உயிரிழந்த நிகழ்வு அங்கு பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ராஜஸ்தான் மாநிலம், பார்மர் மாவட்டத்தில் உள்ள பாலோத்தரா நகரில் தீபாவளி விற்பனையையொட்டி பட்டாசுக் கடைகள் அமைக்கப்பட்டிருந்தன.



இந்தநிலையில், நேற்று அதிகாலை ஒரு மணியளவில் அங்குள்ள பட்டாசுக் கடை ஒன்றில் எதிர்பாராத விதமாக தீ பற்றிக் கொண்டது. அந்தக் கடையின் அருகில் இருந்த பட்டாசு குடோனுக்கு தீ பரவியதில், அங்கு தங்கியிருந்த 7 பேர் அந்த இடத்திலேயே உடல் கருகி உயிரிழந்தனர். இறந்தவர்கள் அனைவரும் 30-50 வயதுடையவர்கள்.

இதுதொடர்பாக, பார்மர் மாவட்ட பொலிஸ்துறை கண்காணிப்பாளர் ஹேமந்த் சர்மா கூறுகையில், தீ விபத்து ஏற்பட என்ன காரணம் என்று இதுவரை தெரியவில்லை, தீவிபத்தில், பட்டாசுக் கடை, குடோன் மற்றும் துணிக் கடைகள் ஆகியவற்றைக் கொண்ட அந்த இரண்டு மாடிக் கட்டடம் முழுவதும் சேதமடைந்தன என்று கூறினார்.

மேலும் விபத்தில் கட்டட இடிபாடுகளில் சிக்கி உள்ளவர்களை மீட்கும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (வ)

# எல்லையில் நடைபெற்ற தீபாவளிக் கொண்டாட்டம்



திரிபுரா, ஒக்.24

இந்திய- வங்கதேச எல்லையில் இருநாட்டு பாதுகாப்புப் படையினரும் தீபாவளியை ஒருவருக்கொருவர் இனிப்பு வழங்கிக் கொண்டாடினர்.

இந்திய - வங்கதேச எல்லையில் நிறுத்தப்பட்டுள்ள துணை எல்லைப் பாதுகாப்புப் படை வீரர்கள் முகாமில், தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு வங்கதேச எல்லைப் பாதுகாப்புக் படையினருடன், இனிப்புகள் பரிமாறி ஒருவருக்கொருவர் மகிழ்ச்சியை வெளிப்படுத்தி வாழ்த் துக்கள் தெரிவித்து தீபாவளியைக் கொண்டாடினர்.

எல்லைப் பாதுகாப்புப் படைத் துணை இயக்குநர் பி.எஸ் டாலியா, வங்கதேச எல்லைக் காவலர்களுக்கு தீபாவளி இனிப்பு வழங்கி வாழ்த் துக்களைப் பரிமாறினார்.

மேலும் அவர், இந்த நாளில் அறிவெனும் ஒளிநிறைந்து அறியாமை இருள் அகல வேண்டும். தீமை ஒழிந்து நன்மை மற்றும் புதிய நம்பிக்கை பிறக்க வேண்டும் என்று கூறி வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார். (வ)

# கொத்தடிமைகள் 4 பேர் மீட்பு

அரியலூர், ஒக்24

அரியலூரில் 2 குழந்தைத் தொழிலாளர்கள் உட்பட கொத்தடிமைகளாக நடத்தப்பட்ட 4 பேர் மீட்கப்பட்டனர்.

அரியலூர் ரயில் நிலையம் அருகே போலி முத்திரையுடன் பிபிசி குழாய் உபகரணங்கள் தயாரிக்கப்படுவதாக சார் ஆட்சியர் சந்திரசேகர சாகமூரிக்கு செவ்வாய்க் கிழமை இரவு பொதுமக்களிடமிருந்து தகவலொன்று கிட்டியது. உடனே அங்கு விரைந்த சார் ஆட்சியாளர் தலைமையிலான வருவாய்த் துறையினர் திடீர் சோதனை மேற்கொண்டனர்.

அதன்போது அங்கு பணியாற்றி வந்த வட மாநிலத்தவர் சிலரிடம் ஆட்சியர் விசாரித்த போது, அவர்கள் திருச்சியைச் சேர்ந்த முகவ ரொருவரூடாக அங்கு கொத்தடிமைகளாக அனுப்பப்பட்டமை தெரியவந்தது.

அதையடுத்து, கொத்தடிமைகளாக நடத்தப்பட்ட பிஹார் மாநிலத்தைச் சேர்ந்த தீபக், ரஜீப், கபிசங்கர், தனில் ஆகிய 4 பேர் மீட்கப்பட்டனர். அவர்களில் 2 பேர் குழந்தைத் தொழிலாளர்கள் என்வும் அடையாளம்காணப்பட்டனர். அதைத் தொடர்ந்து 4 பேரும் வயதை உறுதிபடுத்தும் மருத்துவப் பரிசோதனைக்காக நேற்று முன்தினம் தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (வ)

# எல்லையில் பாக். ராணுவம் மீண்டும் தாக்குதல்



ஜம்மு, ஒக்.24

ஜம்மு காஷ்மீரில், எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியில் பாகிஸ்தான் இராணுவம் மீண்டும் அத்துமீறி தாக்கு தல் நடத்தியுள்ளது.

சர்வதேச எல்லையை ஒட்டிய ராம்கார் மற்றும் அர்னியா பகுதிகளில் அதிகாலை ஒரு மணி மற்றும் 4 மணி அளவில் இந்திய நிலைகள் மீது பாகிஸ்தான் ராணுவம் அத்துமீறி தாக்குதல் நடத்தியதாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தான் இராணுவத்துக்கு இந்தியா தக்க பதிலடி கொடுத்ததாகவும் இந்தத் தாக்குதல்களில் உயிரிழப்புகள் எதுவும் ஏற்படவில்லை என்றும் இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் காலை முதல் 3 ஆவது முறையாக பாகிஸ்தான் ராணுவம் அத்துமீறி தாக்குதல் நடத்தியுள்ளது. இந்த மாத ஆரம்பத்தில் இருந்து இன்று வரை பாகிஸ்தான் ராணுவம் தொடர்ந்து எல்லைப் பகுதியில் அத்துமீறி தாக்குதல் நடத்தி வருகிறது. இதில் 15 பாதுகாப்புப் படை வீரர்கள் உட்பட 95 பேர் காயமடைந்துள்ளனர். (வ)

# கனடா நாடாளுமன்ற வளாகத்தில் தாக்குதல்

## பாதுகாப்பு வீரர் சாவு: தாக்குதலாளியொருவர் சுட்டுக்கொலை



ஒட்டாவா, ஒக்.24
கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில் உள்ள அந்த நாட்டின் நாடாளுமன்றத்தில் அத்துமீறி நுழைந்த இருவர் நேற்று முன்தினம் திடீர் துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதல் நடத்தினர். இதன்போது பாதுகாப்புப் படையைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்தார். அத்துடன் தாக்குதல் நடத்தியவர்களில் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டார். இந்தச் சம்பவம் அந்த நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
தகவலறிந்து விரைந்து வந்த பொலிஸார், நாடாளுமன்ற வளாகத்தில் இருந்தவர்களைப் பாதுகாப்பாக வெளியேற்றினர். அதன்பின்னர் அவர்கள் மர்ம நபர்கள் மீது பதில் தாக்குதல் நடத்தினர்.
இந்த தாக்குதலில் நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள தேசிய போர் பாதுகாப்பு நினைவுச் சின்னத்தின் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு இருந்த பாதுகாப்பு வீரரொருவர் உயிரிழந்தார். பதில் தாக்குதலில் தீவிரவாதி ஒருவரும் உயிரிழந்தார்.
தாக்குதல் சம்பவம் நடைபெற்றபோது நாடாளுமன்ற அரங்குக்குள் அந்த நாட்டுப் பிரதமர் ஸ்டீபன் ஹார்பர் இருந்ததாகவும், பின்னர் அவர் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டு விட்டதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.
துப்பாக்கிச் சூட்டுத் த்தாக்குதலைத் தொடர்ந்து கனடா நாடாளுமன்றப் பகுதி முழுவதும் உடனடியாக மூடப்பட்டு, பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டது. துப்பாக்கிச் சூடு நடத்திய மற்றொரு மர்ம நபர் இன்னமும் நாடாளுமன்ற வளாகத்திலேயே இருப்பதாகக் கூறப்படுகிறது.
எனவே, அவரைக் கைது செய்ய ரோயல் கனேடியன் மவுண்டட் பொலிஸார் குண்டு துளைக்காத உடைகள் அணிந்து அரங்குக்குள் தேடுதல் வேட்டை நடத்தி வருகின்றனர்.
கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னர் கியூபெக் நகரத்தில் இரண்டு பாதுகாப்புப் படை வீரர்கள் மீது மர்ம நபரொருவர் தமது காரை ஏற்றிச் சென்ற சம்பவமும் நடைபெற்றது.
இதில் ஒரு வீரர் உயிரிழந்தார் இன்னொருவர் பலத்த காயமடைந்தார்.
இந்தக் கார்த் தாக்குதலே தீவிரவாதச் செயலாக இருக்கும் என அதிகாரிகள் கருதி வந்த நிலையில், பொதுவாக அமைதியாகக் காணப்படும் கனடாவின் தலைநகரமான ஒட்டாவாவில் இந்தத் தீவிரவாதச் சம்பவம் நடைபெற்றுள்ளமை நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

### ஒபாமா கண்டனம்

கனடா நாடாளுமன்ற வளாக துப்பாக்கிச்சூடு சம்பவம் தொடர்பாக அந்த நாட்டுப் பிரதமர் ஸ்டீபன் ஹார்பருடன், அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தொலை பேசியில் தொடர்புக் கொண்டு பேசினார்.
அப்போது, தாக்குதல் சம்பவம் பற்றி ஒபாமாவி டம் ஸ்டீபன் ஹார்பர் எடுத் துக் கூறினார்.
இதனிடையே, துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் காரணமாக கனடாவில் உள்ள அமெரிக்க தூதரகம் மூடப்பட்டுள்ளது. (வ)

## பெரிய அருங்காட்சியகம் அபுதாபி ஷாதியத் தீவில்


அபுதாபி, ஒக்.24
அபுதாபி ஷாதியத் தீவில் மிகப்பெரியளவில் உருவாகிவரும் புதிய அருங்காட்சியத்தை, 2015 ஆம் ஆண்டு டிசெம்பரில் திறக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. பரிசில் உள்ள அருங்காட்சியகத்துடன் இணைந்து உருவாக்கப்பட்டு வரும் இந்த அருங்காட்சியகத்தில் தொல்பொருள், நுண்கலை மற்றும் அலங்கார கலைப் பொருள்கள் காட்சிக்கு வைக்கப்படும்.
உலகிலேயே சிறந்ததொன்றாக இது இருக்கும் என்று கூறப்படுகிறது. இதில் 13 பிரெஞ்சு அருங்காட்சியகங்களைச் சேர்ந்த 300 அரிய கலைப்பொருள்கள் காட்சிக்கு வைக்கப்படும். இவற்றில் ஓவியங்கள், சிலைகள், பண்டைய கால பொருள்களிலிருந்து தற்காலம் வரையான கலைப் பொருள்கள். 4 ஆயிரம் ஆண்டுக்கு முந்தைய மெசோபொடாமிய மன்னரின் சிலை ஆகியவை இடம் பெறும். 1870ல் நியூயோர்க் மெட் ரோபோலிடன் அருங்காட்சியகம் திறக்கப்பட்ட பின்னர் நடைபெறும் முதல் உல களாவிய கலாசார திட்ட மாக இது அமையும் என்று கருதப்படுகிறது.
இந்த அருங்காட்சியகத்தில், சோழர் காலத்தைச் சேர்ந்த 86 செ.மீ., உயரம் உள்ள நடராஜர் சிலை இடம் பெறுகிறது. 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்த நடராஜர் சிலை, ஆஸ்திரேலியா கான்பெராவில் உள்ள தேசிய அருங்காட்சியகத்தில் 2009 ஆம் ஆண்டு தொடக்கம் இருந்தது. இந்த சிலை தொடர்பான காணொலி ஒன்றும், அபுதாபி அருங்காட்சியக இணையத்தளத்தில் இடம் பெற்றுள்ளது. (வ)



## பிரபல நிறுவனத்தின் இயக்குநர் விமான விபத்தில் உயிரிழப்பு



மொஸ்கோ, ஒக்.24
ரஷ்யாவில் நடைபெற்ற விமானவிபத்தொன்றில்பிரான்சின் பிரபல நிறுவனமொன்றின் நிர்வாக இயக்குநர் ஒருவர் உயிரிழந்தார்.
பிரான்சின் ரோற்றல் (TOTAL) சர்வதேச எரிபொருள் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் கிறிஸ்தோபி - டி- மாஜெரிஏஜ் (வயது- 63) என்பவரே உயிரிழந்துள்ளார். இந்த விபத்தில் அவருடன் சேர்ந்து மூவர் உயிரிழந்துள்ளனர்.
விமானம் புறப்படும்போது ஒடுபாதையில் பனி அகற்றும் வாகனம் இருந்ததாகவும், அதனுடன் மோதியே குறித்த விபத்து நிகழ்ந்ததாகவும் ரஷ்ய ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பனி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த ஊழியர் மது போதையில் இருந்ததால் தான் இந்தத் துயரச் சம்பவம் நடந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. எனினும்இதுதொடர்பாகரஷ்யக் குற்றவியல் பிரிவினர் விசாரணை நடத்தி வருகின்றனர். (வ)



## அமெரிக்காவின் மிக உயர் லிபேர்டி விருது மலாலாவுக்கு

வொஷிங்டன், ஒக்.24
அமெரிக்காவின் மிக உயரிய விருதான லிபேர்டி விருது மலாலா யூசுப் சாய்க்கு வழங்கப்பட்டது.
பாகிஸ்தானில் பெண் குழந்தைகளின் கல்விக்காக போராடியவர் மலாலா யூசுப் சாய். தலிபான்களில் துப்பாக்கிச் சூட்டுக்கு ஆளான மலாலா, தொடர்ந்து பெண் குழந்தைகளின் கல்விக்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்.
உலக நாடுகளின் பாராட்டுகளைப் பெற்றுள்ள மலாலாவுக்கு அமெரிக்காவின் உயரிய விருதுகளில் ஒன்றான லிபேர்டி விருது நேற்று முன்தினம் வழங்கப்பட்டது.
பென்சில்வேனியாவில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற மலாலா பேசுகையில்,
"'உரத்துப் பேச முடியாதவர்களுக்காக நான் பேசுகிறேன். நான் துன்பப்படும் பெண்களுக்காகப் பேசுகிறேன், நாட்டுக்காக எமது கடமையைச் செய்கிறோம். எமது பாடசாலை செல்லும் உரிமைக்காக நான் குரல் கொடுக்கிறேன்.
போகா ஹாரம் தீவிரவாதிகள், பிடியில் உள்ள 200 இற்கும் அதிகமான பாடசாலை மாணவிகளை விடுவிக்க வேண்டும். லிபேர்டி விருதுடன் எனக்கு வழங்கப்பட்ட 61 லட்சம் ரூபா பணம் (1 லட்சம் அமெரிக்க டொலர்) வறுமையின் காரணமாகக் கல்வி பெற முடியாமல் தவிக்கும் பாகிஸ்தான் சிறுமிகளுக்கு நன்கொடையாக அளிக்கப்படும்.
சிறுவர்களுக்கான எனது போராட்டத்தைத் தொடர இந்த விருது உற்சாகமூட்டுவதாக அமைந்துள்ளது. உலகளவில் குழந்தைகளின் உரிமைகளுக்காக போராடுவேன்" என்று தெரிவித்துள்ளார். (வ)

## எபோலா தடுப்பு தொடர்பில் ஜெனீவாவில் அவசரக் கூட்டம்

உலக நாடுகளிடையே தற்போது பரவிவரும் எபோலா நோயைக் கட்டுப்படுத்த மேற்கொள்ளப்பட்டுவரும் முயற்சிகளை மதிப்பிடும் நோக்கில் உலகசுகாதாரகழகம், ஜெனீவாவில் அவசர கூட்டம் ஒன்றை நடத்துகிறது. எபோலாவால் மிக மோசமான பாதிப்புகளைச் சந்தித்துள்ள நாடுகளான கினீ, சியர்ராலியோன் மற்றும் லைபீரியாவில் நோய் தொடர்ந்தும் பரவி வருகிறது. நோய் பரவ ஆரம்பித்த நேரத்தில் உலக சுகாதாரக் கழகம் மிகவும் மந்தமாகச் செயல்பட்டது என்ற குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்படுகின்றன. விமான நிலையங்கள் போன்ற சர்வதேச பயண முனையங்களில் நோய்த்தொற்றுள்ளவர்களை அடையாளம் காணுவதற்கான நடவடிக்கைகள் பற்றியும், கடுமையான பயணக் கட்டுப்பாட்டு விதிகள் தேவையா என்பது பற்றியும் இந்தக்கூட்டத்தில் பரிசீலிக்கப்படும்.
பரீட்சார்த்த ரீதியில் புதிதாக உற்பத்திசெய்யப்பட்டுள்ள எபோலா தடுப்பு மருந்து ஒன்றின் முதல் தொகுதி புதனன்று சுவிற்சர்லாந்தை வந்துஅடையவுள்ளன. ஆனால் முழுமையாகப் பரிசோதிக்கப்பட்டு, அனுமதி உரிமம் வழங்கப்பட்ட எபோலா தடுப்பு மருந்து புழக்கத்துக்கு வர மாதக்கணக்கிலோ வருடக் கணக்கிலோ ஆகும் என்று தெரிவிக்கப்படுகிறது. (வ)

## 30 தீவிரவாதிகள் உயிரிழப்பு குர்திஷ் படையின் தாக்குதலில்

கொபேனி, ஒக்.24
சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளுக்கும் குர்திஷ் படையினருக்கும் இடையே நடந்த தாக்குதலில் 30 தீவிரவாதிகள் உயிரிழந்துள்ளனர்.
ஈராக் மற்றும் சிரியாவின் பல்வேறு பகுதிகளைக் கைப்பற்றித் தனி இஸ்லாமிய தேசத்தை உருவாக்கிய ஐ.எஸ். ஐ.எஸ். தற்போது சிரியாவின் எல்லைபகுதியில் உள்ள கொபேனி நகரை தங்கள் வசமாக்க கடும் போரை நடத்தி வருகின்றனர்.
இந்தநிலையில் அமெரிக்கத் தலையீட்டின்பேரில் துருக்கி அரசு நேற்று முன்தினம் அனுமதி அளித்ததைத் தொடர்ந்து ஈராக்கின் வடக்குப் பகுதியில் இருந்து துருக்கி வழியாக சிரியாவின் கொபேனி நகருக்கு குர்திஷ் படை வீரர்கள் விரைந்துள்ளனர்.



அதனையடுத்து அவர்கள் ஐ.எஸ். ஐ.எஸ்-க்கு எதிராக நடத்திய தாக்குதலில் 30 தீவிரவாதிகள் உயிரிழந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.
மேலும்கொபேனியில்சண்டை தீவிரமடைந்துள்ளதால் அங்கு வசிக்கும் 80 சதவீத மக்கள் நகரை விட்டு வெளியேறி துருக்கியின் சுரக் நகரில் அமைக்கப்பட்டுள்ள முகாமில் தஞ்சமடைந்துள்ளனர்.
இதற்கிடையே துருக்கி நாட்டின் இராணுவச் சின்னத்தை உயிரிழந்த தீவிரவாதிகள் தங்களது சட்டையில் அணிந்திருந்தாகக் கூறப்படுகிறது. (வ)

# ஆபத்து மிகுந்த சிகரட் சாம்பலிலிருந்து முக்கியமான பயன்பாடு கண்டுபிடிப்பு



உடல் ஆரோக்கியத்தைக் கெடுத்து விரைவான சாவுக்கு வழிவகுக்கும் சிகரட்டில் மிக முக்கியமான பயன்பாடு ஒன்று இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. அதாவது நீரிலுள்ள ஆர்ஷனிக் என்ற இரசாயனப் பதார்த்தத்தை வடிகட்டும் ஆற்றல் சிகெரட் சாம்பலுக்கு இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

Chinese Academy of Sciences இல் பணியாற்றும் Jiaxing Li என்பவரது தலைமையில் செயற்படும் விஞ்ஞானிகள் குழுவே இதனைக் கண்டுபிடித்துள்ளது. அவர்களது ஆய்வின்படி நீரிலுள்ள ஆர்ஷனிக்கின் 96 சதவீதத்தினை வடிகட்டும் ஆற்றல் இந்த சிகரட் சாம்பலுக்கு இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 9 | 1 | | | | 7 | | 5 |
| 5 | | 8 | 1 | 9 | | | | 4 |
| | 3 | | | 7 | | | | |
| | 4 | 9 | 2 | | | | | |
| 6 | 2 | 5 | | | | 8 | 7 | 9 |
| | | | | | 5 | 4 | 1 | |
| | | | | 1 | | | 6 | |
| 7 | | | | 3 | 6 | 5 | | 8 |
| 9 | | 3 | | | 2 | 1 | 4 | |

## சுடோக்கு
### எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 7 | 9 | 8 | 6 | 5 | 3 | 4 |
| 3 | 8 | 5 | 1 | 2 | 4 | 7 | 6 | 9 |
| 9 | 4 | 6 | 7 | 3 | 5 | 2 | 8 | 1 |
| 4 | 9 | 1 | 3 | 7 | 2 | 6 | 5 | 8 |
| 2 | 5 | 8 | 6 | 1 | 9 | 3 | 4 | 7 |
| 6 | 7 | 3 | 5 | 4 | 8 | 9 | 1 | 2 |
| 7 | 1 | 9 | 8 | 6 | 3 | 4 | 2 | 5 |
| 5 | 3 | 4 | 2 | 9 | 1 | 8 | 7 | 6 |
| 8 | 6 | 2 | 4 | 5 | 7 | 1 | 9 | 3 |

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....
### வாழ்க்கையில் வெற்றி



வாழ்க்கையில் வெற்றிமேல் வெற்றி பெறுகின்ற ஒரு இளைஞனைக் கேட்டால், வாழ்க்கை உண்மையானது என்று அடித்துச் சொல்கிறான். அதை நிச்சயமாக நம்பவும் செய்கிறான். ஒருவேளை அதே இளைஞனுக்கு வயதாகி அதிர்ஷ்டம் தன்னிடம் இருந்து விலகிவிலகிச் செல்வதை அவன் உணரும்போது, அது விதி என்று அவனே சொல்வான். தன்னுடைய ஆசைகள் நிறைவேற முடியாது என்பதை முடிவில் உணர்ந்து கொள்கிறான் அவன். அவன் எங்கே சென்றாலும், கடக்க முடியாத வலிமை வாய்ந்த ஒரு சுவர் அவனுக்கு முன் தடையாக எழுகிறது. புலன்களால் நடைபெறும் எந்தச் செயலுக்கும் ஓர் எதிர்ச் செயல் உண்டு. எல்லாமே கண நேரத்தில் மறைவதுதான், இன்பம், துன்பம், ஆடம்பரம், செல்வம், அதிகாரம், வறுமை எல்லாமே, ஏன், வாழ்க்கையேகூடக் கணநேரத்தில் மறைவதுதான். மனிதகுலத்துக்கு இரண்டு வழிகள் இருக்கின்றன. சூன்யவாதிகளுடன் சேரந்துகொண்டு, எதுவுமே இல்லை, நமக்கு ஒன்றுமே தெரியாது, எதிரகாலத்தைப் பற்றியோ, கடந்தகாலத்தைப் பற்றியோ, ஏன் நிகழ்காலத்தைப் பற்றியோகூட நம்மால் எதையும் எப்பொழுதும் அறிந்துகொள்ள முடியாது என்று நம்புவது ஒரு வழி. இறந்தகாலம், எதிர்காலம் இவற்றை மறுத்து, நிகழ்காலத்தை மட்டுமே ஒப்புகொள்ள விரும்புபவன், பைத்தியக்காரனே என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இது ஒருவன் தாய்தந்தையை மறுத்து, குழந்தையை மட்டும் ஒப்புக் கொள்வது போன்ற வாதமே. இறந்தகாலத்தையும் எதிர்காலத்தை யும் மறுக்க வேண்டுமானால், நிகழ்காலத்தையும் மறுத்தேயாக வேண்டும். இது ஒரு வழி. அதாவது சூன்யவாதிகளின் வழி. உண்மையிலேயே சூன்யவாதியாக ஒரு நிமிடமேனும் இருந்த மனிதனை இது வரை பார்த்ததில்லை. எதனையும் பேசுவது மிகவும் சுலபம். செயலில் காட்டுவது மிகவும் கடினம். செயலில் காட்டும் மனிதன் வாழ்க்கையை வெற்றி கொள்கிறான்.



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: வீட்டுக்குத் தேவையான வசதிகள் செய்து தருவீர்கள். எல்லா வகையிலும் நன்மையையும் மகிழ்ச்சியையும் தரும். திறமையான பேச்சின் மூலம் காரியவெற்றி உண்டாகும். பொறுப்புகள் அதிகரிக்கும்.



**இடபம்**: சோம்பல் இல்லாமல் சுறுசுறுப்புடன் இருப்பீர்கள். எதிர்பார்த்த காரியங்கள் மனதுக்குத் திருப்தி அளிக்கும் விதத்தில் நடந்து முடியும். எதிர்ப்புகள் அகலும். எதையும் ஒரு முறைக்கு பல முறை யோசித்துச் செய்யத் தோன்றும்.



**மிதுனம்**: யாருக்காவது உத்தரவாதம் தரும் போது கவனமாக இருப்பது நல்லது. சொன்ன சொல்லைக் காப்பாற்றப் பாடுபட வேண்டி இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு நல்ல பதவிகள் தாமதமாகக் கிடைக்கும்.



**கடகம்**: எதிர்பாராமல் ஏற்படும் குடும்பச் செலவைச் சமாளிக்கத் தேவையான பண உதவியும் கிடைக்கும். நண்பர்கள், உறவினர்கள் மூலம் தேவையான உதவிகளும் கிடைக்கப் பெறுவீர்கள். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.



**சிங்கம்**: அடுத்தவர்களுக்கு உதவி செய்யும் போது கவனம் தேவை. எதையும் ஒருமுறைக்கு இருமுறை யோசித்துச் செய்வது நல்லது. முயற்சிகள் வெற்றி பெறும். மனதில் அமைதி உண்டாகும். பொதுக் காரியங்களில் விருப்பம் அதிகரிக்கும்.



**கன்னி**: அறிவுத்திறன் கூடும். இனிமையான பேச்சின் மூலம் பலரது உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள். எதிர்ப்புகள் அகலும். உங்கள் செயல்களுக்கு இருந்த தடை நீங்கும். தொழில், வியாபாரம் தொடர்பான காரியங்களில் சாதகமான பலன் கிடைக்கும்.



**துலாம்**: பலவகை முன்னேற்றங்களும் உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு எதையும் சாதிக்கும் திறமையும் சாமர்த்தியமும் உண்டாகும். தேவையற்ற இடமாற்றம் உண்டாகலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டவும்.



**விருச்சிகம்**: மற்றவர்களுக்காகப் பரிந்து பேசும் போதும் அவர்களுக்கு உதவிகள் செய்யும் போதும் கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் நீங்கும். அறிவுத் திறமை அதிகரிக்கும்.



**தனுசு**: இனிமையான பேச்சின் மூலம் எதிலும் வெற்றி கிடைக்கும். திறமையாகச் செயற்பட்டு பாராட்டுகள் கிடைக்கப் பெறுவீர்கள். உத்தியோகத்தில் முன்னேற்றம் ஏற்படும். எதிலும் நன்மை உண்டாகும்.



**மகரம்**: எந்தக் காரியத்தையும் தீர ஆலோசித்து அதில் ஈடுபடுவது நல்லது. எல்லாக் காரியங்களும் முன்னேற்றமாக நடக்கும். பல வகையிலும் முன்னேற்றம் உண்டாகும். சொத்துத் தொடர்பான விடயங்களில் இழுபறியான நிலை காணப்படும்.



**கும்பம்**: விரிவாக்கம் தொடர்பான முயற்சிகள் இழுபறியான நிலையில் இருந்து பின்னர் நிறைவேறும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் பயணம் செல்ல வேண்டி இருக்கும் சிலருக்கு எதிர்பார்த்த பதவி உயர்வு. இடமாற்றம் தாமதப்படலாம்.



**மீனம்**: எந்த ஒரு விடயத்திலும் ஈடுபடுமுன்னர் தயக்கம் ஏற்பட்டு பின்னர் தெளிவு உண்டாகும். குடும்பத்தில் தீடீர்க் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். இழுபறியாக இருந்த காரியங்கள் முடிவுக்கு வரும். புதிய தொடர்புகளால் லாபம் கிடைக்கப் பெறுவீர்கள்.

### நாளை

**ஐப்பசி-08 சனிக்கிழமை | 25.10.2014**

திதி: துதியை பி.இ.03.58வரை
நட்சத்திரம்: விசாகம் முழுவதும்

சுபநேரம்:03.02-04.32 வரை
இராகுகாலம்:09.02-10.32 வரை

# தேசிய அணியில் வட, கிழக்கு வீரர்கள் இணைக்கும் நாள் தூரத்தில் இல்லை

## சாவகச்சேரியில் மொகான் தெரிவிப்பு



தென்மராட்சி,ஒக்.24

இலங்கை கிரிக்கெட் தேசிய அணியில் வடக்கு, கிழக்கு வீரர்களை இணைக்கும் நாள் தூரத்தில் இல்லை என்று இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் உப தலைவர் லயன் மொகான் டி சில்வா தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி லயன்ஸ் கழகம் நடத்திய கிரிக்கெட் சுற்றுப் போட்டி நேற்று முன்தினம் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நிகழ்வில் உரையாற்றிய அவர் தெரிவிக்கையில், திறமையுள்ள வீரர்களை எமது நாட்டில் உருவாக்கக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை பெரும் நிதிச் செலவில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன் அடிப்படையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிறந்த கிரிக்கெட் மைதானங்களை உருவாக்க முரளிதரன் மன்றத்தினரும் டோக்கியோ சிமெந்து நிறுவனத்தினரும் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

முதல் கட்டமாக எதிர்வரும் 29ஆம் திகதி யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் மைதானம் தொடர்பான கலந்துரையாடல் நடத்தப்படவுள்ளது. அந்தக் கலந்துரையாடலில் இலங்கை கிரிக்கட் அணியின் மூத்த வீரர்களான சனத் ஜெயசூரிய, டில்சான் உட்பட பல முன்னணி வீரர்கள் கலந்து கொள்ளவுள்ளனர் என்று தெரிவித்தார்.

மேலும் இறுதியாட்டத்தில் பந்து வீச்சில் ஜொலித்த மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த பந்து வீச்சாளர் செ.கேதீஸ்வரனைப் பாராட்டிய அவர், மூன்று பந்துப் பரிமாற்றங்களில் நான்கு ஓட்டங்களை மட்டும் கொடுத்து 5 இலக்குகளைச் சாய்த்ததைக் கண்டு வியப்படைந்தேன். மென்பந்தினை வீசி குறைந்த ஓட்டங்களில் கூடுதல் இலக்குகளை சாய்த்து எதிரணிக்கு சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்துள்ளார்.

இவரைப் போன்ற வீரர்களே நமது நாட்டின் தேசிய அணிக்குத் தேவை. இவரைப்போன்ற நிறைய வீரர்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ளனர். அவர்களை இனங்கண்டு அவர்களை தேசிய கிரிக்கெட் அணியில் சேர்க்க வேண்டுமென்பதே எனது ஆசை. இவ்வாறான வீரர்களை இனங்கண்டு தேசிய அணியில் இணைப்பதற்காக யாழ்.மாவட்டத்தில் சந்திரநாதன் என்பவரை நியமித்துள்ளோம். இனங்காணப்படும் வீரர்களுக்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அமைக்கப்படவுள்ள மைதானங்கள் மூலம் போதிய பயிற்சிகள் வழங்க கட்டுப்பாட்டுச் சபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

கிரிக்கெட் பயிற்சிகளைப் பெறவிரும்புவோர் சந்திரநாதனுடன் தொடர்பு கொண்டு எதிரகாலத்தில் சிறந்த கிரிக்கெட் வீரர்களாக மாறவேண்டும் என்றும் தெரிவித்தார். (ரி- 9)

### நட்பு ரீதியான உதைபந்தாட்ட முடிவு

சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் யாழ்.மத்திய கல்லூரிக்கும் இடையிலான நட்பு ரீதியிலான உதைபந்தாட்டப் போட்டியில் 14 வயதுப்பிரிவு அணிகளுக்கான ஆட்டம் இரு அணியினரும் எதுவித கோல்களையும் பெறாததினால் சம நிலையில் முடிவடைந்தது. 16 வயதுப் பிரிவு அணிகளுக்கான ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. 18 வயதுப் பிரிவு அணிகளுக்கான ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. 20 வயதுப் பிரிவு அணிகளுக்கான ஆட்டத்தில்யாழ்.மத்திய கல்லூரி அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ரி- 23)



## மானிப்பாய் ஏஞ்சல், மத்திய கல்லூரி வெற்றி

யாழ்ப்பாணம்.ஒக்.24

விறுவிறுப்பான ஆட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி, யாழ்.மத்திய கல்லூரி அணி ஆகியவை வெற்றி பெற்றுள்ளன.

வடமாகாண ரீதியாக யாழ்.மத்திய கல்லூரி மாணவர் முதல்வர் சபை நடத்தும் பொன் விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான 19 வய்துப்பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் லீக் ஆட்டங்கள் யாழ்.மத்திய கல்லூரி கூடைப் பந்தாட்ட திடலில் இடம்பெற்று வருகின்றன.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆண்களுக்கான முதலாவது ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை அணி மோதிக் கொண்டது. இதில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலைஅணி 56:49 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் யாழ் மத்திய கல்லூரி அணி 46:43 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. (ரி- 23)



# கேதீஸ்வரன் வேகத்தில் சம்பியனானது வளர்மதி




கேதீஸ்வரனின் வேகத்தில் சாவகச்சேரி சிவன் விளையாட்டுக்கழகத்தின் இலக்குகள் சரிய சம்பியனானது மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகம்.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் நடத்தப்பட்ட பிரதேச கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுகழக அணியும், சாவகச்சேரி சிவன் விளையாட்டுக்கழக அணியும்மோதிக் கொண்டன.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சிவன் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. 12 ஓவர்களைக் கொண்ட ஆட்டத்தில் 7.2 ஓவர்களிலேயே சகல இலக்குகளையும் இழந்த அந்த அணி, 17 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது. பந்து வீச்சில் வளர்மதி அணியைச் சேர்ந்த செ.கேதீஸ்வரன் 3 ஓவர்கள் பந்து வீசி 4 ஓட்டங்களை மட்டும் விட்டுக் கொடுத்து 5 இலக்குகளை சாய்த்தார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வளர்மதி அணி 2 இலக்குகளை மட்டும் இழந்து 3 ஓவர்களிலேயெ வெற்றி இலக்கை அடைந்து சம்பியனாகியது.

இறுதியாட்டத்தின் ஆட்டநாயகனாகவும், சிறந்த பந்து வீச்சாளராகவும் வளர்மதி அணியின் கேதீஸ்வரன் தெரிவு செய்யப்பட்டார். சுற்றுப் போட்டியின் தொடர் நாயகனாக வளர்மதி அணியைச் சேர்ந்த அஜந்தனும், சுற்றுப் போட்டியின் சிறந்த பந்துவீச்சாளராக சிவன் அணியைச் சேர்ந்த செந்தூரனும் தெரிவு செய்யப்பட்டனர். வீரர்கள் மற்றும் அணிகளுக் கான வெற்றிக் கிண்ணங்களை மாவட்ட உப ஆளுநர் லயன் வீ.பி.தியாகராஜா, சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை, இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை உப தலைவர் லயன் மொகான் டி சில்வா ஆகியோர் வழங்கினர். (ரி- 9)




### சதுரங்க சுற்றுப்போட்டி

வலி.வடக்கு.ஒக்.24.

குரும்பசிட்டி உதயதாரகை மன்றத்தின் ஆதரவில் சதுரங்க ஆர்வலர் மு.சுவாமிநாதன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு இடையேயான சதுரங்க சுற்றுப் போட்டி எதிர்வரும் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு குரும்பசிட்டி ஆ.சி.நடராசா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ரி- 86)

# ஐந்தாவது ஆண்டாக முதலிடத்தில் கே.சி.சி.சி



வலி.வடக்கு.ஒக்.24

யாழ்ப்பாணம் சென்றல் விளையாட்டுக் கழகத்தினால் அமரர் ஜோர்ஜ் வெப்பர் வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தப்பட்ட யாழ். மாவட்ட கிரிக்கெட் கழகங்களைத் தரப்படுத்தல் வரிசையில் கொக்குவில் கே.சி. சி.சி. விளையாட்டுக்கழகம் ஐந்தாவது ஆண்டாகவும் முதலாம் இடத்தைத் தக்கவைத்துள்ளது.

கடந்த ஏழு மாத காலத்தில் இடம்பெற்ற போட்டிகளின் அடிப்படையில் யாழ் மாவட்ட கழகங்களின் தர வரிசைப் பட்டியலின்படி கொக்குவில் கே.சி.சி.சி. விளையாட்டுக் கழகம் 86.82 புள்ளிகளுடன் முதலாம் இடத்திலும், யாழ். சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் 77.41 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்திலும், யாழ். பல்கலைக் கழக விளையாட்டுக் கழகம் 70.60 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்திலும் உள்ளன.

இதேவேளை யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் 59.70 புள்ளிகளையும், வண்ணார் பண்ணை ஸ்ரீ காமாட்சியம்பாள் விளையாட்டுக் கழகம் 56.56 புள்ளிகளையும், யாழ். பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழகம் 49.28 புள்ளிகளையும், மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக் கழகம் 48.30 புள்ளிகளையும், தெல்லிப்பளை யூனியன்ஸ் விளையாட்டுக் கழகம் 45.02 புள்ளிகளையும், யாழ். ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம் 42.13 புள்ளிகளையும், யாழ். ஜொலி ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 32.93 புள்ளிகளையும் பெற்று தொடர்ந்து வரும் 10 இடங்களில் உள்ளன.

திருநெல்வேலி கிரிக்கெட் விளையாட்டுக் கழகம் 29.90 புள்ளிகளையும், வட்டுக்கோட்டை ஓல்ட் கோல்ட்ஸ் விளையாட்டுக் கழகம் 23.84 புள்ளிகளையும், சுழிபுரம் விக்ரோறி விளையாட்டுக் கழகம் 21.07 புள்ளிகளையும், சுன்னாகம் ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 20.74 புள்ளிகளையும், அரியாலை சென்றல் விளையாட்டுக் கழகம் 20.43 புள்ளிகளையும்; அரியாலை ஸ்ரான்லி விளையாட்டுக் கழகம் 14.67 புள்ளிகளையும், கந்தர்மடம் நியூ ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 14.35 புள்ளிகளையும், யாழ்ப்பாணம் சென்ரலைட்ஸ் (புளூஸ்) விளையாட்டுக் கழகம் 11.42 புள்ளிகளையும், திருநெல்வேலி வை.எம்.ஏச்.எ விளையாட்டுக் கழகம் 11.27 புள்ளிகளையும், வலிகாமம் யங் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 7.86 புள்ளிகளையும் பெற்றுள்ளன. (ரி- 86)

# இலங்கை தயார்

இந்திய அணியுடன் ஒருநாள் தொடரில் மோதவுள்ள இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது.
இந்திய சுற்றுப்பயணத்தை மேற்கிந்திய தீவுகள் அணி திடீரென ரத்து செய்ததால், இலங்கையுடன் இந்தியா 5 ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடுகிறது. இந்தத் தொடரின் ஆட்டங்கள் கட்டாக், ஐதராபாத், ராஞ்சி, கொல்கத்தா, அகமதாபாத் ஆகிய நகரங்களில் அடுத்த மாதம் நடைபெறவுள்ளன. அதற்கு முன்னதாக எதிர்வரும் 30 ஆம் திகதி இந்திய ஏ அணிக்கு எதிரான பயிற்சி ஆட்டத்திலும் இலங்கை அணி விளையாடவுள்ளது.
இந்தநிலையில் இந்தியத் தொடரில் பங்கேற்கவுள்ள இலங்கை அணி நேற்று அறிவிக்கப்பட்டது. அணியில் வேகப்பந்து வீச்சாளரான லசித் மலிங்க இடம் பெறவில்லை. அதேபோல், இடது கைச் சுழற்பந்து வீச்சாளர் ரங்கண ஹேரத்துக்கும் ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது. அவருக்கு பதிலாக சுராஜ் ரன்டிவ் மீண்டும் அணிக்கு சேர்க்கப்பட்டுள்ளார். காயத்தில் இருந்து முழுமையாக குணமடையாத நிலையில் அணியில் இடம்பெற்றுள்ள குமார் சங்கக்கார ஆட்டத்துக்கு தகுதி பெறவில்லை என்றால் நிரோஷன் டிக்வெல்ல அணிக்கு அழைக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
அறிவிக்கப்பட்ட இலங்கை அணி விபரம் : அஞ்சலோ மத்தியூஸ் (அணித்தலைவர்), குசால் பெரேரா, டில்சான், உப்புல் தரங்க, குமார் சங்கக்கார, ஜெயவர்த்தன, அஷன் பிரியஞ்சன், நிரோஷன் டிக்வெல்ல, திசாரா பெரேரா, நுவான் குலசேகர, தம்மிக்க பிரசாத், லகிரு காமேஜ், சதுரங்க டி சில்வா, சேகூஜ பிரசன்னா, சுராஜ் ரன்டிவ் (ரி)

# உலகக்கிண்ணத்தில் சேவாக், யுவராஜ்




உலகக்கிண்ண தொடருக்கான இந்திய அணியில் மீண்டும் சேவாக், யுவராஜ் இடம்பெறு வார்கள் என இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவரும், தொலைக்காட்சி வர்ணனையாளருமான சுனில் கவாஸ்கர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.
இதுபற்றி அவர் கூறுகையில், உலகக்கிண்ணத்தைக் கருத்தில் கொண்டு புது முகங்களுக்கு தெரிவு குழுவினர் வாய்ப்பு வழங்கி வருகி றார்கள். அதன் காரணமாக இருவரும் நம்பிக்கை இழந்து விடக்கூடாது. ஆனால் சேவாக், யுவராஜ்சிங் போன்ற திறமையான வீரர்கள் இருப்பது தெரிவுக் குழுவினருக்கு ஏற்கனவே தெரியும். உள்ளூர் ஆட்டங்களில் சிறப்பாக செயற்பட்டால் அவர்களால் அணியில் நிச்சயமாக இடம் பெற முடியும். டோனியின் அணியில் இந்த இருவரும் மிகப்பெரிய சொத்தாகும். இருவருமே சிறந்த அதிரடி துடுப்பாட்டக் காரர்கள். இருவருக்கும் வயது ஒரு பிரச்சினை கிடையாது. இருவரும் உலகக்கிண்ண அணியில் இடம் பெறுவதற்கான வாயப்பு இல்லை என்று கூறிவிட முடியாது. இடம் பெறுவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது என்று சுனில் கவாஸ்கர் கூறியுள்ளார்.
ஏற்கனவே டோனி மாற்றங்களை விரும்பாதவர் எனவே உலகக்கிண்ண அணியில் இவர்களது வாய்ப்பு சந்தேகம் தான் என்று கங்குலி கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ரி)

# சரிதா தேவி இடை நிறுத்தம்



ஆசிய விளையாட்டு குத்துச்சண்டையில் பதக்கத்தை ஏற்க மறுத்த இந்திய வீராங்கனை சரிதா தேவி மற்றும் அவரது 3 பயிற்சியாளர்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளனர். இதனால், தென்கொரியாவின் உலக குத்துச்சண்டைப் போட்டியில் சரிதா தேவி பங்கேற்க முடியாது போயுள்ளது.
தென் கொரியாவின் இன்ச்சியானில் சமீபத்தில் ஆசிய விளையாட்டு நடந்தது. இதில், பெண்கள் குத்துச்சண்டை அரையிறுதியில் இந்திய வீராங்கனை சரிதா தேவி, தென் கொரியாவின் ஜினா பார்க்கை எதிர்கொண்டார். அதில் சிறப்பாகச் செயற்பட்டபோதும் சரிதா தேவி தோல்வியடைந்ததாக அறிவிக்கப்பட்டார். பின் நடந்த பதக்கம் வழங்கும் விழாவில், வெண்கலப் பதக்கத்தை கழுத்தில் அணிய மறுத்து, கையில் வாங்கிக் கொண்டார். அத்துடன் ஜினாவின் கழுத்தில் அணிவித்து சர்ச்சையைக் கிளப்பினார். பின்னர் தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்ததால், ஆசிய ஒலிம்பிக் கவுன்சில் கடுமையான எச்சரிக்கையுடன் மன்னித்து விட்டது.
இந்நிலையில், ஆசிய விளையாட்டு பதக்க மேடையில் தவறாக நடந்து கொண்ட சரிதா தேவியை சர்வதேச குத்துச் சண்டைச் சங்கம் தற்காலிகமாகத் தடை செய்வதாக அறிவித்துள்ளது. அத்துடன், அவரது பயிற்சியாளர்கள் மூவருக்கும் தடை விதிக்கப்பட்டுளது.
இதனால் தென் கொரியாவின் ஜேஜு நகரில் உலக சம்பியன்ஷிப் பெண்கள் குத்துச்சண்டை போட்டியில் சரிதா தேவி பங்கேற்க முடியாது போயுள்ளது.



இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரரும், சகலதுறை ஆட்டக்காரருமான திலகரட்ண டில்சான் புதிய விடுதி ஒன்றை ஆரம்பித்துள்ளார். டி பவிலியன் இன் என்னும் பெயருடன் கிருலப்பனையில் அமைக்கப்பட்டுள்ள இந்த விடுதியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திறந்து வைத்தார். (ரி-த)

# இவானோவிச் வெற்றி



பரிபாஸ் ஓபன் ரென்னிஸ் தொடரின் இரண்டாவது லீக் போட்டியில் செர்பியாவின் அனா இவானோவிச் வெற்றிபெற்றர். அதேவேளை தரவரிசையில் முதலிடத்தில் உள்ள செரினா தோல்வியடைந்தார்.
சிங்கப்பூரில் பரிபாஸ் ரென்னிஸ் தொடர் நடைபெற்று வருகிறது. இதன் ரெட் பிரிவில் நடந்த இரண்டாவது லீக் போட்டியில் செர்பியாவின் அனா இவானோவிச், கனடாவின் பவுச்சர்ட்டை எதிர் கொண்டார். போட்டியின் முதல் செற்றை 6:1 என எளிதாக கைப்பற்றிய இவானோவிச், இரண்டாவது செற்றையும் 6:3 என தன்வசப்படுத்தினார். முடிவில், இவானோவிச் 6:1, 6:3 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானார்.
மற்றொரு போட்டியில் தரவரிசையில் முதலிடத்தில் உள்ள வீராங்கனையான அமெரிக்காவின் செரினா 0:6, 2:6 என்ற கணக்கில் ருமேனியாவின் சிமோனா ஹாலப்பிடம் தோல்வியடைந்தார். (ரி)

# விரைவான 50



தென்னாபிரிக்க இலக்குக்காப்பாளர் குவிண்டன் டி கொக் குறைந்த ஒருநாள் ஆட்டங்களில் 50 பேரை ஆட்டமிழக்கச் செய்து புதிய சர்வதேச சாதனை படைத்துள்ளார்.
நியூஸிலாந்துக்கு எதிரான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி 6 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து 45.1 ஓவர்களில் 230 ஓட்டங்களுக்கு சுருண்டது. பின்னர் ஆடிய தென்னாபிரிக்கா 48.1 ஓவர்களில் 4 இலக்குகள் இழப்புக்கு 236 ஓட்டங்கள் எடுத்து வெற்றி கண்டது.
இந்த ஆட்டத்தில் தென்னாபிரிக்க இலக்குக் காப்பாளரான குவிண்டன் டி கொக் 5 பிடியெடுப்புகள், 1 ஸ்டம்பிங் என்று அசத்தினார். இதன் மூலம் 27 ஆடங்களில் 50 பேரை ஆட்டமிழக்கச் செய்து புதிய சாதனை புரிந்தார்.
மேற்கிந்திய தீவுகளின் ரிட்லி ஜேகப்ஸ், இங்கிலாந்தின் ஜெரைண்ட் ஜோன்ஸ் மற்றும் ஜோஸ் பட்லர் ஆகியோர் 30 ஒருநாள் ஆட்டங்களிலேயே 50 பேரை ஆட்டமிழக்கச் செய்த சாதனையை வைத்திருந்தனர். தற்போது 27 ஆட்டங்களில் 50 பேரை ஆட்டமிழக்கச் செய்த வகையில் டி கொக் புதிய சாதனை நிகழ்த்தியுள்ளார். (ரி)

# பிக் பாஷில் பிளின்ரொப்




ஆஸ்திரேலியாவில் நடத்தப்படும் பிக் பாஷ் லீக் 20 ஓவர் கிரிக்கெட் போட்டித் தொடரில் பிரிஸ்பன் ஹீட் அணிக்காக இங்கிலாந்து முன்னாள் சகலதுறை வீரர் அன்ட்ரூ பிளின்ரொப் விளையாடுகிறார்.

2009ஆம் ஆண்டு தொடர்ச்சியான காயம் காரணமாக சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து பிளின்ரொப் ஓய்வு பெற்றார். பின்னர், இங்கிலாந்து உள்நாட்டு ரி- 20 கிரிக்கெட்டில் லங்காஷயர் அணிக்காக அவர் சமீபத்தில் விளையாடினார். தற்போது பிக் பாஷ் தொடரில் இணைந்து கொண்டமை குறித்து அவர் கூறும்போது, பயிற்சியாளர் ஸ்டுவர்ட் லா என்னுடன் பேச்சு வார்த்தை நடத்தினார். இந்தப் போட்டித் தொடரில் என்ன சாதிக்க வேண்டும் என்பது பற்றி பேசினோம். பிரிஸ்பன் ஹீட் அணியில் திறமையான இளம் வீரர்கள் உள்ளனர். டானியல் விக்டோரியுடன் மீண்டும் ஆடுவது எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது என்றார்.

79 டெஸ்ட் ஆட்டங்களிலும், 141 ஒருநாள் ஆட்டங்களிலும் விளையாடிய பிளின்ரொப் 2005 ஆம் ஆண்டு ஐசிசியின் சிறந்த வீரராகத் தெரிவு செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ரி)

## தொடர்ச்சிகள்

### இலங்கை

குடியரசு மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் மீதே இந்த விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது. இது மூன்று விசேட குழுக்கள் ஊடாக முன்னெடுக்கப்பட்டது என்றும் குறிப்பிட்டுள்ளார். எதிர்காலத்தில் பலஸ்தீனம், எரித்திரியா மற்றும் ஈராக் குறித்தும் விசாரணைகள் இடம்பெறலாம். கடந்த மாதம் பதவியேற்றபோது, பெரும் நிதிப்பற்றாக்குறைக்கு மத்தியிலும் எனது அலுவலகம் முன்னெடுத்துள்ள பணிகளை பார்த்து ஆச்சரியமடைந்தேன்.

ஐ.நாவின் முக்கிய தூண்களில் ஒன்றான மனித உரிமைக்கு தற்போது மிக குறைந்தளவு வளங்களே கிடைக்கின்றன. ஏனைய துறைகளுக்கு வழங்கப்படுவதை விட குறைவாகவே மனித உரிமைகளுக்கு வழங்கப்ப டுகின்றது. இது தொடரமுடியாது.

மனித உரிமைகள் மீறப்படும்போது துஷ்பிரயோகங்களும், மீறல்களும் பெரிய மோதல்களை உருவாக்கும் போது, சகலவகைகளிலும் இழப்புகள் மிகப் பெரிதாகக் காணப்படுகின்றன. மனித உரிமை மீறல்களை கண்டுபிடித்து எச்சரிப்பதற்கான தனது அமைப்பின் திறனை அதிகரிக்குமாறும், ஆபத்தான சமிக்ஞைகள் வெளியானவுடன் உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறும் அவர் அந்த அறிக்கையில் கோரியுள்ளார். (ற-5)




# குல்தீப்பின் ரோல் மொடல் ரெய்னா

தனது 'ரோல் மொடல்' சுரேஸ் ரெய்னா என்று இந்திய சுழற்பந்து வீச்சாளர் குல்தீப் யாதவ் தெரிவித்துள்ளார்.

கொல்கத்தா அணிக்காக சம்பியன்ஸ் லீக் தொடரில் பல்கேற்ற குல்தீப் முதல் தர ஆட்டங்கள் எதிலும் பங்கேற்காத நிலையில் இந்திய அணியில் இடம் பெற்று ஆச்சரியம் கொடுத்தார். மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான ஒருநாள் தொடரில் தெரிவு செய்யப்பட்ட இவர், ஒரு ஆட்டத்தில் கூட களமிறக்கப்படவில்லை. இருப்பினும், மூத்த வீரர்களுடன் பகிர்ந்து கொண்ட அனுபவங்கள் பற்றி கூறுகையில், முதன் முறையாக இந்திய அணியின் உடைமாற்றும் அறைக்குள் நுழைந்த போது, அணித்தலைவர் டோனி உட்பட அனைத்து வீரர்களும் கைகொடுத்து வரவேற்றனர். முதன் முறையாக அவர்கள் என்னிடம் பேசியது அதிக-புத்துணர்ச்சி கொடுத்தது. இந்த சிறிய வயதில் இந்திய அணியில் இடம்பெறுவேன் என்று கொஞ்சம் கூட நினைத்துப் பார்த்தது இல்லை. ஆனால் கிரிக்கெட் விளையாடத் தொடங்கிய போது எப்படியும் 2016இற்குள் இந்திய அணியில் இடம் பெற வேண்டும் என நினைத்துக் கொண்டிருந்தேன். இதற்கு ஐ.பி.எல். பெரும் உதவியாக இருந்தது. என்றார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்திய அணியின் ரெய்னாவை இதற்கு முன் 2012இல் சந்தித்து ஆலோசனை பெற்றேன். அவரது தம்பியாக நினைத்துக் கொண்டு எனக்கு உதவிகளைச் செய்தார். இந்திய அணிக்கு தெரிவு செய்யப்பட்டதும் அவர் தான் முதலில் வாழ்த்து தெரிவித்தார். தற்போது அணியில் என்னுடன் இருப்பதால் என்மீது முழுக்கவனம் எடுத்துக் கொள்கிறார். எனக்கு அவர் தான் ரோல் மொடல் என்று கூறினார். (ரி)

advt@uthayan.com
0215671111

**METRO GRANITE**

பல வர்ணங்களிலான தரமான கிரனைட் வகைகள் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

வணக்க தலங்களுக்கு விசேட விலைக்கழிவு

212, Palaly Rd, Jaffna. 021 222 0033

(C/16893)(10)

**பணிநிலை வெற்றிடம்**

சிற்றூழியர் (பெண்) உள்வாரி வேலை
வயதெல்லை: 30-45வயதுவரை

நேர்முகத்தேர்வு :
25.10.2014 சனிக்கிழமை
முற்பகல் 09.00 மணி - 02.00 மணி வரை
(சுயவிபரக்கோவையுடன் சமூகமளிக்கவும்)

ANDRA Digital Image
379,Kasthuriyar Road, Jaffna.
021 720 0000 , 0776622981

**மணமகள் தேவை**

கிறிஸ்தவ கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1982இல், பிறந்த விவாகரத்து பெற்ற மணமகனுக்கு மணமகள் தேவை.
077 479 1740 (65460) (10)

**வாகன சாரதி தேவை**

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு பிரத்தியேக சாரதி ஒருவர் தேவை. மேல் மாகாண, வட மாகாண பாதைகள் தெரிந்த சிங்கள மொழி பேசக்கூடிய அனுபவம் உடையவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
குறிப்பு: தங்குமிட வசதியும், சமைப்பதற்கு ஏற்ற வசதியும் செய்து கொடுக்கப்படும். தகுதி உடையோர் உங்கள் விண்ணப்பங்களையும், சான்றிதழ்களையும் த.பெ.இல 2129, கொழும்பு என்ற முகவரிக்கு 30/10/2014 இற்கு முன்பு அனுப்பவும். ஈ.மெயில் மூலம் அனுப்ப விரும்புவோர் Jobrequirements12@gmail.com என்ற முகவரிக்கு அனுப்பவும்.
மேலதிக தொடர்புகளுக்கு: 0714273035

## கந்தசஷ்டி உற்சவம்

நீர்வேலி கந்தசுவாமி கோவிலின் கந்தசஷ்டி உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறும்.

எதிர்வரும் 29ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு வேல் வழங்கும் காட்சியும், தொடர்ந்து பிற்பகல் 3 மணிக்கு சூரசங்கார உற்சவமும் இடம்பெறும். தொடர்ந்து மறுநாள் வியாழக்கிழமை காலை 8 மணிக்கு தீர்த்தோற்சவமும் அடுத்தநாள் வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு திருக்கல்யாண உற்சவமும் நடைபெறும். (த-17)

## மரண அறிவித்தல்

### முருகேசு வர்ணகுலசிங்கம்
(யாழ் பல்கலைக்கழக நுண்கலைப்பீட விரிவுரையாளர்)



சிறுவிளான் இளவாலையைச் சேர்ந்த சங்கீத வித்துவான் சிவஸ்ரீ முருகேசு வர்ண குலசிங்கம் நேற்று(23.10.2014) வியாழக் கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் சங்கீதவித்துவான் வர்ணராமேஸ்வரன் (கனடா), ஜெயேஸ்வரி(கனடா), காலஞ் சென்றவர்களான கலைஞானசிங்கம், ஞானேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும் கைலாயநாதன், சபர்மதி ஆகியோரின் மாமனும் வைத்திய கலாநிதி சர்வேஸ்வரனின் மைத் துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24.10.2014) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப 4மணிக்கு அளவெட்டி வீர சைவ இந்து மயானத்தில் சமாதிக்கிரியைகள் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிறுவிளான்,
இளவாலை

T.P : 0775132583
0775693550

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### விசுவலிங்கம் முத்துக்குமார்



யாழ். அல்லைப்பிட்டி 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும், இந்தியாவை தற்காலிக வசிப்பிடமாகவும், லண்டனை வதிவிடமாகவும் கொண்ட விசுவலிங்கம் முத்துக்குமார் 21-10-2014 செவ்வாய்க்கிழமை அன்று லண்டனில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம்-இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான குருநாதபிள்ளை-பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், பராசக்தியின் அன்புக் கணவரும், மகேந்திரன் (ஜெயா- கனடா), சந்திரகுமாரி(சந்திரா- லண்டன்), காலஞ்சென்ற கிருஷ்ணகுமார், பாலகுமார்(குமார்-சுவிஸ்), கண்ணகுமார்(கண்ணன்-லண்டன்), சந்திரகுமார் (சந்திரன்- லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற கந்தசாமி (சோளாவத்தை, வேலணை), பார்வதிப்பிள்ளை(கனடா), வல்லிபுரநாதன் (புளியங்கூடல், கொழும்பு), கமலாதேவி (கனடா), இராசலிங்கம்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், அருட்செல்வி(கனடா), சிறிகரன் (லண்டன்), சந்திரேஸ்வரி(சுவிஸ்), நகுலேஸ்வரி(ஜீவா- லண் டன்), கோமதி(லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்ற சரோஜா கந்தசாமி, இரத்தினம்மா கந்தசாமி (கனடா), கனகரட்ணம்(கனடா), பாக்கியலட்சுமி வல்லிபுரநாதன்(புளியங்கூடல், கொழும்பு), பரமநாதன் (கனடா), சத்தியரூபி இராசலிங்கம்(லண்டன்), காலஞ்சென்றவர்களான அன்னசோதி சுப்பிரமணியம், சிவப்பிரகாசம், கிளி மற்றும் சீதாலட்சுமி அருமைநாயகம்(அல்லைப்பிட்டி), திருச்செல்வம் (மல்லாவி), சுந்தரலிங்கம் (யாழ்ப்பாணம், நேரக்காப்பாளர்,புங்குடுதீவு-நயினாதீவு சிற்றூர்திகள் சேவை), கனகலிங்கம்(கனடா), மங்கையற்கரசி சண்முகலிங்கம் (மல்லாவி), காலஞ்சென்றவர்களான திருக்கேதீஸ்வரி, கௌரி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், யதுஷா, அஷ்வியா, நிஷாந்தி, ரோகீதன், நிதுஷா, பவிதா, ஷர்மி, பஸ்ந்தியா, பிரித்திக்கா, பிரவீன், தஷானா, மிதுசயன், திபுஷன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 26.10.2014 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3ஆம் வட்டாரம்,
அல்லைப்பிட்டி.

(53455) (10)

தகவல்: சு.சுந்தரலிங்கம்
(மைத்துனர்), 0771801132

## மரண அறிவித்தல்

### திருமதி செல்வமணி கைலைநாதன்



அச்சுவேலி இடைக்காட்டை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் திருகோணமலையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வமணி கைலைநாதன் கடந்த 22.10.2014 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விசுவலிங்கம்-பாக்கியமனோன்மணி தம்பதிகளின் ஏக புத்திரியும் காலஞ்சென்ற துரையப்பா-தங்கமுத்து தம்பதியரின் மருமகளும் கைலைநாதனின்(முன்னாள் கணக்காளர் அம்பிகா களஞ்சியம் யாழ்ப்பாணம்) பாசமிகு மனைவியும் கங்கா(ஆசியரியை தி/ஸ்ரீவாணி வித்தியாலயம் தயாபரம்(பொறுப்பாளர்-நியூசிலாந்து) ஆகியோரின் அன்புத் தாயாரும் சோமகாந்தன்(மீள் எழுச்சித்திட்டம் திருகோணமலை), லக்ஷி(பொறியிலாளர்-சிங்கப்பூர்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சஞ்சனாவின் அருமைப் பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(24.10.2014) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பி.ப 2.00மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இடைக்காடு சாமித்திடல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொத்தவளவு,
இடைக்காடு, அச்சுவேலி.

T.P : 0777162117

தகவல்:
குடும்பத்தினர்.

## ஜனாதிபதித் தேர்தல் குறித்து மு.கா. இன்னும் முடிவில்லை

மட்டக்களப்பு. ஒக். 24
ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இன்னமும் எந்தவொரு தீர்க்கமான முடிவையும் எடுக்கவில்லை என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும், மாகாணசபை அமைச்சருமான ஹாபீஸ் நசீர் அஹமத் தெரிவித்தார்.

உம்றா கடமையை முடித்துவிட்டு நாடு திரும்பிய நசீர் அஹமத் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கருத்து வெளியிட்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்;
ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இன்னமும் எந்தவொரு தீர்க்கமான முடிவையும் எடுக்கவில்லை. இந்த விடயம் தொடர்பில் வெளிவரும் வதந்திகளை நம்பிக் குழம்பவேண்டாம். முஸ்லிம் காங்கிரஸ் தொண்டர்களும் முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்களும் சமூக நடத்தையில் அக்கறை கொண்டவர்களும் இதனை கருத்தில் கொள்ளவேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலையும் முஸ்லிம் காங்கிரசின் தலைமையையும் தொடர்புபடுத்தி வெளிவந்திருக்கும் உண்மைக்கு புறம்பான கருத்துக்கள் தொடர்பில் யாரும் குழப்பமடையவேண்டாம். கட்சிக்குள்ளேயே உள்ள ஒரு சிலரும், கட்சிக்கு எதிரான சிலரும் தலைவர் ரவூப் ஹக்கீமை வீழ்த்துவதற்காக மேற்கொண்டுவரும் சதியின் ஒரு வடிவமே இது.

முஸ்லிம் காங்கிரஸ் எந்தவொரு ஜனாதிபதி வேட்பாளரையும் ஆதரிப்பதாக வாக்குக் கொடுக்கவில்லை. முஸ்லிம் மக்களின் அபிலாசைகளை பூர்த்திசெய்ய முன்வரும் வேட்பாளர் ஒருவருக்கே ஆதரவு வழங்குவதாக உள்ளோம். இந்த நிலைப்பாட்டில் முஸ்லிம் காங்கிரஸின் அடிமட்டத்தில் இருந்து உயர்மட்டம் வரை நன்கு பரிசீலிக்கப்பட்ட பின்னரே சமுதாயத்துக்கு பொருத்தமான முடிவொன்றை கட்சி எடுக்கும்.

எனவே கட்டுக்கதைகளை நம்ப வேண்டாம். தேர்தல் காலங்களில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீமை குறிவைத்து இவ்வாறான கதைகள் வெளிவருவது வழமையே. அந்த வகையில் முஸ்லிம் வாக்காளர்களாகிய நீங்கள் அந்தக் கதைகளை கேட்பதோடு மட்டும் நின்றுவிடுங்கள். இது நிஜம் அல்ல என்பதை மனதில் நிறுத்துங்கள் எனத் தெரிவித்தார். (த-10)

# சம்பூரிலிருந்து இடம்பெயர்ந்தோர் உணவுக்குக்கூட கையேந்தும் நிலை

## கிழக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

சம்பூர், ஒக்.24
திருகோணமலை -சம்பூரிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் ஒருவேளை உணவைப் பெறுவதற்குக்கூட மற்றவர்களிடம் கையேந்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தமிழ் தேசிய கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் சி.தண்டாயுதபாணி தெரிவித்தார்.



அகதி முகாம்களில் வாழும் சம்பூர் மக்களை சந்தித்த பின் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் :-
சம்பூர் பிரதேசத்தின் திருகோணமலை மாவட்டத்திலே அகதி மக்களின் பிரச்சினை பெரிய பிரச்சினையாக வளர்ந்து நிற்கின்றது. இந்த மக்கள் அடிப்படையான வாழ்வாதார வசதிகள் அற்ற வகையிலேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். உணவுக்குக்கூட அவர்கள் மற்றவர்களிடம் கையேந்த வேண்டிய ஒரு நிலை இருக்கின்றது. சம்பூரிலே இருந்து இடம்பெயர்ந்த மக்கள் இப்போது நான்கு கிராமங்களில் உள்ள அகதி முகாம்களில் வாழ்ந்து வருகின்றார்கள். கிளிவெட்டி- மணற்சேனை- பட்டித்திடல்- கட்டைப்பறிச்சான் ஆகிய கிராமங்களில் உள்ள அகதி முகாம்களில் வசதியற்ற நிலையிலேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இதனை அரசாங்கம் நலன்புரி நிலையங்கள் என்று சொல்கின்றது. ஆனால், இந்த மக்களுடைய நலன்களை அடிப்படை வசதிகளையாவது மேம்படுத்தக்கூடிய அளவு வசதிகள் இந்த அகதி முகாம்களில் செய்து கொடுக்கப்படவில்லை நாட்டில் நிலவிய அசாதாரண சூழ் நிலையின் காரணமாக 2006 ஆம் ஆண்டு சம்பூரிலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு இதுவரை தமது சொந்த இடம் என்பது வெறும் கனவாகவே இருந்து வருகின்றது. சம்பூரிலிருந்து இடம்பெயர்ந்த சுமார் 848 குடும்பங்கள் அடிப்படை வசதிகளற்ற முகாம்களில் தற்போது வாழ்ந்து வருகின்றனர் எனத் தெரிவித்தார். (த-10)



கேதார கௌரி விரதத்தின் இறுதிநாளான நேற்று வியாழக்கிழமை மட்டக்களப்பிலுள்ள பெரும்பாலான இந்து ஆலயங்களில் நிகழ்வுகள் சிறப்புற இடம்பெற்றன. அந்த வகையில் ஏறாவூர்- ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத்திலும் சிவஸ்ரீ எஸ். உருத்திரமூர்த்தி குருக்கள் தலைமையில் கேதார கௌரி விரதம் அனுஷ்டித்த பக்தர்களுக்கு காப்புக் கட்டப்பட்டது. நிகழ்வில் கலந்து கொண்ட பக்தர்களில் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம். (த-10)

## யுவதியின் சங்கிலி அபகரிப்பு

ஏறாவூர், ஒக்.24
மட்டக்களப்பு, ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மைலம்பாவெளியில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் யுவதியொருவரின் தங்கச்சங்கிலியை அபகரித்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் கடந்த புதன்கிழமை முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மைலம்பாவெளி - விபுலானந்தபுரத்தில் வசிக்கும் நடராஜா வேணுஜா (வயது 23) என்ற யுவதியின் தங்கச் சங்கிலியே இவ்வாறு அபகரிக்கப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. குறிப்பிட்ட பெண் அணிந்திருந்த தாவணியைப் பறித்து மோட்டார் சைக்கிளின் இலக்கத்தகடை மூடி தப்பிச் சென்றுள்ளனர்.

மைலம்பாவெளியிலு[illegible] தனது வீட்டிலிருந்து விபுலானந்தபுர உள்வீதியால் நடந்து வந்து கொண்டிருக்கும்போது எதிரே மோட்டார் சைக்கிளொன்றில் வந்த இருவர் தனது கழுத்திலிருந்த ஒன்றே கால் பவுண் தங்கச் சங்கிலியைப் பறித்துச் சென்றதாக் அவர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-10)



## கிழக்கு பல்கலை துணை வேந்தராக கலாநிதி கிட்ணன் கோபிந்தராஜா

மட்டக்களப்பு. ஒக்.24
கிழக்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரைத் தெரிவு செய்வதற்காக நடைபெற்ற பேரவை வாக்கெடுப்பில் கலாநிதி கிட்ணன் கோபிந்த ராஜா துணை வேந்தராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். இந்த வாக்கெடுப்பு கிழக்கு பல்கலைக் கழக சபா மண்டபத்தில் கடந்த செவ்வாய்கிழமை நடைபெற்றது.

கிழக்கு பல்கலைக்கழகத்துக்கான துணைவேந்தர் நியமனத்துக்காக தகுதி உடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்ட நிலையில் ஒன்று கூடிய பேரவை உறுப்பினர்களின் முன்னிலையில் இந்தத் தெரிவு இடம்பெற்றது. நடைபெற்ற துணைவேந்தர் தெரிவின்போது அதிகப்படியான 15 விருப்பு வாக்குளைப் பெற்று கலாநிதி கிட்ணன் கோபிந்தராஜா முதலாவது இடத்தை பெற்றுக்கொண்டார். கிழக்குப் பல்கலைக்கழக அழகியல் கற்கைகள் நிறுவகப் பணிப்பாளர் கலாநிதி கே.பிரேம்குமார் 10 வாக்குகளையும், கலாநிதி எம்.எம்.மௌசூன் 10 வாக்குகளையும் பெற்று இரண்டாம் மூன்றாம் இடங்களைப் பெற்றுக்கொண்டனர். தகுதியுடைய 9 பேர் கிழக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பித்த நிலையில் இறுதிக்கட்டத்தில் இரண்டு விண்ணப்பதாரிகள் விலகியிருந்தனர். பேரவையினால் வாக்குகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களை பெற்றவர்களின் பெயர்கள் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கு அனுப்பப்பட்டு இறுதியாக ஜனாதிபதியினால் அடுத்த மூன்றாண்டு கால பதவிக்கான துணைவேந்தர் தெரிவு செய்யப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-10)

## நல்லின தென்னம்கன்றுகள் ஏறாவூர் பிரதேசத்துக்கு

ஏறாவூர்.ஒக். 24
ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள செங்கலடி, கொடுவாமடு, தம்பானம் வெளி, இலுப்படிச்சேனை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கு 4 ஆயிரம் உயர் ரக நல்லின தென்னங்கன்றுகள் புதன்கிழமை விநியோகிக்கப்பட்டன.

பிரதேசத்துக்கும் காலநிலைக்கும் ஈடுகொடுக்கக்கூடிய 'ரீடி' எனப்படும் உயர்ரக நல்லின தென்னங்கன்றுகள் 6 வருடங்களில் சிறந்த பயன் தரக் கூடியவையென்று மட்டக்களப்பு தெங்கு அபிவிருத்தி தென்னை பயிர்ச்செய்கைச் சபையின் பிராந்திய முகாமையாளர் வசந்த பமுனுகொத்கே தெரிவித்தார்.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்துக்கு டிசெம்பர் மாதத்துக்கிடையில் 30 ஆயிரம் தென்னங்கன்றுகள் விநியோகிக்கும் திட்டத்தின் கீழ், தற்சமயம் தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டுவருவதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கல்குடாத்தொகுதி அமைப்பாளர் டி.எம்.சந்திரபால தெரிவித்தார். மேலும், தென்னை வளர்ப்போருக்கு பல்வேறு நிவாரணங்களையும் மானியங்களையும் இன்னும் பல இலவச ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளையும் அரசு வழங்கி வருவதாகவும் அவர் கூறினார்.

இந்த நிகழ்வுகளில் மட்டக்களப்பு தெங்கு அபிவிருத்தி தென்னை பயிர்ச்செய்கைச் சபையின் பிராந்திய முகாமையாளர் வசந்த பமுனுகொத்கே, தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் ரீ.எம்.சாஜித், கல்குடாத் தொகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மத்திய கிளைச் செயலாளர் ஐ.லலீந்திரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (த-10)

# மு.காவின் அபிவிருத்தித் திட்டங்கள் கல்முனை மக்களிடம் கையளிப்பு

சாய்ந்தமருது. ஒக். 24
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபகத் தலைவரும் முன்னாள் அமைச்சருமான மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப்பின் 66 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டும் கல்முனை மாநகர முதல்வராக எம்.நிஸாம் காரியப்பர் பதவியேற்று ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டும் இன்று கல்முனைத் தொகுதியில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மக்களிடம் கையளிக்கப்படவுள்ளன.

இந்தவைபவங்களில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசியத் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக சாய்ந்தமருதில் புனரமைப்பு செய்யப்பட்டு புதுப் பொலிவுடன் காட்சியளிக்கும் மாநகர சபையின் பிரதான வரவேற்புக் கோபுரம் திறந்து வைக்கப்படவுள்ளதுடன் சாய்ந்தமருது கடற்கரைப் பிரதேசத்தில் சுமார் 17 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பீச் பார்க் பொழுது போக்கு பூங்காவும் திறந்து வைக்கப்படவுள்ளது. அத்துடன் கல்முனை நகரில் ஐந்து கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற ஐக்கிய சதுக்கத்தின் இரண்டாம் கட்ட நிர்மாணப் பணிகள் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளன. இந்த ஐக்கிய சதுக்கத்தில் கேட்போர் கூடம், கடைத் தொகுதி, விளையாட்டு மைதான பார்வையாளர் அரங்கு, வாகனத் தரிப்பிடம், உணவகம், பொழுதுபோக்கு நிலையம் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் சந்தாங்கேணி ஐக்கிய விளையாட்டு மைதானமும் நவீன முறையில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

மேலும் கல்முனை நகரில் அமைந்துள்ள பொது நூலகத்துக்கு அதன் பிதா மகனான் முன்னாள் அமைச்சர் ஏ.ஆர். மன்சூரின் பெயரை சூட்டி திறந்து வைக்கும் நிகழ்வும் இன்றைய தினம் இடம்பெறவுள்ளது. இதனை முன்னிட்டு இந்நூலகம் கல்முனை மாநகர சபையினால் புனரமைப்பு செய்யப்பட்டு அழகுபடுத்தப்பட்டுள்ளது. மருதமுனை பொது நூலகத்தில் அமைக்கப்படவுள்ள பிரஜைகள் வள நிலையத்தின் நிர்மாணப் பணிகள் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவிருப்பதுடன் நற்பிட்டிமுனை மணற்சேனையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பொது நூலகமும் திறந்து வைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

அதேவேளை கல்முனை மாநகர சபையின் பிரதி முதல்வ ராக நியமிக்கப்பட்டுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மூத்த துணைத் தலைவர் ஏ.எல்.அப்துல் மஜீத், கட்சியின் தலைவரான அமைச்சர் ரவூப் ஹக்கீம் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து பதவியேற்கும் நிகழ்வும் இன்று பிற்பகல் இடம்பெறவுள்ளது. இவற்றைத் தொடர்ந்து பிற்பகல் 2.30 மணியளவில் கல்முனை மாநகர சபையின் மாதாந்த சபை அமர்வும் இடம்பெறவுள்ளது. (த-10)

## மரண அறிவித்தல்



### திருமதி அன்னலக்சுமி பரஞ்சோதி

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னலக்சுமி பரஞ்சோதி 22.10.2014 புதன்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பரஞ்சோதியின் அன்பு மனைவியும், நிர்மலாதேவி (ஜேர்மனி), பாஸ்கரன் (ஜேர்மனி), கிருபாகரன் (சுவிஸ்), மாலினி (யாழ்ப்பாணம்), ஸ்ரீதரன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற வைகுந்தவாசன் சுபாசினி, புவேக்கா, சுதா, அம்பிகைபாதன் (சோதிஸ்ரோஸ்) ஆகியோரின் மாமியும், சுமித்தா, வினித்தா, அருணன், அருண்யா, நிருஜா, நளினாசினி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி), அச்சுதன் (யாழ்.இந்துக்கல்லூரி), கஜப்பிரியன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), கஜானா, மயூரிகா, யுகேஷ், அபிஜே, அபேக்கரன், ஹருணி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.10.2014) வெள்ளிக்கிழமை மு.ப 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பலாலி வீதி,
கோண்டாவில் சந்தி.
(சி17203)
(12.6)

தகவல்: மருமகன் அம்பிகைபாதன்.
077 831 2284

## கண்ணீர் அஞ்சலி



சேனாதிராசா மதனகோபி (வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர், (பிரதேச செயலகம் கோப்பாய்) அவர்களின் அன்புத் தந்தை

### கனகரத்தினம் சேனாதிராசா

அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஊழியர் நலன்புரி சங்கம்,
பிரதேச செயலகம்
வலிகாமம் கிழக்கு,
கோப்பாய்.

பிரதேச செயலரும்,
அனைத்து
உத்தியோகத்தர்களும்.

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**Personal class** தரம் 3 முதல் A/L வரையான மாணவர்களுக்கு English Class உம் Spoken with grammar, சிங்களம் கற்க விரும்புபவர்களுக்கும் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். ஏனைய பாடங்களுக்கும் ஒழுங்குசெய்து தரப்படும்.
தொ.ர்பு: சங்கிலியன் வீதி, நல்லூர். தொ.பே.: 077 836 1521

## கண்ணீர் அஞ்சலி



20.10.2014 ஆம் திகதி சிவபதமடைந்த எமது கமநல சேவை நிலைய குழு உறுப்பினர்

### சிதம்பரநாதர் திருச்சிற்றம்பலம்

(தொழிநுட்ப உத்தியோகத்தர்)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பெரும்பாக உத்தியோகத்தர், உத்தியோகத்தர்கள்,
கமநல சேவைகள் சமூகம்,
சண்டிலிப்பாய், காரைநகர்.
(53452) 10)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்
22.09.1932

விண்ணில்
24.09.2014



அமரர் திருமதி
### செல்லம்மா கனகரட்ணம்

நிழல் இன்றித் தவிக்கின்றோம்
நிழலாக வருவாயா?

இன்று (24.10.2014) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டிநிற்கின்றோம்.

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டபோது 16ஆம் மற்றும் 2ஆம் இலக்க விடுதிகளில் அன்புடன் சேவையாற்றிய வைத்தியர்கள் தாதியர்கள் ஊழியர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம்.

கண்டுவில் லேன், முதலாம் ஒழுங்கை,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கந்தையா நாகேந்திரபிள்ளை

*(இளைப்பாறிய மண்வள ஆய்வாளர், நீர்ப்பாசனத் திணைக்களம்)*




வேலணையைச் சேர்ந்தவரும் கொட்டடியைப் பிறப்பிடமாகவும் இல.541/3, கோல்ட் றோட் வெள்ளவத்தை கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நாகேந்திரபிள்ளை 22.10.2014 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-சௌந்தரநாயகி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும், சுருவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற பூபாலசிங்கம் மற்றும் லீலாவதி தம்பதியரின் மருமகனும், சூரியகுமாரியின் அன்புக் கணவரும், உதயசங்கர் (Networking Engineer, லண்டன்) அமிலா (அமெரிக்கா), வாமினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிந்துஜாவின் அன்பு மாமனாரும், சண்முகபவானந்தனின் (லண்டன்) அருமைச் சகோதரனும், அசோகன் (சுவிஸ்), சந்திரகுமாரி (கனடா), யசோதரன் (ஜேர்மனி), சுகந்தன் (கனடா), ரமணன் (கனடா), குமணன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் கல்யாணசுந்தரம், ஜெயந்தா தம்பதியரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 26.10.2014 ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பி.ப. 2.00 மணியள வில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பி.ப. 4.00 மணியளவில் கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சூரியகுமாரி நாகேந்திரபிள்ளை
(மனைவி)
(53451) (7.6.3) 011 236 0485, 077 725 0898



## மரண அறிவித்தல்

# மடுத்தீன்பிள்ளை வலோரியாம்பிள்ளை

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டை கூழாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட மடுத்தீன்பிள்ளை வலோரியாம்பிள்ளை நேற்று (23.10.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிசிலியம்மாவின் அன்புக் கணவரும் தங்கராணி, செல்வராணி, செல்லக்கிளி, தயா, ஜெயா, ஜீவா, கிருபா, றெஜினா ஆகியோரின் அன்புத் தந்தையும் தேவகுமார், துரை, அருள்தாஸ், பற்றிசியா, கலா, விஜயா, சோனியா, அருட்செல்வன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் முத்து, காலஞ்சென்றவர்களான அருமைத் துரை, மகிழம்மா மற்றும் ராசதுரை, ராசாத்தி, தங்கராசா, தங்கமணி, அதிரியாம்பிள்ளை ஆகியோரின் சகோதரரும் சாளினி, சாமினி, யூஜினி, அருண், அருண்சிகா, அஸ்வினி, அபிசேக், கௌசி, பிறின்சி, ஜென்சி, ஜெனோசன், ஜெனிசியா, ஜெரிசன், நிரோஜன், அஸ்வின், ஜெரிசா, ஜெபிசன், கவிசா, லோசன், றஜீவினி ஆகியோரின் பாசமிகு பேரனும் வர்சாவின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் 27.10.2014 திங்கட்கிழமை பி.ப 2.00மணியளவில் ஆனைக்கோட்டை கூழாவடியில் உள்ள அவரது இல்லத்திலிருந்து நல்லடக்க ஆராதனைகளுக்காக மானிப்பாய் புனித அன்னாள் ஆலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு இரங்கல் திருப்பலியின் பின் நல்லடக்கத்திற்காக காக்கைதீவு சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கூழாவடி,
ஆனைக்கோட்டை

தகவல்: :
குடும்பத்தினர்.

## தொடர்ச்சிகள்

### ஆவா

னிலையில் இந்த வழக்கின் பிணை விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டுப் பிணை வழங்கப்பட்டது.

கடந்த ஜனவரி கைது செய்யப்பட்ட ஆவா என்பவர் ஜனவரி 8 ஆம் திகதி தொடக்கம் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். அவர் உள்ளிட்ட குழுவிடமிருந்து 12 வாள்கள், மோட்டார் சைக்கிள்கள், முள்ளினாலான இரும்புக் கம்பிகள், கைக்குண்டுகள் என்பனவற்றை பொலிஸார் மீட்டிருந்தனர். அவர் உள்ளிட்ட சிலர் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து மேலும் சிலர் கைது செய்யப்பட்டு மொத்தமாக 12 பேருக்கு எதிராக 3 வழக்குகள் யாழ்.நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த வழக்கின்படி அவர்கள் அனைவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுப் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர். தீங்கு விளைவிக்கும் ஆயுதங்களான இரண்டுகைக்குண்டுகள்மற்றும் வாள்கள் வைத்திருந்ததாக ஆவா என்பவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அதனால் அவர் யாழ்.நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்படாதிருந் தார்.

இணுவில் மேற்குகண்ணகிஅம்மன் கோயிலடியைச் சேர்ந்த குமரேசரத்தினம் வினோதன் என்பவருக்கே கைக்குண்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. பிணை விண்ணப்பத்தைப் பரிசீலித்த நீதிமன்று கடுமையான நிபந்தனையுடன் பிணையில் விடுவித்தது.

அதன்படி அவர் 50 ஆயிரம் ரூபா ரொக்கப்பிணையிலும், தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான மூன்று ஆள்பிணையிலும் விடுவிக்கப்பட்டார். அவர் கோப்பாய் பொலிஸ் பிரிவினுள் வசிக்கவோ, தங்கியிருக்கவோ, நடமாடவோ, காணப்படவோ கூடாது. அது தொடர்பாகப் பொலிஸாருக்கும் குறித்த பிரதேச செயலர் ஊடாக கிராம அலுவலர்களுக்கும் அறிவிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. தவிர ஆவா என்பவர் ஏற்கனவே பிணையில் விடுவிக்கப்பட்ட - நீதிவான் நீதிமன்றில் உள்ள 3 வழக்குகளில் தொடர்புபட்டுள்ளவர்களுடன் தொடர்புகளைப் பேணக்கூடாது என்றும் அவர்களுடன் செயற்படக்கூடாது என்றும் உத்தரவிட்டுள்ளது.

குறித்த நபர் சாட்சிகளுக்கு, அல்லது அவர்களுடன் தொடர்புடையவர்களுக்குஎதுவித பிரச்சினைகளையும் ஏற்படுத்தக்கூடாது என்றும் தினமும் முற்பகல் 9 மணிக்கும்பிற்பகல்4 மணிக்கும் இடையில் யாழ்.நீதிமன்றில் ஒப்பமிடவேண்டும் என்றும் நீதிமன்ற அனுமதியின்றி இலங்கையைவிட்டு வெளியேறக்கூடாது என்றும் நிபந்தனை விதித்தது.

(த-4)

### அத்துமீறும்

தண்டனை வழங்க முடியும். இதன் ஊடாக இந்திய மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும், என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த வருடத்தில் யாழ். மாவட்டக் கடற்பரப்பில் மாத்திரம் பல்வேறு சந்தர்ப்பங்களில் 420 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். இவர்கள் நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டு பின்னர் மேலிடத்து உத்தரவுக்கமைய 400 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இன்னும் 20 பேர் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ள போதிலும், அவர்களுடைய படகுகள் நீதிமன்றங்களினால் இன்னும் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

### 9 பிரதேச

பகுதியை வாழ்வாதாரத்துக்கே வழங்கியுள்ளது. வழங்கப்பட்ட சுற்றறிக்கைக்கு மாறாகவே யாழ்.மாவட்டத்தில் கிராமத்துக்கு ஒரு மில்லியன் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, எஞ்சிய நிதி தொடர்ந்தும் கிடைக்கப் பெறும் என்றும், இந்த ஆண்டு கிடைக்கப் பெறாவிட்டால் அடுத்த ஆண்டுஅந்தநிதிகிடைக்கும்என்றும் அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் குறிப்பிட்டார்.

(த-5)

### ஐ.நாவுக்கு

கள் பற்றிப் பேசுவது, அந்த விசாரணையின் தரத்தைக் கீழிறக்கச் செய்து விடும். எனவே இதில் நாம் தெளிவாக இருக்க வேண்டும். விசாரணை இலங்கையில் நடந்த சகல சர்வதேச குற்றங்களையும் விசாரிக்கின்றது.

இனப் படுகொலையும் ஓர் சர்வதேசக் குற்றமே. நாம் அதைப் பற்றி மாத்திரம் விசாரிக்குமாறு, விசாரணை நடந்து கொண்டிருக்கும்போது கோர முடியாது. இனப் படுகொலை, துன்புறுத்தல் என்று பல்வேறு விடயங்கள் சர்வதேசக் குற்றங்களாக உள்ளன. சர்வதேசக் குற்றங்களில் தரவேறுபாடு இல்லை. எல்லாமே குற்றம் என்ற ரீதியில் மாத்திரம் நோக்கப்படும். அதில் அளவு வேறுபாடு இல்லை.

அதேபோன்று இந்தக் குற்றங்களுக்கான பாதுகாப்பு என்பதும் அளவு வேறுபாடு உடையது அல்ல. இனப் படுகொலை நடந்தது என்றாலும், துன்புறுத்தல்கள் நடந்தது என்றாலும் அதனூடான பாதுகாப்பு ஒன்றே.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இங்கு நடந்ததை இனப்படுகொலை என்று சொல்கின்றது. ஆனாலும், அதனைச் சொல்வதற்கான தருணம் இதுவல்ல. கிளிநொச்சியில் வைத்து ஜனாதிபதி காணிகளை வழங்கியிருந்தார். அந்த மக்களுக்கு காணி வழங்கப்பட்டமையை நாம் வரவேற்கின்றோம். வலி. வடக்கில் 30 ஆயிரம் மக்களை அவர்களது மண்ணிலிருந்து வெளியேற்றி ஏதிலிகளாக்கி விட்டு, 20 ஆயிரம் பேருக்குக் காணிகொடுப்பதில் பலனில்லை. மேலும் காணி அதிகாரம் என்பது மாகாண சபைக்குரியது. ஜனாதிபதியினால் வழங்கப்பட்ட காணிகள் எவையும், மாகாண சபையின் அனுமதியுடன் வழங்கப்படவில்லை. இது சட்டத்துக்கு முரணான செயல் என்று குறிப்பிட்டார். (த-5)

### பாடசாலையின்

யாக்கப்பட்டது. இவ்வாறு தொடர்ச்சியாகத் திட்டமிட்டு எமது பாடசாலையை இனம்தெரியாதோர் தாக்கி வருகின்றனர். எமது பாடசாலைக்கு உரிய பொலிஸ் பாதுகாப்பும், பாதுகாப்பான வேலியும் அமைக்கவேண்டிய தேவையுள்ளது என்று அதிபர் கூறினார். (த-402)

### புறாக்கள்

துள்ளது. நாய் குரைத்ததையடுத்து வெளியே சென்ற வீட்டுக்காரர் புறாக் கூட்டின் அருகே புறாக்களைப் பிடித்து வைத்துக் கொண்டிருந்த திருடனைக் கையும் மெய்யுமாகப் பிடித்தனர்.

அது தொடர்பில் நெல்லியடிப் பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து அவனைப் பொலிஸார் கைதுசெய்துசென்றனர். அவனை நீதிமன்றில் முற்படுத்தியபோதே அவனுக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-4)

### கிளிநொச்சி

சென்ற தந்தையும் அவரது இரண்டரை வயது மகனுமே காயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டனர். எனினும் அவரது மகன் உயிரிழந்து விட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. இந்த விபத்தில் வட்டக்கச்சியைச் சேர்ந்த ஜீவானந்தன் கம்சன் என்ற இரண்டரை வயதுப் பாலகனே உயிரிழந்தார். விசாரணைகளைக் கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டுள்ள னர்.

(த)

### புலிகள்

போன்று இன்னும் பல புலித் தலைவர்களை பிரித்தெடுத்தார். புலிகளின் படை கிழக்கில்தான் இருந்தது. அதனால் கருணா அம்மானை பிரித்ததன் மூலம் பிரபாகரனை பலவீனமாக்கினார். இதனால் ரணிலைப் பார்த்து புலிகள் அச்சமடைந்தனர். இந்த வேளையில்தான் மங்கள சமரவீர, ஸ்ரீபதி சூரியாராச்சி, டிரான் அலஸ் போன்றவர்களை புலிகளிடம் அனுப்பி 300கோடிரூபாபணம்கொடுத்து ரணிலைத் தோற்கடிக்குமாறு மஹிந்த ராஜபக்ஷ புலிகளின் உதவியை நாடினார். புலிகளும் ரணில் குள்ளநரியெனக் கூறி தோற்கடித்தனர். எனவே, புலிகளோடு கூட்டுவைத்தவர்கள் ஐ.தே.கவினர் அல்லர். இன்று ஆட்சியில் உள்ளவர்கள்தான் - என்றார்.

### 2015 பட்ஜெட்

பக்ஷ இம்முறை வரவு-செலவுத் திட்டத்தின் தொனிப்பொருளானது 'தடுத்து நிறுத்த முடியாத இலங்கை' என அமையும் என்று நேற்றைய தினம் தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்திருந்தார்.

இம்முறை வரவுசெல வுத்திட்டமானது நாட்டின தும் மக்களதும் தர நிலையை உயர்த்துகின்ற பல்வேறு யோசனைகளைத் தாங்கியதாக அமையும் எனவும் தேர் தலை நோக்காகக் கொண்டதாக வரவுசெலவுத்திட்டம் அமையமாட்டா தெனவும் ஜனாதிபதியை மேற்கோள் காட்டி கடந்த ஞாயிறன்று அரச ஊடகங்கள் செய்திவெளியிட்டிருந்தன.

நடப்பாண்டில் உள்ள 7.8 சதவீதத் திலிருந்து 2015ஆம் ஆண்டில் பொருளாதர வளர்ச்சி 8.2 சதவீதமாக அமையும் என ராஜபக்ஷ எதிர்பார்ப்பு வெளியிட்டுள்ளதுடன் நடப்பாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5.2வீதமாகவுள்ள வரவுசெலவுத் திட்ட இடைவெளியை அடுத்தாண்டில் 4.4 சதவீதமாக குறைக் கும் எதிர்பாப்பையும் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மக்கள் மத்தியிலான தமது செல்வாக்கை அதிகரிக்கும் முனைப்புடன் இம்முறை வரவுசெலவுத்திட்டத்தில் பெருமெடுப்பி லான உட்கட்டமைப்புத் திட்டங்களுக்கு தனது அர்ப்பணிப்பை மீள வெளிப்படுத்துவதுடன் அரச துறையினருக்கான சம்பள அதிகரிப்பு விவசாயிகளுக்'கான குறைந்த வட்டியிலான கடன்கள் இராணுவத்தினரின் விசுவாசத்தை உறுதிப்படுத்துவதற்காக பாதுகாப்புச்செலவில் அதிகரிப்பு ஆகியவற்றை ஜனாதிபதி வெளிப்படுத்துவார் என ஈரோஏசியா குழுமத்தைச் சேர்ந்த ஆய்வாளரான சாஸா ரைஸர் கொஸிற்ஸ்கி எதிர்பார்ப்பு வெளியிட்டுள்ளார்.

தனது மீள தேர்தல் பிரசாரத்திற்கு உதவும் வகையில் இம்முறை வரவுசெலவுத்திட்டத்தில் மக்களைக் கவரும் வகையிலான முன்முயற்சிகளை ஜனாதிபதி மேற்கொள்வார் எனச்சுட்டிக்காட்டும் கொஸிற்ஸ்கி புதிய கட்ட செலவீனங்கள் குறித்த எதிர்பார்ப்புக்களுக்கு மத்தியிலும் வரவுசெலவுத்திட்ட துண்டு விழும்தொகையை 4.4 சதவீதம் என்ற வரையறைக்குள் வைத்திருக்க அரசு தொடர்ந்தும் உறுதிப்பாட்டை வெளிப்படுத்தியிருப்பதானது உடனடியாக புதிய கட்ட அறிவிப்புக்கள் நடை முறைப்படுத் தப்படமாட்டாதென்பதைக் கோடிட்டுக்காட்டுவதாக தெரிவித்தார். (ற-சி)

### அரசுக்கு

ரது பெயரை ஒரு நாளைக்கு நூறுமுறை உச்சரித்துக் கொண்டிருக்கின்றனர்."- இவ்வாறு தெரிவித்தார் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன்.

அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கத்தின் ஊடக மாநாடு கொழும்பில்நேற்றுஇடம்பெற்றது. அதில் கருத்துத் தெரிவிக்கும் போதே மனோகணேசன் இவ்வாறு தெரிவித்தார்.

"நானும், தமிழீழ விடுதலைப் புலிகளின்தலைவர்பிரபாகரனும், கிளிநொச்சி நீச்சல் தடாகத்தில் நீச்சலடித்து குளித்தோம், என்று 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்திருந்தார். இதற்கு ஆதாரமான அடர்தகடு (சீடி) தன்னிடம் இருக்கின்றது என்றும் அவர்தெரிவித் தார். இதனை காண்பிக்குமாறு நான் கோரினேன். இதுவரை அவர் காண்பிக்கவில்லை. இப்போதாவது அதனைக் காட்டுமாறு கேட்கின்றேன்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் நீதிமன்ற இடைக்கால தீர்ப்பு ஒன்று வழங்கப்பட்டுள்ளது. அதில் புலிகளின் மீதான தடை நீக்கப்படவில்லை 28நாடுகளை கொண்ட இந்த ஒன்றிய உறுப்பு நாடுகளை புலித்தடை தொடர்பாக ஆவணங்களை முன்வைக்கும்படி நீதிமன்றம் கோரியுள்ளது. இதைவைத்துக் கொண்டுதான் இவர்கள் இங்கே இப்போது அரசியல் செய்கிறார்கள். இந்த தீர்ப்புக்கும், எதிர்கட்சிகளுக் கும், ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தொடர்பு இருப்பதாக கூறுகிறார்கள். இப்படி பொய்களை உருவாக்கி சொல்லும் குழுவின் தலைவர்தான் விமல் வீரவன்ஸ.

இதற்கு ஒரு காரணம் உள்ளது. இந்த தேர்தலில் மக்கள் முன்னால் சென்று, நல்லாட்சியைப் பற்றியோ, மனித உரிமைகளைப் பற்றியோ, ஊடக சுதந்திரத்தைப் பற்றியோ, ஊழல் ஒழிப்புப் பற்றியோ பேச முடியாது. இவர்களிடம் எஞ்சி இருப்பதெல்லாம், புனையப்பட்ட புலிக்கதைகள் மாத்திரமே.

ஆகவேதான், இன்று இந்த அரசுக்கு மிகவும் வேண்டப்பட்டவராக, புலிகளின் தலைவர் பிரபாகரன் மாறியுள்ளார் என்று கூறுகிறேன். ஆனால், இந்த முறை இந்த புலி பருப்பு வேகாது" - என்று அவர் மேலும் அங்கு தெரிவித்தார்.

(ற-5)

### அபிவிருத்தி

தேசகிறிஸ்தவ அமைப்பிடம் இங்குள்ள சமய மற்றும் சிவில் சமூகத்தினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த மத குருமார்களை உள்ளடக்கிய சமயக் குழுவினர் யாழ்ப்பாணத்துக்கு நேற்றைய தினம் வந்திருந்தனர். இந்தக் குழுவினர், நல்லை ஆதீன குரு முதல்வர் மற்றும் சைத்தன்ய சுவாமிகளையும், சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான குழுவின் செயலாளர் பரமநாதனையும் அவர்கள் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர். இந்தச் சந்திப்பிலேயே மேற்படி விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

"வடபகுதி மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பி சுயதொழிலை மேற்கொள்ளவே விரும்புகின்றார்கள். அத்துடன் வலி. வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள இந்து ஆலயங்கள் எவ்வித பூஜை வழிபாடுகளுமின்றி பரிதாபமான நிலையில் காணப்படுகின்றன. அதற்கு ஒரு ஆக்கபூர்வமான தீர்வுகள் வழங்கப்பட வேண்டும்.

மக்கள் மனங்களை கட்டியெழுப்பக் கூடிய விதத்திலே உளவளீதியான ஆலோசனைகள், மக்களுடைய மனங்களை மகிழ்சிப்படுத்தக் கூடிய நிகழ்வுகளை நாங்கள் அனைவரும் எல்லாப் பேதங்களையும் கடந்து செய்ய வேண்டியவர்களாக இருக்கின்றோம். வெளிவசதிகள் இங்கே ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருந்தாலும், மனம் என்று சொல்லக் கூடிய அக உலக வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு உலகின் அனைத்துப் பெரியவர்களும் முயற்சிக்க வேண்டும்.

வேலைவாய்ப்பற்ற இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பை பெற்றுக் கொடுக்கக்கூடிய திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். வடக்கு மாகாணத்தில் சிவில் நிர்வாகம் நடக்குமானால் மக்கள் சுதந்திரமாக செயற்படு வார்கள்"- என்று அந்தச் சந்திப்பின்போது மேலும் சுட்டிக்காட்டப்பட்டுளது (ற-5,101)

### நீக்கப்பட்ட

கேள்வி நேரத்தின்போது, ஐரோப்பிய நீதிமன்றத்தின் தீர்ப்புக்கமைய அங்கு புலித்தடை நீக்கப்படுமானால் அது இலங்கை யின் தேசியப் பாதுகாப்பில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"புலித்தடை நீக்கத்துக்கு எதிராக வெளிவிவகார அமைச்சு இராஜதந்திர மட்டத்திலான நடவடிக்கையில் இறங்கியுள்ளது. இந்த தடை நீக்கத்தைப் பயன்படுத்தி நிதிதிரட்டல் உள்ளிட்ட நடவடிக்கையில் ஈடுபட்டு தம்மை பலப்படுத்திக் கொள்வதற்கு புலி செயற்பாட்டாளர்கள் முயற்சித்தால், அது இலங்கைக்கு ஏதோ ஒரு விதத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும். எனவே, இது குறித்து விழிப்பாகவே இருக்கின்றோம்.

இலங்கையில் அறநெறிவகுப்புகள் நடைபெறுவது போல், ஐரோப்பாவில் புலி செயற்பாட்டாளர்கள், தமிழ் சோலை என்ற பெயரில் பாடசாலைகளை நடத்தி வருகின்றனர். அங்கு செல்லும் சிறார்களுக்கு, ஆயுதம் தாங்கிய படங்கள் காண்பிக்கப்படுகின்றன. இவ்வாறு பல செயற்பாடுகளில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

எனவே, ஆழமாக சிந்திக்க வேண்டியுள்ளது. மூன்றுமாத கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதால் இது குறித்தும் நாம் உன்னிப்பாக அவதானித்துவருகி ன்றோம்"- என்று அவர் அங்குமேலும்தெரிவித்தார்.(ற-5)

### யார்

பாடும். இருப்பினும், எம்மைச் சந்திக்கும்அரசியல்தரப்புக்களிடம் நாம் எமது தரப்பு நியாயத்தை தெளிவாகக் கூறுகின்றோம்.

தமிழ் மக்களுக்கு வாழ்வாதாரப் பிரச்சினை, மீள்குடியமர்வு பிரச்சினை, அரசியலுரிமைப் பிரச்சினை இருக்கின்றது. முதலில் எமது மக்களின் பிரச்சினைகளை அறிந்து கொள்ளுங் கள். அதற்கு உங்களுடைய தீர்வு என்ன என்பதைச் சொல்லுங்கள். அதன் பின்னர் எமது முடிவைச் சொல்லுகி ன்றோம். தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வை வெளிப்படுத்திய பின்னரே நாம் எமது நிலைப்பாட்டை வெளிப்படுத்து வோம்"- என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.(ற-5)

### பொறாமை

பொறாமைக் குணம் கொண்டவர்களின் போலிக் குற்றச்சாட்டு என்று தெரிவித்துள்ளார்.

தீபாவளிவாழ்த்து அட்டை வழங்குவதைச் சாக்காக வைத்துக் கொண்டுகுடும்பவிவரங்களைத் திரட்டும் நடவடிக்கையில் யாழ்.மாவட்டத்திலுள்ள இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர். இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய் மற்றும் புதன் கிழமை குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்றிருந்தது. இது தொடர்பில், கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்குப் பதிலளித்த இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய,

"இதனை நாம் முற்றாக நிராகரிக்கின்றோம். நல்லிணக்க முயற்சியாகவே நாம் தீபாவளி வாழ்த்து அட்டைகளை வழ[illegible]னோம். வடக்கில் ஒரு லட்சத்து 68 ஆயிரம் தீபாவளி வாழ்த்து மடல்கள் எம்மால் பகிரப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. பொறாமைக் குணம் கொண்டவர்கள் இது தொடர்பில் போலிக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர். எமக்கு குடும்பப் பதிவு தகவல்கள் தேவையாயின் அதனை பிரதேச செயலகங்களில் பெற்றுக் கொள்ள முடியும். அப்படியிருக்கையில் நாம் ஏன் பதிவு நடவடிக்கைகளில் ஈடுபடப் போகின்றோம்" என்றும் அவர் கேள்வியெழுப்பினார். (ற-5)

### புலித் தடை

திரத்தையும், எரிந்து கொண்டிருந்த தேசத்திலிருந்து காப்பாற்றப்பட்ட தாய் மண்ணையும் மீண்டும் காட்டிக்கொடுக்க முடியாது என்பதை சர்வதேசத்திற்கு கூறுவதற்காக இந்த மக்கள் செயற்படுகின்றனர். இந்த தாய் மண்ணுக்கு சுதந்திரம் கிடைத்து, அதனை அனுபவிக்கின்ற இந்த சந்தர்ப்பத்தில் எமது பிள்ளைகளுக்காக கட்டியெழுப்பபடுகின்ற இந்த நாட்டை, ஆரோக்கியமான வளமான சந்ததியினரை உருவாக்குகின்ற இந்த நாட்டை சீரழிக்க எவருக்கும் இடமளிக்க முடியாது."- என்று தெரிவித்துள்ளார்.

(ற)

# இ.போ.சவுக்கு புதிதாக ஆயிரம் சாரதிகள்

கொழும்பு, ஒக்.24

இலங்கை போக்குவரத்துச் சபைக்கு ஆயிரம் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர் என்று இலங்கை போக்குவரத்துச் சபையின் உப தலைவர் எம்.ஏ.விமலரத்ன தெரிவித்துள்ளார்.

சிங்கள மொழிமூல ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"கொழும்பு கம்பஹா மற்றும் களுத்துறைப் பிரதேசங்களுக்கு உரிய டிப்போக்களில் நிலவும் பதவி வெற்றிடங்கள் தொடர்பாக சேர்த்துக்கொள்ளப்படவுள்ள சாரதிகள் நடத்துநர்கள் தொடர்பாக அந்தந்த மாவட்டங்களில் நிரந்தரமாக வசிப்போரிடமிருந்து அடுத்த மாதம் 14 ஆம் திகதி வரையில் விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளன.

இலங்கைப் போக்குவரத்து சபைக்கு புதிதாகப் பெற்றுக் கொள்ளப்படவுள்ள பஸ்களில் பணியாற்றுவதற்காக இச் சாரதிகளும் நடத்துநர்களும் தெரிவு செய்யப்படவுள்ளனர். இந்தியாவில் இருந்து தருவிக்கப்படவுள்ள 2 ஆயிரத்து 200 பஸ்களில் 737 பஸ்கள் மட்டுமே தற்போது இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. அவற்றுள் 591 பஸ்கள் ஏற்கனவே போக்கு வரத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன"- என்று அவர் தெரிவித்துள்ளார். (ற-22)





கேதாரகௌரி விரதத்தின் இறுதிநாளான நேற்று வியாழக்கிழமை வரலாற்றுச் சிறப்புமிக்க திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் விசேட பூசைகள் இடம்பெற்றன. ஆயிரக்கணக்கான பக்தர்கள் வழிபாட்டில் கலந்துகொண்டு காப்புக்கட்டுவதில் ஈடுபட்டனர். (வ-40)

## பாம்புகளால் இருவர் கடியுண்டனர்

தொடர் மழையால் இருவர் பாம்புகளினால் கடியுண்டனர். நேற்றுமுன்தினம் இரவு வீட் டுக்கு வெளியே சென்ற குடும்பப் பெண்ணும் நேற்று கூடலாக காணப்பட்ட பூக் கன்றுகளை அப்புறப்படுத்தும் பணியில் ஈடுபட்ட இளைஞரே பாம்புகளால் கடியுண்ட வர்களாவர்.

மீசாலை வடக்கைச் சேர்ந்த ஏகாம்பரமூர்த்தி சிவபாக்கியம் (வயது-54) மிருசுவில் தவசி குளத்தைக் கந்தசாமி சிவனருள் (வயது-20) ஆகிய இருவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிவபாக்கியம் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (வ-9)

## சப்ரகமுவ பல்கலை மீள் திறப்பு குறித்து இன்று கலந்துரையாடல்

கொழும்பு, ஒக்.24

சப்ரகமுவ பல்கலைக் கழகத்தை மீளத் திறப்பது குறித்த கலந்துரையாடல் ஒன்று இன்று இடம்பெற வுள்ளது. அரசின் உயர் கல்விக் கொள்கைகள் மற்றும் பல்கலைக் கழக மாணவர் களுக்கான வசதிகளை ஏற்படுத்துவதில் காட்டும் அசிரத்தை போன்றவற்றைக் கண்டித்து சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டம் நடத்தி வந்தனர்.

இந்தநிலையில் மாணவர்களின் தங்குவிடுதியைத் திறந்து வைப்பதற்காக அங்கு சென்றிருந்த அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கவுக்கும், மாணவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலையை அடுத்து பல்கலைக்கழகம் மறுஅறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது.

மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக நிர்வாகத்துக்கிடையில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலையைத் தளர்த்துவதற்கு பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கம் தொடர்ச்சியான முயற்சிகளை மேற்கொண்டிருந்தது. இதன் பிரதிபலனாக நாளை பல்லைக்கழக நிர்வாகம் மற்றும் மாணவர்களின் பெற்றோர்களுக்கிடையிலான கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன்போது பல்கலைக்கழகத்தை மீளத் திறப்பது குறித்து தீர்மானிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)

### குற்றங்களும் கைதுகளும்

## நிலக்கடலைத் திருடனுக்கு சிறைதண்டனை

முள்ளியவளை

முள்ளியவளை, நாகதம்பிரான் கோயிலில் கடந்த 2012 பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி, பெருந்தொகையான நிலக்கடலையை திருடியதாக சந்தேக நபர் ஒருவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டு முள்ளியவளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபர் பிணையில் விடுதலை செய்யப்பட்ட நிலையில், அது தொடர்பான வழக்கு விசாரணைகள் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் நடைபெற்று வந்தன.

அவர், தன்மீதான குற்றச்சாட்டை மறுத்து வந்த நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தனது குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளார். அதனையடுத்தே அவருக்கு 6 மாத கால கடூழிய சிறைத் தண்டனை விதித்து முல் லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதவான் மாணிக்கவாசகர் கணேசராஜா தீர்ப்பளித்தார். (வ)

## அபகமுவ பிரதேசசபை உப தலைவர் மறியலில்

ஹற்றன்

கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரைத் தாக்கிய குற்றச்சாட்டில் அபகமுவ பிரதேச சபை உபதலைவரின் ஆதரவாளர் ஒருவர் கடந்த 18 ஆம் திகதி கைதுசெய்யப்பட்டார். அதுதொடர்பில் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று எதிர்ப்புத் தெரிவித்ததாக, பிரதேசசபை உப தலைவர் மீது குற்றம்சாட்டப்பட்டது.

சம்பவம் தொடர்பில் நேற்று முன்தினம் பிரதேச சபை உபதலைவர் ருஷான் ரணசிங்க மற்றுமொரு சந்தேகநபருடன் மஸ்கெலிய பொலிஸில் சென்று சரணடைந்தார். அவரை பொலிஸார் ஹற்றன் மேல் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தியபோது அவரை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் எஸ்.ராமமூர்த்தி உத்தரவு பிறப்பித்துள்ளார். (வ)

## சைக்கிள் திருடன் அகப்பட்டான்



கிளிநொச்சி

தருமபுரத்தில் கடந்த சனிக்கிழமை சைக் கிளொன்றைத் திருடிய குற்றச்சாட்டில் சந்தேக நபர் ஒருவர் பொலி ஸாரால் கைது செய்யப்பட்டார். குறித்த நபர் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தில் கடந்த திங்கட்கிழமை முன்னிலைப்படுத்தப் பட்டபோது எதிர்வரும் நவம்பர் மாதம் 3 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (வ-18)

## அரவிந்த டி சில்வா வீட்டுக் கொள்ளை சம்பவம் குறித்து விசாரணை ஆரம்பம்



கொழும்பு

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் சிரேஷ்ட வீரர் அரவிந்த டி சில்வாவின் வீட்டில் கொள்ளையிடப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

மனைவி சகிதம் வெளிநாடு சென்று திரும்பி வந்து பார்த்தபோது, கொள்ளுப்பிட்டி – தேர்ஸ்டன் வீதியிலுள்ள தமது வீட்டில் இருந்த பெருந் தொகையான பணம் கொள்ளையிடப்பட்டிருந்ததாக பொலிஸில் அவர் முறைப்பாடு செய்துள்ளார். சுமார் 51 இலட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு நாணயங்களே இவ்வாறு கொள்ளையிடப்பட்டுள்ளன.

இது தொடர்பாக கொள்ளுப்பிட்டி பொலிஸார் விசாரணைகளை ஆரம் பித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரி வித்துள்ளது. (வ)

## கல்கிசையில் சடலம் மீட்பு

கொழும்பு

கல்கிஸை, அத்திட்டிய பேக்கரிச் சந்திப் பகுதியில் இருந்து சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மரக்கறிக் கடை உரிமையாளர் ஒருவரே கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலி ஸார் மேலும் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (வ)

## சார்ஜாவுக்கு கடத்தப்படவிருந்த வெளிநாட்டுப் பணம் கைப்பற்றல்

கொழும்பு

இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக எடுத்துச்செல்லப்படவிருந்த 60 இலட்சத்துக்கும் அதிகமான வெளிநாட்டுப் பணம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துச் சுங்கப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதில் அமெரிக்க டொலர், யூரோ மற்றும் இலங்கை ரூபா என்பன காணப்பட்டதாக சுங்கப் பேச்சாளர் லெஸ்லி காமினி குறிப்பிட்டார். இவ்வாறு கைப்பற்றப்பட்ட பணம் அரசுடமையாக்கப் பட்டுள்ளதாக அவர் கூறினார். கட்டுநாயக்காவிலிருந்து சார்ஜாவுக்கு பயணிக்கவிருந்த ஒருவரிடம் இருந்தே, இந்தப் பணம் கைப்பற்றப்பட்டதாக சுங்கப் பேச்சாளர் தெரிவித்தார்.

சுங்கப் பிரிவினரின் விசாரணைகளைத் தொடர்ந்து, சந்தேக நபருக்கு இரண்டு லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதாகவும் லெஸ்லி காமினி மேலும் கூறினார். (வ)

## மகனுக்காக வெட்டு வாங்கினார் தந்தை

வலி. வடக்கு, ஒக் .24

தமது மகனைத் தாக்க முயன்றவர்களைத் தடுக்கச் சென்ற தந்தை வாள் வெட்டுக்கு உள்ளாகி படுகாயமுற்ற நிலையில் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு 9 மணியளவில் கந்தரோடை யில் இடம் பெற்றுள்ளது.

தீபாவளித் திருநாளான புதன்கிழமை பகல் இரு இளைஞர் குழுக்களுக்கு இடையே உடுவில் பகுதியில் மோதல் இடம் பெற்றுள்ளது. இதன்தொடர்ச்சியாக இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த நால்வர் குறித்த இளைஞனை வாளால் வெட்டுவதற்கு முயன்ற வேளையில் அதனைத் தடுக்க முயன்ற இளைஞனின் தந்தையை வெட்டிப் படுகாயப்படுத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

கழுத்திலும் கையிலும் வெட்டுக்காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் கந்தரோடையைச் சேர்ந்த தேவராசா முரளிதரன் (வயது–39) என்பவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ–86)

## நாவற்குடா கொள்ளையின் சந்தேகநபர் கைது

மட்டக்களப்பு

மட்டக்களப்பு, நாவற்குடா பகுதி வீடொன்றில் தங்க ஆபரணங்கள் உட்பட பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையிடப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். சுமார் இருபது இலட்சம் ரூபாவுக்கும் கூடிய பெறுமதியுடைய தங்க ஆபரணங்கள், ரொக்கம் மற்றும் மின் உபகரணங்கள் போன்ற பொருள்களையும் சந்தேகநபரிடமிருந்து மீட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர். சந்தேகநபர் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளதுடன், கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய மற்றுமொரு சந்தேகநபரை கைதுசெய்வதற்கான நடவடிக்கைகளை மட்டக்களப்பு மாவட்ட குற்றப்புலனாய்வுப் பிரிவுப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். சந்தேகநபர் மட்டக்களப்பு பூம்புகார் பகுதியைச் சேர்ந்தவர் என்று ஆரம்பக் கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (வ)



சொலிஸிட்டர் ஜெனரல் யுவனஞ்சனா வனசுந்தர விஜயதிலக். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் 28ஆவது சட்டமா அதிபராக நேற்று மாலை பதவிப்பிரமாணம் செய்துகொண்டார். (த)

# வறுமையான மாணவர்களுக்கும் புலமைப்பரிசில் வழங்கவேண்டும்

*பெறுபேற்றை அடிப்படையாகக் கொள்ளாமல்*

யாழ்ப்பாணம், ஒக்.24

வறுமைக் கோட்டின் கீழ், வறுமைக்கோட்டில் அல்லது வறுமைக்கோட்டுக்குச் சற்று மேல் உள்ள குடும்பங்களிலுள்ள மாணவர்களுக்கு அவர்களின் பெறுபேறுகளைக் கருத்தில் கொள்ளாமல் புலமைப்பரிசில் வெகுமதிகளை வழங்குவதற்கான திட்டத்தை அறிமுகப்படுத்த வேண்டுமென வலியுறுத்தப் பட்டுள்ளது என்று கல்வி முறைமை மீளாய்வு மாநாட்டில் பரீட்சை தொடர்பான அவதானிப்பும் பரிந்துரைகளும் விடயத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் நம்பகத்தன்மை, தகுதி பற்றிய கற்கை ஒன்றைத் தெரிவு ஆரம்பிக்கப் பட்ட காலப் பகுதியிலிருந்து நெட்டாங்கு ரீதியாக மேற்கொள்ளல் வேண்டும். அது வரை இந்தப் பரீட்சைக்கு வழங்கப்படும் முக்கியத்துவத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.

ஜீ.சீ.ஈ சாதாரண தர, உயர் தர வகுப்புகளில் உயர்வான பெறுபேறுகளைக் கொண்டிருக்கும் பாடசாலைகளுக்கான அனுமதி, மாணவர் கற்கும் பாடசாலையை அடிப்படையாகக் கொண்டும், வலயக் கல்விப் பணிமனையால் நடத்தப்படும் கல்விசார் மதிப்பீட்டுடன் மாணவர் வளர்ச்சி சார்ந்த ஏனைய விடயங்களில் மேற்கொள்ளப் படும் மதிப்பீட்டின் அடிப்படையிலும் அமைதல் வேண்டும்.

பெற்றோரை இழந்த மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்கவேண்டும்.

மாகாண மட்டத்தில் நடத்தப்படும் தரம் 9 பரீட்சையை வலுப்படுத்தல், அதில் எழுத்துப் பரீட்சை மாத்திரமன்றி மாணவர்களின் பல்வேறு திறன்களையும் பரீட்சிக்க வேண்டும். ஆரம்பக்கல்வி, இடைநிலைக் கல்வி என்பவற்றை மாணவர்கள் எதிர்காலத்துக்கு முகம்கொடுக்கக்கூடிய வகையில் நாளாந்த வாழ்க்கைக்கும் வேலையுலகுக்கும் தம்மைத் தயார்ப்படுத்தக்கூடிய திறன்களை வழங்கக்கூடியதாக வலுப்படுத்தல் வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. (த-4)

# அமைச்சர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி தொடர்பில் ஆலோசிக்க விசேட குழு

*நிமால் சிறிபால டி சில்வா தலைமையில்*

கொழும்பு, ஒக்.24

2015ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட அமைச்சர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதித் தொகை தொடர்பில் கலந்துரையாடுவதற்கு சபை முதல்வரும் அமைச்சருமான நிமல் சிறிபால டி சில்வா தலைமையில் 20 பேர் கொண்ட நாடாளுமன்ற விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என பிரதியமைச்சர் சந்திம வீரக்கொடி நேற்று சபை யில் அறிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்று வியாழக்கிழமை ஒரு மணிக்கு கூறியது. இதன்போது சபாநாயகரின் அறிவிப்பை விடுக்கும் வேளையிலேயே பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி இதனைத் தெரிவித்தார்.

அந்த அறிவிப்பில் மேலும் தெரிவிக்கையில்,

மேற்படி குழுவில் சபாநாயகரால் பெயரிடப்பட்டவர்களின் விபரம் வருமாறு.

அமைச்சர்களான டபிள்யூ. டீ.ஜே. செனவிரட்ன, சரத் அமுனுகம, தினேஷ், அதாவுட செனவிரட்ன, மஹிந்த சமரசிங்க, பிரதியமைச்சர்களான முத்து சிவலிங்கம், லசந்த அழகிய வன்ன, நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் மைக்கல் பெரேரா, ஜோன் அமர துங்க, சுனில் ஹந்துன் நெத்தி, சுரேஷ் பிரேமச்சந்திரன், பொன்.செல்வராசா, ஆர்.யோகராஜன், ரா.அகிலவிராஜ் காரியவசம், சில்வெஸ்டர் எலன்டின், ஹர்ஷ டி சில்வா, சுதர்ஷினி பெர்னாண்டோ பிள்ளை, ஜனக பண்டார, ரோஸி சேனநாயக்க, ஹுனைஷ் பாரூக் ஆகியோர் சபாநாயகரால் பெயரிடப்பட்டுள்ளனர் என பிரதி சபாநாயகர் தெரிவித்தார். (த-சி)

# புலித் தடை நீக்கத்திற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய தயார்

*அரசு தயாரா என ஐ.தே.க. சவால்*

கொழும்பு, ஒக் 24

ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய ஐ.தே.க தயாராகவே உள்ளது. அரசு இதற்கு தயாரா என்று சவால் விடுத்த ஐ.தே.க உப தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவி கருணாநாயக்க, ஐ.தே.க. மீது பூசிய புலிச்சாயம் தற்போது அரசின் பக்கம் திரும்பியுள்ளது. அரசே பிரிட்டன் தூதர கத்தை புனரமைக்கும் பணி களைப் புலிகளுக்கு வழங் கியதாக அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் உறுதிப்படுத்தியுள்ளார் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஐ.தே.க. தலைமையகமான சிறிகொத்தாவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

தேர்தல் காலங்களில் ஐ.தே.க வின் மீது சுமத்தப்பட்டு வரும் போலியான குற்றச்சாட்டுக்கள் தற்போது பயனற்றுப் போயுள்ளது. இதற்கு ஐ.தே.கவின் மீது பூசிவந்த புலிச்சாயம் தற்போது அரசின் பக்கம் திரும்பியுள்ளது. ஐ.தே.க ஒருபோதும் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொள்ளவில்லை. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது ஆதரவு அளிக்க வேண்டிய தேவைப்பாடு ஐ.தே.கவுக்கு ஒருபோதும் கிடையாது. தேசிய தேர்தலின்போது ஐக்கிய தேசிய கட்சியின் வெற்றிக்குப் பெரும் தடையாக இருந்தது விடுதலைப் புலிகள் இயக்கமாகும். அது மாத்திரமின்றி எமது பல சிரேஷ்ட தலைவர்களைக் கொன்று குவித்தது. விடுதலைப் புலிகள் இயக்கமாகும்.

எனவே, இதற்கு மாறாக அரசே புலிகளுடன் அன்றிலிருந்து இன்று வரை ஒட்டி உறவாடி வருகின்றது. அரசு மக்களின் முன்பு போலி நாடகமாடி ஐ.தே.க வின் மீதே புலிச்சாயம் பூசுகின்றது. இதற்கமைய விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர்கள் பலர் தற்போது அரசிலேயே உள்ளனர். அவ்வாறாயின் ஐ.தே.கவின் மீது எவ்வாறு குற்றம் சுமத்த முடியும்.

ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத்தினால் விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட்டமை தொடர்பில் அரசு எவ்வித நடவடிக்கையும் இது வரை எடுக்கவில்லை.

எனவே, இது தொடர்பாக ஐ.தே.க இலங்கைச் சட்டத் தரணிகளுடன் ஆராய்ந்து வருகின்றது. இந்த தீர்ப்புக்கெதிராக வழக்கு தாக்கல் செய்ய நாம் தயார். இதற்கு அரசு தயாரா?-என்றார். (த)

**தொழில்நுட்ப உத்தியோகத்தர் (T.O) தேவை**



யாழ்ப்பாணத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஒரு இயந்திரவியல் நிறுவனத்துக்கு (எஞ்சினியரிங் சேர்விஸ்) அனுபவம் மிக்க ஒரு தொழில்நுட்ப உத்தியோகத்தர் தேவை. ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தகுதி உடையோர் உங்கள் விண்ணப்பங்களையும், சான்றிதழ்களையும் த.பெ.இல 2129, கொழும்பு என்ற முகவரிக்கு 30.10.2014 இற்கு முன்பு அனுப்பவும். ஈ.மெயில் மூலம் அனுப்ப விரும்புவோர் Jobrequirements12@gmail.com என்ற முகவரிக்கு அனுப்பவும்.

மேலதிக தொடர்புகளுக்கு:- 0714273035

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு advt@uthayan.com 0215671111

முதன் முறையாக யாழ். மண்ணில் 100 வீத விசா உறுதிப்பாட்டுடன் வெறும் 900 000/= ரூபா செலுத்தி **செங்கன் விசா**

- 2 மாதங்களில் **இத்தாலி, பிரான்ஸ், நோர்வே, சுவிஸ், ஜேர்மனி** உட்பட 26 நாடுகளில் படிக்க உழைக்க 2 வருட விசா.
- மேலதிக கட்டணங்கள் எதுவுமில்லை.
- எழுத்து மூலமான விசா உறுதிப்பாடு.

(நிபந்தனைகளுடன்)

**திசைகாட்டி பிறைவேற் லிமிட்டட்**

முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்.

இல.175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்திச் சந்தி, யாழ்ப்பாணம்.



அரசபதிவிற்கு உட்பட்டது பதிவிலக்கம்: PV 82703

021 221 9016

**அமெரிக்க லொத்தர் விசா - V2 Travels & Tours**

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற 55000 பேருக்கான வாய்ப்பு- உடனே விரையுங்கள்

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்

| கிளிநொச்சி | யாழ்ப்பாணம் | நெல்லியடி | வல்வெட்டித்துறை |
|---|---|---|---|
| 0771516537 | 0773867257 | 0776699892 | 0776697960 |

**பிரத்தியேக உத்தியோகத்தர் (P.A) தேவை**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு பிரத்தியேக உத்தியோகத்தராகக் கடமைபுரிவதற்கு ஆங்கில மொழியில் பாண்டித்தியம் பெற்ற கணினி அறிவுடைய ஓர் அனுபவம் உள்ளவர் தேவை.



குறிப்பு:-
1. யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும் கடமை புரியத் தயாராக இருத்தல் வேண்டும்.
2. தங்குமிடம் வழங்கப்படும்.
3. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தகுதி உடையோர் உங்கள் விண்ணப்பங்களையும், சான்றிதழ்களையும் த.பெ.இல 2129, கொழும்பு என்ற முகவரிக்கு 30.10.2014இற்கு முன்பு அனுப்பவும். ஈ.மெயில் மூலம் அனுப்ப விரும்புவோர் Jobrequirements12@gmail.com என்ற முகவரிக்கு அனுப்பவும்.

மேலதிக தொடர்புகளுக்கு:- 0714273035

FLC FRENCH LANGUAGE CENTRE REGISTERED FRENCH CENTRE.

**FRENCH CLASSES**

Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diplomas in French..
850 க்கும் மேற்பட்ட மாணவர்கள் French கற்றுச் சென்றுள்ளனர்...
நவீன முறையிலான கற்பித்தல்கள் Audio, Video மூலம் & A/C வகுப்பறைகள்

ஆசிரியர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)

கடந்த DELF A1,A2 Exam இல் எம் மாணவர்கள் மட்டுமே 100% சித்தி..

Note: போலி ஆசிரியர்களிடம் சென்று ஏமாறாதீர்கள்....

| ஆரம்பம்:01.11.14 Sat 8.00am. No. 40, Palaly Road, Jaffna.(ஆரியகுளம்) | ஆரம்பம்:01.11 Sat 4.30pm. No.181, 1st Floor, Main Street, நெல்லியடி | 021 320 2973 0779 789 456 |
|---|---|---|

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.10.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.